# செந்தமிழ்க் கட்டுரைகள்

(பகுதி I)

ஆசிரியர்:
தமிழாசிரியர், கரந்தைக் கவியரசு
R. வேங்கடாசலம் பிள்ளை

5 4 63

R.S. Balakrishnan I.E.S.
III u.c. (IA) .D No 903
Loyola college, Madras.

2 DEC 1986

# செந்தமிழ்க் கட்டுரைகள்

(பகுதி I)

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
2 5 DEC 1986
தஞ்சாவூர்

ஆசிரியர்:

திருவையாற்று அரசர் கல்லூரிப்
பேராசிரியரா யிருந்தவர்,
கரந்தைப் புலவர் கல்லூரியின்
பேராசிரியர், தமிழ்ப் பொழிற்
றொண்டர், கரந்தைக் கவியரசு

**R. வேங்கடாசலம் பிள்ளை**

☆

**பழனியப்பா பிரதர்ஸ்**

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

1942

பதிப்புரிமை]

[விலை ரூ. 1–12–0.

முதற் பதிப்பு – டிசம்பர் 1942

45292.

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

# முகவுரை

*வானூர்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!*
*மன்னியமூ வேந்தர்கடம் மடிவளர்ந்த மகளே!*
*தேனூர்ந்த திஞ்சுவைசால் திருமாலின் குன்றம்*
*தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி!*
*காணூர்ந்த தேனே! கற் கண்டே! நற் கனியே!*
*கண்ணே! கண் மணியே! அக் கட்புலஞ்சேர் தேவி!*
*ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!*
*அம்மேநின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே!*

'செந்தமிழ்க் கட்டுரைகள்' என்னும் இந்நூல், புலவர் கல்லூரி, ஆங்கிலக் கல்லூரிகளின் தமிழ்க் கலைப் பயிற்சி எய்தும் தமிழ் மாணவர்கட்குச் சிறப்பாகச், சிறந்த கட்டுரை எழுதல், செய்யுட் சுவை காண்டல், இலக்கிய, இலக்கண, வரலாறு, கல் வெட்டு முதலியவற்றின் பயிற்சி எய்தல்—என்றின்ன வற்றினும், பொதுவாகத் தாய்மொழி, தாய்நாட்டுப் பற்றுச் சிறந்தோங்கலினும், பெருந்துணை புரியும் எட்டுக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

இக் கட்டுரைகளிற் சில, தமிழ்ப் பொழிலில் முன்பே என்னால் எழுதப்பட்டன. அக்கட்டுரைகள், உயர்நிலை மாணவர்கட்குத் தமிழ்ச்சுவை ஊட்டுவன வாதலையுணர்ந்த அன்பர்கள், அத்தகைய கட்டுரை கள் வேறு சிலவும் எழுதி, நூலாக்கி, மாணவர் உலகிற்குப் பயன்படுத்த என்னைத் தூண்டினமை யின், அன்னவர் விருப்பின் வழி நின்று எழுதி வெளி யிடும் இந்நூலை, மாணவர் உலகிற்கு உரிமை அன் போடு உதவுகின்றேன்.

இந்நூல் விரைந்து வெளிவரற்குரிய உதவிகள் பலவற்றைச் செய்த என் இனிய அன்பர்களாகிய தமிழ்ப் புலவர்கள் திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் (திருவையாறு), திரு. வித்துவான் ஔவை சு. துரைசாமி பிள்ளையவர்கள், விரிவுரையாளர், (திருப்பதி), திரு. வித்துவான் திரு. ஐயம்பெருமாள் கோனாரவர்கள், விரிவுரையாளர், (திருச்சிராப்பள்ளி.) இம்மூவர்க்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

இந்நூலை வெளியிடும் பொறுப்பினை ஏற்றருளிய திருச்சிராப்பள்ளித் திரு. பழனியப்பச் செட்டியாரவர்களுக்கும், இதனை இனிது விரைந்து அச்சிட்டுதவிய காரைக்குடி சக்தி அச்சுச்சாலையார்க்கும் என் உளமார்ந்த நன்றி உரியதாகும்.

பல்கலைக் கழகங்களின் பாட அமைப்புக் கழகத்தாரின் திருவருட்கு இந்நூலை ஓம்படை செய்கின்றேன்.

R. வேங்கடாசலம் பிள்ளை.

# பொருளடக்கம்


| என் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இளவேனிற் காலத்து இன்பமாலை | 1 |
| 2. | ஏறு தழுவுதல் | 11 |
| 3. | கல்வெட்டு | 19 |
| 4. | தமிழிற் பிறமொழிக் கலப்பு | 31 |
| 5. | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | 44 |
| 6. | நாட்டுப் புறங்களின் கல்வி | 67 |
| 7. | எண் சுவை | 78 |
| 8. | பண்டைத் தமிழர் மற வாழ்க்கை | 109 |

# செந்தமிழ்க் கட்டுரைகள்

## 1. இளவேனிற் காலத்து இன்பமாலை

திருநாவுக்கரசராம் செம்பொருட் செல்வர், இறைவன் திருவடி நீழலின் இணையிலாப் பேரின்பத்திற்கு ஓர் உவமையாக எடுத்துக் கூறிய பெறலரும் பெருஞ் சிறப்பு வாய்ந்தது 'இளவேனிற் காலத்து இன்பமாலை' யாகும். இளவேனிற் காலத்தே மாலைப் போழ்திலே, பூம்பொய்கைக் கரையிலே, நிலா வெளியிலே, ஐம்புல இன்பமும் பெற்றிருத்தலின் விஞ்சிய இன்பம் ஒன்று இன்மையானன்றே, அப்பேரின்பத்திற்கு உவமையாக இதனை நம் அரசர் எடுத்துரைப்பாராயினர். இக்கூறிய மாலையின்பத்தினை யொப்ப மற்ருேர் இன்பம் உளதாயின் அது,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!

என்னும் செந்தமிழ்ப் பாடல் ஆகிய தீஞ்சுவையமிழ்தமேயாகும். இத் திருப்பாட்டின்கண், கண்டு

கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பங்களும் என்றுஞ் சலியாத இறைவனடி யின்பத்திற்கு ஒப்பிட்டிருக்கும் பேரழகு நோக்கு வார் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகும்.

இவ்வழகிய செய்யுட்கண் 'மாசில் வீணை' என் றதனால், செவிப் பொறியால் நுகரும் இன்னோசை யின்பமும், 'மாலை மதியம்' என்றதனால், கட் பொறி யால் நுகரும் எழிலொளி யின்பமும், 'வீசு தென் றல்' என்றதனால் மெய்யாய பொறியால் நுகரும் இனிய ஊற்றின்பமும், 'வீங்கு இளவேனில்' என்ற குறிப்பால், அப்பருவத்தே நிறைந்துள கனிகள், தேன் முதலாயவற்றால் எய்தும் நாச்சுவை நல்லின்ப மும், 'மூசு வண்டறை பொய்கை' என்ற குறிப் பால், அங்குள்ள பூக்களான் எய்தும் நறுமண இன்ப மும் ஆகிய ஐம்புல இன்பங்களும் கூறப்பெற்றமை காண்க.

இவ்விளவேனிலின்பம் உலகில் வேறு எந்த நாட்டிலும் எய்தப்பெறாததாய், இத்தமிழகத்தே மட்டும் எய்தப் பெறுவதாகிய ஒரு சிறப்பின்பம் ஆகும். இவ் விளவேனிற்கண்ணே பெறலாகும் தென்றலெனும் தீஞ்சுவை யாழ்தினை விண்ணாட்டின ரும் உலகத்தில் வேறு எந்நாட்டினரும் தம் நாட்டி லிருந்து பெறுதல் இயலாததன்றே!

இவ்விளவேனிற் செவ்வியை எடுத்துரையாத புலமைச் செல்வர்கள் பண்டுமிலர், இன்றுமிலர். இளவேனில் மணம் வீசப்பெறாத நூல்கள் எங்கு மில்லை; என்றுமில்லை. இவ்விளவேனிற் செவ்வியை

எடுத்தியம்பும் பாட்டுக்கள், பாட்டின் பகுதிகள் ஆகிய இவற்றினைத் திரட்டின், அது ஒரு தனி நூலா கும்; உரைநடையில் விரிப்பின், மிகப்பெரு நூலாகும்.

பண்டைக் காலத்தே, மக்கள், இவ்வேனிற் காலந்தொடங்கவே, தாம் தாம், ஊரகத்தும், ஊர்ப் புறத்தும் இருந்து ஆற்றி வந்த பல்வகை அரிய அலு வல்களினின்றும் ஓய்வு பெற்று, மனைவி மக்களுடன் ஒருங்குகூடி, விழாக்கள், திருமணங்கள் முதலா மின்பக் கொண்டாட்டங்களிற் றிளைத்து மகிழ்ந்திருப் பர். தமிழ்த் தெய்வ விழாவாம் தனிப்பெரும் விழா வும், இந்திர விழா முதலிய ஏனைத் தெய்வ விழாக் களும், முதற்பெருங் கடவுளர்க்கு இயற்றும் திரு விழாக்களும் இக்காலத்தேதான் கொண்டாடப் பெறுவன. தமிழ்த் தெய்வ விழாவாவது, அவ்வவ் வாண்டுகளிற் புலவர்கள் ஆங்காங்கிருந்து இயற்றி வரும் அரிய நூல்கள், செய்யுட்கள் முதலியவற்றின் இன்சுவை விருந்தினைப் பற்பல புலவர்களும் செல்வர் களும் பன்னாள் ஒருங்கிருந்து கூட்டுண்டு மகிழ்தலே யாகும். 'நீண்மாடக் கூடலார், புலனாவிற் பிறந்த சொற் புதிதுண்ணும்பொழுது' என்பது கலித் தொகை. 'நீண்ட மாடங்களை யுடைய மதுரையி லுள்ளார், அறிவினை யுடைய சான்றோர் நாவிற் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும் இவ் விளவேனிற்காலம்' என்பது அதற்கு நச்சினார்க்கினி யர் கூறிய உரை.

இக்காலத்தே நிகழும் இந்திரவிழா பெரிய தோர் விழா. இது சித்திரைத் திங்கள் சித்திரை நாளில் முழுமதியில் தொடங்கப் பெறுவது; இருபத்தெட்டு

நாள் நிகழ்வது. இவ்விழா நிகழ்ச்சியின் விரிவெல்லாம் சிலப்பதிகாரம், மணிமேகலையாய இரு பெருநூல்களானும், அடியார்க்கு நல்லார் உரையானும் அறியப்படும்.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"

பிறவும் திருவிழாக்களாற் சிறக்கும் காலமும் இதுவேயாகும்!

இளவேனிற் பருவமே, மக்கள் - திருமணம், நீராட்டு, பொழிலாட்டு, உண்டாட்டு முதலிய மகிழ்ச்சிகளைத் திளைத்திருப்பதற்குரிய காலம்.

இக்காலத்தேதான் மரங்களும் செடிகொடிகளும் புதுத் தளிர்களை ஈன்று அழகு பெற்றுச் சிறந்து விளங்குவனவாகும். மிக்க மழையும் மிக்க நீரும் பெற்ற கார், கூதிர், பனிக்காலங்களிலும், மரங்கள் இங்ஙனம் தளிர் ஈன்று புத்தழகுபெற்று விளங்குதல் இல்லை.

இங்ஙனம் தழைத்துப் பொலிந்த மாஞ் செடிகொடிகள் பின்னர் அரும்பி மலரும் காட்சி அதனினும் சிறந்ததாகும். அம் மலர்களிற் படிந்து படிந்து அவற்றின் மணங்களை வாரிக் கொண்டுவந்து வீசிச் செல்லும் தென்றல் அதனினும் சிறந்ததாகும். இம் மலர்களின் பலவகை நிறங்களையும் உற்றுநோக்கிய கலித்தொகையாசிரியர், நெருப்பின் உருவை யொப்ப

இலவம் பூப்பதும், பொரியின் உருவை யொப்பப் புன்குகள் பூத்து உதிர்வதும், பொன்போன்று கோங்கம் பூக்கள் தாதைச் சொரிவதும் ஆகிய அழகினை

"எரியுரு வுறழ இலவ மலரப்
பொரியுரு வுறழப் புன்குபூ வுதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்ப"

என்றெல்லாம் பாடிச் செல்கின்றனர்.

இவ்விளவேனிற் சிறப்பினைச் சிலப்பதிகாரம் எங்ஙனம் எடுத்தியம்புகின்றதெனச் சிறிது நோக்குவாம். சிலப்பதிகாரத்தின் கதை நிகழ்ச்சி, இன்பப் பகுதி, துன்பப் பகுதி யென இருவகைப் படும். கோவலன் மாதவியைப் பிரிதல் வரையுள்ள முற்பகுதி இன்பப் பகுதியாம். ஏனைப்பகுதிகள் எல்லாம் துன்பப் பகுதியாம். கோவலன் கண்ணகியோடு மகிழ்ந்திருந்த காலம் சில ஆண்டுகள் ஆகும். இதனை எடுத்துரைக்கப் புக்க நூலாசிரியர் அவ்விருவரும் ஓர் இளவேனிற் காலத்தே உயர்நிலை மாடத்தே மகிழ் சிறந்திருந்த செவ்வியை எடுத்துரைத்த அளவானே அமைந்து, இவ்வாறு 'ஆண்டு சில கழிந்தன' என முடிக்கின்றனர். இக் கூறிய சில்லாண்டினுள்ளும் இவர் தம் மகிழ்ச்சியின் பேரெல்லையைக் காட்டி நிற்பது ஓர் இளவேனில் மாலையேயாயின், இதன் சிறப்பினை என்னென்பது!

இச் சிலப்பதிகாரம் ஓரிடத்து இவ்விளவேனிலை வாயாரப்போற்றி வரவேற்கின்றது. இதன் வருகையைச் "செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக, மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தார்

இளவேனில் வந்ததால் "—என்று மகிழ்வோடு எடுத்துரைக்கின்றது. இவ் வேனிலகத்து வீசும் சிறு காற் செல்வனைக் கையேந்தியணைத்து உச்சிமோந்து உல்பிலா மகிழ்ச்சியோடு அதன் அளப்பருஞ் சீரைப் பாராட்டுகின்றது. வானுறவோங்கிய பொதியிலின் நறுமணப் பூக்களை யளைந்து வரும் இத்தென்றல், மதுரை மாநகரத்துப் புகுந்து, அங்குள்ள பல்வகை மணங்களையும் கொண்டதனோடு அமையாமல், புலவர் செந்நாப் புகழையும் ஏந்திவரும் செவ்வியை உள்ளவாறறிந்து போற்றிய இச் சிலப்பதிகாரம்,

'மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து, புலவர் நாவிற் பொருந்திய தென்றல்!'......என்றும், 'புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பில், பொதியிற் றென்றல் போலா தீங்கு, மதுரைத் தென்றல் வந்தது!'......என்றும், பலபடப் பாராட்டுகின்றது.

இவ் விளவேனிற் செவ்வியை இழந்து, மீண்டும் இது வருங்காலம் யாதென ஏக்கற்றிருப்பார் கருத்தினை உணர்ந்து கொண்டு, இந்நூல்

கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவும் கானமுங் கடிமல ரேந்தத்
தென்னவன் பொதியிற் றென்றலொடு புகுந்து
மன்னவன் கூடல் மகிழ்துணை தழூஉம்
இன்னிள வேனில் யாண்டுளன் கொல்! லென்று
உருவக் கொடியோர் உடைப்பெருங் கொழுநரொடு
பருவம் என்னும் படர்தீர் காலை

என்று எடுத்துரைத்திருப்பது பாராட்டத்தக்க தன்றே!

சுருங்கக் கூறின் இவ்விளவேனிற் செவ்வியை, இச் சிலப்பதிகார நூல், புகார்க் காண்டமாகிய இன்ப நிலைப் பகுதி முழுவதும் பாராட்டுவதனோடு அமையாது, பின்னும் உற்றுழி உரைத்துச் செல்லுகின்றது. இவற்றால் இந்நூல் இவ்விளவேனில் மாலைக்கு அளித்திருக்கும் முதன்மை இனிதறியப்படும்.

இனி, மணிமேகலை நூலார் இவ்விளவேனில் மாலையினை எங்ஙனம் பாராட்டுகின்றனர் எனச் சிறிது நோக்குவாம். இந்நூல், முழுவதும் துயர்விரவி வரும் ஒரு துயர் முடிவு நூலாகும். இக் காப்பியத் தலைவியாய மணிமேகலையை அடுத்து முதன்மை பெறும் உதயகுமரன் என்னும் அரசிளங்குமரனது செயலில் ஒரு பகுதி மட்டில் இன்பப் பகுதியாம். அஃதாவது அவன் ஒரு வனத்தின்கண் காப்பியத் தலைவியைக் கண்டு தன் விருப்பத்தினை எடுத்துரைக்கும் பகுதியேயாகும். இவ்வின்பப் பகுதிக்கு உரிய காலமாக, நூலாசிரியர், இவ்விளவேனிற் காட்சியை, மக்கட்கு மகிழ்வளித்தலில் இணையின்றி நிற்கும் ஒரு நாடக நிலைக்கு ஒப்பாக வைத்து எடுத்துக் காட்டியிருப்பது, மிக்கதோர் மகிழ்ச்சியை விளைவிப்பதாகும். அவர் இந் நாடகத்திற்குப் பலவகைப் பூக்களும் பூத்து விளங்கும் பூஞ்சோலையாகிய திரையினை முதற்கண் விடுகின்றனர். அதனை,

குரவமும் மரவமும் குருந்துங் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்

செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே

என்று மொழிவதாலறிக. இனி அந் நாடகம் நிக ழும் இடம், பசும் பட்டு மேற்கட்டிய பெரியதோர் கொட்டகையாக,

"பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு, இருள் வளை வுண்ட மருள்படு பூம்பொழில்" என்றும், "வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்" என்றும், பொழிலை அமைத்துப் பாடினர். இனி அதற்குக் குழல் இசையும், யாழ் இசையும் செய் வார் வேண்டுமன்றோ! அவ்விசைகள் பற்றிக் "குழ லிசைத் தும்பி கொளுத்திக்காட்ட, மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய" என்றார்.

இந் நாடகத்திற்கு ஆடுவோராக மயிலினைக் கூறினர். அடுக்கு மேடைகளிலிருந்து காண்போ ராக மரக்கிளையமர்ந்த மந்திகளைக் கூறினர். தனி இருக்கைகள் அமைந்த பள்ளத்திலிருந்து காணும் மிகு திருவினராகப் பூம்பொய்கைகளிற் பூவகத் தமர்ந்த அன்னங்களைக் கூறினர். முழவொலிப்போ ராகச் சம்பங் கோழிகளைக் கூறினர். பாடுவோ ராகக் குயில்களைக் கூறினர். இவற்றை

மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்று
ஒருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை

அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் ருலும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவற் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணுய்!

என்று கூறிச் செல்வாராயினர்.

இனி, சீவக சிந்தாமணி நூலாசிரியர் இவ்வேனிற் காலத்தினையே ஒரு புதிய கூத்தனாக உருவகம் செய்து, அக்காலமுழுவதும், கூத்தாட்டுக் காண்பது போன்ற இனிய காலப் பகுதியாதலைக் கூறி வியப் புறுத்துகின்ருர். அவர், இளியென்னும் நரம்பினை யுடைய யாழ்—வண்டு, குழல்—கரிய கண்ணினை யுடைய தும்பி, முழவு—குயில்கள், ஆடும் அரங்கு— மணம் பொருந்திய பூக்களையுடைய பொழில், பாட்டு—கணவனைப் பிரிந்த மகளிரது வளை கழன்று விழும் நிலையையும், அவர்களது தளிர்போன்றதாய மாமை நிறம் மங்கிய நிலையையும் கூற, அவரவர் கண வரிடத்தே தூது சென்ற பாணர்கள் தங்கள் யாழ் மேல் வைத்துப் பாடும் பாட்டுக்கள்—என்று இங்ங னம் அழகொழுகக் கூறுவர். அது,

இளிவாய்ப் பிரசம் யாழாக
விருங்கட் டும்பி குழலாகக்
களிவாய்க் குயில்கள் முழவாகக்
கடிபூம் பொழில்க ளரங்காகத்
தளிர்போன் மடவார் தணந்தார்தந்
தடந்தோள் வளையுமாமையும்
விளியாக் கொண்டிங் கிளவேனில்
விருந்தாவாட ருடங்கினுன்

என்பதாகும். வைகறை முதலாய நாளின்பகுதியில், அந்திக் காலத்தே நாடக முதலிய காணுங்காலம் சிறந்து மகிழ்ச்சி தருவது போன்று, ஓர் ஆண்டின் காலப் பகுதிகளுள் இளவேனில் மிக்க மகிழ்ச்சி தரும் காலம் என்பது இதனாற் பெற்றும்.

இங்ஙனமெல்லாம் நூல்களானும் உரைகளானும் அறியப்படும் அளவேயன்றி, தம்மூரினும் வேற்றூரினும் கல்விப் பயிற்சியிற் கருத்தூன்றிப் பயின்று தேர்ச்சியுற்று மகிழ்ந்து வேனில் விடுமுறை பெறும் மாணவர்கள், தத்தம் சுற்றத்தினரோடும் நண்பரோடும் கூடி அளவளாவும் பெரும் பேற்றினை நாளும் கண்டு மகிழும் காலம், இவ்விளவேனிற் காலமும் அதன் இனிய பகுதியாய இன்ப மாலையுமே யாகுமெனின், இதன் இனிமையை இன்னும் விரித்துக் கூறுதல் என்னை ?

---

## 2. ஏறு தழுவுதல்

தண்டமிழ் நாட்டு மக்களிடத்துப் பண்டைக் காலத்துச் சிறந்து விளங்கிய வீரச் செயல்களுள் ஏறு தழுவுதல் என்பதும் ஒன்ருகும். இது, அக் காலத்து ஒரு விழாவாகவே கொண்டாடப்பட்டு வந்துள்ளது. பாரத காலத்துக் கண்ணபிரான் நப் பின்னையாரை ஏழு ஏறுகளைத் தழுவி மணந் திருப்ப தனையும், சங்க நூல்களில் இவ்வேறு தழுவுதல் கூறப் பட்டிருப்பதனையும் நோக்கின் இதன் பழமை ஒரு வாறு விளங்கும். இங்ஙனம் பல்லாயிரம் ஆண்டு களாகத் தொடர்ந்து வரும் இச் செயல், காலந் தோறும் மிறழ்ந்தும் குறைந்தும் வந்திருப்பினும், இன்றும் நமது நாட்டுப்புறங்களில் ஒருவாறு நடை பெற்று வருகின்றது. அங்கு, இவ் வேறுதழுவற் கிளர்ச்சிகளை, முன்பனிக் காலமாகிய மார்கழி தைத் திங்கள்களில் நாளைக்குங் காணலாம். இக் கிளர்ச்சி மேற் குறித்தபடி முன்பனிக் காலம் முழு வதுங் காணப் பெறினும், தைத் திங்கள் இரண்டு, மூன்ரும் நாளில், ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு வீட் டிலும் இவ்விழா நிகழக் காணலாம்.

பண்டைக் காலத்தே ஐந்திணை நிலங்களுள் ஒன் ருகிய முல்லை நிலத்தே, அத்திணைக்குரிய மக்களாகிய

ஆயரிடத்தே மட்டும் நிகழ்ந்து வந்த இது, இக் காலத்தே எத்திறத்தாரிடத்தும் ஒப்ப நிகழக் காணப் பெறுகின்றது. இவ்விழா, பண்டைத் தமிழரின் அரிய செயல்களுள் ஒன்றை நமக்கு நினைவூட்டி, ஊக்கம், வீரம், முதலியவற்றை விளைவிப்ப தொன்றாகும். இவ்விழாவினைப் பற்றிய பண்டைய நிகழ்ச்சிகள், முல்லைக்கலி, சிலப்பதிகாரம் என்னும் நூல்கள், அவற்றின் உரைகள் ஆகிய இவைகளைக் கொண்டு விரிவாக உணரலாம்.

'தென்னவன் தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய நல்லினத்தாயர்' 'இருங்குடியாயர்' என்றெல்லாம் தொன்னூல்களிற் சிறப்பிக்கப் பெறும் ஆயர் குடியினர், தங்கள் பெண்மக்களுக்குத் தக்கவராய வீர மணமக்களைத் தேர்ந்து கொள்ளுதற்கு, மணத் தேர்தலாக இந்த ஏறு தழுவலைக் கையாண்டு வந்தனர். இவ் வாயர் குடியில் ஒரு பெண் மகவு பிறக்கின், அதே காலத்து அக்குடியினர்க்குரிய ஆநிரையிற் பிறந்துள்ள ஏற்றிளங் கன்றுகளைத் தம்மூட்டாக (பால் கறவாது), தம் போக்காக விட்டு வளர்த்து வந்து, அம் மகளின் மணப் பருவத்தே இவ்விடைகளைத் தழுவி வலியடக்குவானுக்கு அம்மகளை மணஞ் செய்து தருவது அவர்கள் வழக்கம். இக்காலத்தே இதனை மணத் தேர்தலாகக் கொள்வது இன்று. எனினும், சில அரிய பணையங்கள் வைத்தேனும் நடத்துவர்.

இவ்விழா, பண்டு ஆண்டுதோறும் குறித்த காலங்களிலாவது, ஆயர் மகளொருத்தியை மணம் விரும்பினவன் உரிய ஏற்றினைத் தழுவ முன் வந்து வேண்டிக் கொள்ளுங் காலத்திலாவது நிகழும். ஏறுகட்கு

உரியோரும், தழுவுவோரு மாகிய ஆயர்கள், பிடவம் செங்காந்தள் காயா கொன்றை வெட்சி முல்லை கஞ்சங்குல்லை குருந்து முதலிய மலர்களாலும் கொத்துக்களாலும் ஆகிய மாலை கண்ணிகளைத் தரித்துச் செந்துவிரர்ஸ்ட் பூண்டு திரண்டு கூடுவர். முல்லை நிலக் கடவுளாகிய மாயோனையும், அவ்வவ்வூர் நீர்த்துறைகளிலும் மரங்களின் கீழுமுள்ள ஊர்த் தெய்வங்களையும் பரவித் தத்தம் அலுவல்களை மேற்கொள்வர்.

இவ்வாயர் குலமகளிர் முல்லை நிலத்திற்குச் சிறந்த குடிப்பிறப்பும் கற்பும் முதலாய உயர் சிறப்புக்கள் உடையவர். இவர், 'விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்—அருநெறி ஆயர் மகளிர்க்கு—இருமணங் கூடுதல் இல்லியல் பன்றே' என்று பாராட்டப்படுபவர். தாம் 'தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலொடு காமன் கோயிலிலே செல்லின், அக்காமனும் நெஞ்சழிந்து தன் கையிற் படையைக் கீழே போகட்டு மயங்குதற்கேற்ற பேரழகினர்.' 'கொலையுண்கட் கூரெயிற்றுக் கொய் தளிர் மேனி—யினைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்—நிலவுலகத் தின்மை தெளிநீ' என்றெல்லாம் பாராட்டப் படுவர். 'பூங்கரை நீல ஆடை நிலந்தாழ உடுத்து மயிலொடு மாறுகொள்ளுஞ் சாயலவர்; குயிலொடு மாறு கொள்ளுங் கொம்பனோர்' 'மாணவுருக்கிய நன்பொன் மணியுறீஇப் பேணித் துடைத்தன்ன மேனியர்.'

தொன்றுதொட்டு வரும் மிக்க திருவினராகியும், தம் முயற்சியாலீட்டும் பொருளினையே துய்த்து மகிழ்பவர்; இதனை ஒரு சிறுமி மணல்வீடு கட்டி

விளையாடுங்காலை, ஒரு சிறுவன் போந்து, நல்லாய்! யானும் வீடுகட்டித் தருவனெனக் கூறிக் கட்டப் புக, எம்போல்வாரை மணந்து ஓர் இல்லமைத்து அறம் நடாத்தும் தன்முயற்சி இல்லாதவனாகிய நீயோ எனக்கு வீடுகட்டித் தருவது என்று நகை யாடிக் கூறிய

'முற்றிழை யேஎர்மட நல்லாய் நீயாடும்
சிற்றில் புனைகோ சிறிதென்றான்; எல்லாநீ!
பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்ற திலைமன்ற'

என்ற முல்லைக்கலியான் உணர்தலாகும். இங்ஙனம் இவ்வாயர் மகளிரிடத்துக் காணலாகும் உயர் குணங் கள் மிகப் பல. இன்னவர் தத்தம் காதலர் ஏறு தழுவுங் காட்சியைக் காண வந்தீண்டுவர். இம்மக ளிர் நன்கனம் வீற்றிருந்து காணப், பக்கலில், பரண் அமைக்கப் பெற்றிருக்கும்.

இவ்வேறுகள், வானிடத்து விரிந்த திங்கள் போலவும், திருமாலினிடத்துள்ள சங்குபோலவும், அழகிய நெற்றிச் சுட்டியையுடைய கரிய நிற முடைய காரிகள்; கரிய மஞ்சு சூழும் மலையிடத்து நின்று வீழ்கின்ற அருவிகள் போல அழகிய வெள் ளைக் கால்களையுடைய காரிகள்; பலராமன் திருமார் பில் விளங்கும் சிவந்த மாலைபோலச் சிவந்து நீண்ட கொடி மறுவினையுடைய வெள்ளைகள்; விண்மீனு டன் விளங்கும் செவ்வானம் போல அழகிய வெள் ளைப் புள்ளிகளையுடைய சிவந்த நிறத்தனவாகிய சேய்கள்; சிவபெருமான் திருமிடற்றின்கட் டோன்

றுங் கருமைபோலக் கரிய கறையினையுடைய கழுத்தினையும், உயர்ந்து வளர்ந்த திமிலினையுமுடைய கபில நிறத்தனவாகிய குரால்கள்; விளக்கமாகத் தோன்றும் சிவந்த சிறு புள்ளிகளையுடைய வெள்ளைகள் எனப் பல வகைப்படும் உருவச் சிறப்பினை யுடையனவாகும். மதம் பொருந்திய களிற்றினும் மிக்க அஞ்சாமையை யுடையன; இடையறுது காலாலே தரையினை வெட்டித் தூளி யெழுப்புவன; கொம்பாலே குத்திக் கோட்டு மண் கொள்வன; ஒன்றோடொன்று தாக்கியும், மீண்டும், அடியால் மண்ணைப் பறித்தும் கூரிய கொம்புகளால் குத்தியும் பொருதுகொண்டிருப்பன; மெய்யினின்றும் வடிகின்ற குருதியால் மூடப் பெற்றுச் சிவந்த மேகங்கள் போல்வன. அவற்றை அவ்வவற்றிற்குரிய ஆயர்கள் பிடித்துப், பரமன் கணிச்சிப் படையென, முள்ளின் முனையெனக் கொம்புகளைச் சீவி, வழுக்குமாறு நெய்தடவி, நீராட்டித் தொழுவினுட் கொண்டுய்ப்பர். அவை கூற்றுவனையும் அவன் ஏவலரையும் ஒப்பச் சினந்து, மருண்டு, சுழன்று கொண்டிருக்கும்.

குறித்த நேரத்தே பறையும், கொம்பும், முழவும், பிறவும் இணைந்து இடிக்கூட்டமென இயம்பும். இந்நிலையில் தொழுவினைத் திறந்து விடுப்பர். ஏறு தழுவுவோர் தாம் தாம் குறித்த ஏறுகளின் மீது, புலியெனப் பாய்ந்து பிடிப்பர். உடன் பெரும் போர் நிகழும்.

அப்போர் நிகழ்ச்சி வருமாறு:— ஏறுகளின் மீது பாய்ந்தோர், கொம்பை இறுகப் பற்றியும்,

கொம்பிடை வீழ்ந்து கழுத்தினைப்பற்றியும், கழுத்திடத்திலே மாலைபோல் அடங்கிக் கிடந்தும், கொண்டை முறியும்படி தழுவியும், தங்கள் தோளுக்கு நடுவே அவற்றின் கழுத்தைப் புகுத்திவிட்டுப் பிடித்தும், நெருங்கிக் கொம்புகள் தம்மேலே படுதலை ஏற்றுக்கொண்டும் எங்ஙனமும் தப்பாது பிடிப்பர். ஒரு வெள்ளேற்றின் பக்கத்தே ஒடுங்கிக் கிடப்பான் ஒருவன், திங்களிற் கிடக்கின்ற மறுப் போலக் காணப்படுவான். ஒரு மறுவினையுடைய ஏற்றின் மீதேறி ஒடுங்கி விடாது செல்வான், நீர்த் துறையினிடத்துத் தெப்பத்தின் மீது கிடந்து அதனைத் தள்ளுகின்றவனையொப்பான். தன்மீது கடிது ஓடி வந்த ஒரு காரியை அதன் வலியடங்கத் தழுவி வருத்தி, அதன் மேலே தோன்றும் ஒருவன், கூற்றுவனை உதைத்துத் தள்ளி அவன் உயிரை வாங்கும் பரமனைப்போல்வான். நீங்காத சினத்துடன் தன் மேலே பாய்ந்த ஒரு சிவந்த ஏற்றைக் கொம்பைப் பிடித்து அதன் வலியைப் போக்கி அடக்கினவன், கஞ்சன் தன்னைக் கொல்ல ஏவிய குதிரையின் வாயைக் கிழித்துக் கொன்ற கண்ணபிரானை நிகர்ப்பான். இங்ஙனம் ஏறு தழுவுவோர் வெற்றியுறுவர். இங்ஙனமின்றித் தோல்வியுறுவதும், ஒரோவழி வீரர் பதம் புகுவதும் உண்டு.

ஊழ்வயத்ததாக நிகழ்வது உண்மைக் காதல். இக்காதலரை ஊழ்வினை எங்ஙனமும் கூட்டுவிக்கும் கடப்பாடுடையது. தன் முயற்சிக்குத் தடையாய எத்தகைய இடையூறுகளையும் அவ்வூழ்வினை உப்பக்கம் காண வல்லது. இங்ஙனம் ஊழின் வழியராய

உண்மைக் காதலர் வெற்றியுறுதலும், ஒழிந்தார் புரியும் முயற்சிகள் பயன்படாமையொடு தாமும் ஒழிதலும் இயற்கையன் வல்லவோ! ஆகவே, இப்போரில் ஊழின் புறத்தாக ஒருதலைக் காதலுற்றார் சிலர் தோல்வியுறுதலொடு மாண்டொழிதலு முண்டு.

இங்ஙனம் ஏறு தழுவுதற்குரிய நாளின் முன்னாள் மாலையிலாவது, ஏறு தழுவும் நாளன்று மாலையிலாவது, ஊர்ப் பொது மன்றமாகிய தாதெரு மன்றத்தே ஒரு குரவைக் கூத்து நிகழும். குரவைக் கூத்தாவது—ஆடவரும் பெண்டிரும் சேர, எழுவர் ஒன்பதின்மர் கூடி, கைகோத்து வளைந்து நின்று பாடியாடுவது. குரவைக் கூத்து நிகழுமிடமே, காதலர்கள் தடையின்றி ஒன்றுபட்டுத் தம் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் இடமாகும். ஏறு தழுவும் நாளின் முன்னாளாயின், தம் காதலரை ஏறு தழுவுதற்குத் தூண்டும் பாட்டுக்களும், ஏறு தழுவிய நாளாயின், தம் காதலர் வெற்றியைக் கொண்டாடிப் பாடும் பாட்டுக்களும் நிகழும். 'எம் தந்தையார் குறித்துள்ள ஏறுகளைத் தழுவினார்க்கே யாம் உரியேம்; ஆகவே, காதலர் முனைந்து தழுவி எம்மையடையும் கடப்பாடுடையர்' என்னும் குறிப்பினைத் தம் காதலர்க்குப் பாடித் தெரிவிப்பர்.

இன்னும் தங்கள் காதலரை மிக வற்புறுத்தித் தூண்டவேண்டுமிடத்து, காதலீர்! எமக்கு உரிய ஏற்றினை நாளை நீர் தழுவீரேல், எம்மை இம்மையில் மட்டுமன்று, மறுமையிலும் அடைதல் அரிது என்று குறிப்பிப்பவராய்,

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள் ;

என்றும்

அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கரிய.....ஆயமகள் தோள்

என்றும் பாடுவர். மேலும் தங்கள் காதலர் எய்திய வெற்றியும், வெற்றியுடையாரையே மணக்கும் தங்கள் மேன்மையும் தங்கள் ஆயர் குடிக்குப் புதியனவல்லவாகலின், ஏறுகளை யஞ்சும் ஆயர்களும், அங்ஙனம் அஞ்சுவார் உளரேல் அவர்களை மணக்கும் ஆய்ச்சியர்களும் தமது குடியில் இல்லை என்னும் பெருமித உணர்ச்சியோடு,

போரேற் றருந்தலை அஞ்சலும் ஆய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ வெங்கேளே !

என்று பாடியும் மகிழ்வர்.

இங்ஙனம் ஏறுதழுவல் பற்றித் தங்கள் குறிப்புக்கள் எல்லாம் வெளிப்படப் பாடியபின், முல்லைத் தெய்வமாய மாயோனைஉன்னி,

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி !

என்ற குரவைப் பாட்டுப் பாடி, அம் மாயோனைத் தங்கள் வாழ்வினைக் கடைக்கணித்தருள வேண்டிக் கொண்டு, அந்திக்காலத்தே தத்தம் இல்லம் வந்துற்று மகிழ்வர்.

# 3. கல்வெட்டு

கல்வெட்டு என்பது கல்லில் வெட்டப்பெறும் எழுத்துக்கள் என்று பொருள்படும். ஒரு பொருளைக் குறித்துக் கல்லில் வெட்டி, அதனை நட்டு, உலகத்தார் என்றுங் காணச் செய்வது, நம் தண்டமிழ் நாட்டில் பண்டைக் காலந்தொட்டேயுள்ள ஒரு வழக்கமாகும். செந்தமிழ் மொழியில் முந்து நூலாகிய தொல்காப்பியத்தே, போர்க்களத்தே வென்றுபட்ட வீரர்களின் சீர்த்திகளைக் கல்லில் வெட்டி நிலைநாட்டி, அதற்குக் கோயில் எடுத்துச் சிறப்புக்கள் செய்து வருதல் வழக்கமென்பது அறியக் கிடக்கின்றது. இதனை

> "காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று
> இருமூன்று வகையிற் கல்"

என்ற மூலத்தாலும், சுரத்திற் சென்று கற்காண்டல், அதனை நன்னாளாய்ந்து கொணர்ந்து நீர்ப்படுத்தல், அதன்கண் சீர்த்திகளைப் பொறித்தல், அக்கல்லினை நடுதல், அதனைத் தெய்வமாக்கிக் கற்கோயில் எடுத்துப் பெருஞ் சிறப்புக்களைச் செய்தல், என்றின்னவற்றை விரித்துக்கூறி மேற்கோள் காட்டும் உரைகளாலும் நன்குணரலாம். இங்கு இளம்பூரணர் உரையில்

எடுத்துக் காட்டப்பெறும் பழமை வாய்ந்த புறப்பொருள் வெண்பாமாலை நூல், இக்கல் நடுஞ்சிறப்பினைப் பல வெண்பாக்களால் விரித்துரைத்துளது. இக் கல்லில் பொறிக்கப் பெறுவன, வீரர்களது வென்றியேயன்றி, அவர்களது கொடையும் ஆம் என்பதனை,

"வானேறு புரையுநின் றாணிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வ மன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்தர்
ஒடுங்கா வென்றியும்"
செல்வமும்

உடையான் ஒருவற்குக் கல்லாய்ந்து அவன் புகழைப் பொறித்தலைக் குறிக்கும் புறநானூற்றுச் செய்யுட் குறிப்பால் அறியலாம். மேலும்,

"ஆடவர், பீடும் பெயரும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"
சிறப்பு

என்ற அகநானூற்றுச் செய்யுளில், பீடு எனப் பொது வகையால் குறிக்கப்பெறுதலின், அக் கற்களில் அவ் வீரர்களது கல்வி, தறுகண், இசைமை, கொடை முதலிய பலவகைச் சிறப்புக்களும் குறிக்கப்படும் என்பது பெற்றும். இங்ஙனம் மிகப் பழங்காலமுதலாகவே இருந்துவந்த இத்தகைய கல்வெட்டுக்கள், பெரும்பாலும் பல்லவராட்சி தொடங்கியதன் பின்னரே, மிக விரிந்த பொருள்களின்வாய் மிகப் பலவாகப் பல்குவன ஆயின. இக்காலத்துக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும் பொருள்கள் அவ்வக்காலத்து மன்னனது போர் வென்றிகளும், ஆட்சிச் சிறப்பும்

கொடை முதலியவும் எனப் பலவகைப்படும். இக் கல்வெட்டுக்களின் தொடக்கத்தே, அக்காலத்து மன்னனது மெய்க்கீர்த்தியும், பின்னர் அவன் காலத்தே இன்னார் இன்னார் இன்ன இன்ன அறத்தின் பொருட்டு இன்ன இன்ன பொருள்கள் வைத்துள்ளார் என்பன முதலிய பல செய்திகளும், முடிவில், அவ்வறத்தின் பாதுகாவல் பற்றிக் கூறும் காப்புக்கிலயும் குறிக்கப்பெறுதல் வழக்காகும்.

இம் மெய்க் கீர்த்திகள் முதலாம் இராசராச மன்னன் அரியணை ஏறிய எட்டாம் ஆண்டு அஃதாவது கி. பி. 993 முதற்ருன் விரிவாகக் கூறப்பட்டன என்பர். இம் மெய்க் கீர்த்திகளின் இலக்கணத்தை

"சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"

என்னும் பன்னிரு பாட்டியற் சூத்திரத்தாலும்,

"தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீரடியால்
எழிலரசர் செய்தி யிசைப்பர்"

என்னும் வச்சணந்திமாலைச் செய்யுளியற் சூத்திரத்தாலும் அறியலாம். இம் மெய்க்கீர்த்திகளில் சோழ வேந்தரோ, தத்தம் வென்றி மேம்பாட்டால் விளைந்த வைகளையே குறிப்பிடச் செய்வர். பாண்டிய மன்னரோ, தங்களுடைய அரிய செயல்களோடு தங்கள்

மூதாதையர்களின் அருஞ் செயல்களையும் உரைத்துக்கொள்வர்.

கல்வெட்டுக்களிற் காணும் சில மரபுகள்— இம் மெய்க்கீர்த்திகள் தோன்றியதற்கு முன்னும் பின்னும் உள்ள பிற்காலத்துச் சோழ மன்னர்கள் இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டப் பெயர்களில் ஒவ்வொன்றைத் தத்தம் இயற்பெயர்களுக்கு முன்னர்ச் சேர்த்து வழங்கிவந்தனர். இவ்வாறு வழங்குமிடத்துத் தந்தை இராசகேசரியாயின் மகன் பரகேசரியாக இருப்பன். இவ்வாறே பிற்காலத்துப் பாண்டிய மன்னர்களும் மாறவர்மன், சடையவர்மன் என்னும் பட்டப் பெயர்களைத் தரித்துவந்தனர். இம் முறைகள் இன்ன அரசர்க்குப் பின்னர்ப் பட்டம் எய்தியவன் இன்னவன் என்பதை எளிதில் உணர்த்துவனவாகும்.

காப்பு நிலைகள்— சிவன் கோயிற் கல்வெட்டுக்களாயின் 'பன்மாஹேஸ்வர ரக்ஷை' என்றும், திருமால் கோயிற் கல்வெட்டுக்களாயின் 'வைஷ்ணவ ரக்ஷை' என்றும் முடிக்கப் பெற்றிருக்கும். சைவ, வைணவ அடியார்கள் காப்பார்களாக என்பது இவைகளின் பொருளாகும்.

கல்வெட்டுக்கள் காப்பாற்றப்பட்டு வந்த விதம்— எத்தனையோ பல அரிய செய்திகள் அடங்கிய இக்கல்வெட்டுக்களை அக்காலத்தார் சிறிதும் பழுதுறாமல் எண்ணெய் பூசிப் பாதுகாத்துவந்தனர். கல் வெட்டுக்களுக்கு எண்ணெய் தீட்டியுளரா என்பதைப் பார்ப்பது, பண்டு கோவில் மேற்பார்வையாளர்களின் கடமையாக இருந்தது. கல்வெட்டுக்களுக்குச் செப்புத் தகடுகளில் படி எழுதியும் வைத்திருந்

தனர். பழுதுற்ற கோவில்களை இடித்துத் திருப்பணி செய்வதற்கு முன், அவைகளின்கண் உள்ள கல்வெட்டுக்களை ஓலையில் எடுத்து எழுதிக்கொண்டு, திருப்பணி முடிவுற்ற பின்னர் அவைகளை 'ஊர்ச் சபையார்' கண்காணிப்பின்பேரில் அக் கோயில்களில் வெட்டுவித்தும் வந்தனர்.

**அரசியலார் நூல் வெளியிடல்—** தமிழ் வேந்தர்களது ஆட்சிகள் மறைந்த பின்னர், தமிழ்நாட்டார் இக் கல்வெட்டுக்களின் அருமை பெருமைகளை அறியாது இருந்தனர். அங்கிலையில் 'செர்மனி' தேசத்து டாக்டர் உல்சு என்ற துரைமகனார் இந்தியாவுக்கு வந்து, ஈண்டுள்ள கோயில்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்களைக் கண்டு அவற்றின் அருமையை உணர்ந்து, அக்காலத்து அரசப் பிரதிநிதியாயிருந்த மேன்மைதங்கிய லார்டு ரிப்பன் (*1884-1888*) அவர்களிடம் கூறி அக் கல்வெட்டுக்களைப் படி எடுத்து ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்ததோடு தாமும் உடனிருந்து ஆராய்ந்தார். திருவாளர்கள், து. அ. கோபிநாதராயர், வி. வெங்கையா என்பவர்களையும் இத்துறையில் பழக்கி வைத்துச் சென்றார். இவர்களாலும் இவர்களுக்குப் பின் வந்தவர்களாலும் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டு நூல்கள் வடிவமாய் வெளிவந்துள்ளன. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் இதுவரையில் பத்துத் தொகுதிகளும், ஆண்டு அறிக்கைகள் Annual Reports on Epigraphy) முதலான பலவும் வெளிவந்துள்ளன. எடுத்த கல்வெட்டுக்களிலும் சற்றேறக் குறைய இருபத்தையாயிரம் கல்வெட்டுக்கள் வெளியிடப்பெறவில்லை. இவையனைத்தும் வெளி

வருமாயின் பல அரிய செய்திகளைக் கண்டு மகிழலாம்.

வெளிவந்த கல்வெட்டுத் தொகுதிகளிலும் முதல் மூன்று தொகுதிகள்தாம் திரு. உல்சு துரை அவர்களால் ஆங்கில மொழிபெயர்ப்புடனும், ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் வெளியிடப்பட்டனவாகும். இவ்வித மொழிபெயர்ப்பு, கல்வெட்டு எழுதப்பெற்றிருக்கும் மொழியுறியாது, ஆங்கிலப் பயிற்சி ஒன்றேயுடைய மாந்தர் ஆவார்க்கும் பெருநலம் விளைவிப்பதா யிருந்தது. நான்காம் தொகுதி முதல் இதுவரையிலும் வெளிவரும் தொகுதிகள் அனைத்தும் ஆங்கில மொழிபெயர்ப்பு இல்லாது வெளிவருகின்றன. இவற்றால் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகள் அனைத்தும் பயின்றவர்கள்தாம் இக்கல்வெட்டுத் தொகுதிகளை முற்றும் படித்தறிய இயலும்.

கல்வெட்டுக்களினால் அறியப்படும் பொருள்கள்— கல்வெட்டுக்களுள் பெரும்பான்மையும் திருக்கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நொந்தா விளக்குகள், (தூண்டா விளக்கு) அணிகலன்கள், பரிகலன்கள், 'நித்திய நைமித்தியங்களுக்கும்' திருவிழாக்களுக்கும் நில நிவந்தங்கள், தேவகன்மிகள் (குருக்கள் முதலியோர்) உள்ளிட்ட பல பணி செய்வார்களுக்கு ஊதியங்கள் முதலியவைகளைப் பற்றியன கூறப்பெற்றிருக்கின்றன. எனினும் வரலாற்று உணர்ச்சிக்குப் பயன்படக்கூடிய வென்றி வேந்தர்களது பெருமைகள், அவர்களது குடிவழிகள் (வம்சாவழி) அக்காலத்து நாகரிக மேம்பாடுகள், புரவலர், புலவர் முதலியோர் வரலாறுகள், பண்டைய வழக்குக்கள்

நாடுகளின் பிரிவுகள் முதலிய அரிய செய்திகளும் அவைகளால் அறியக் கிடக்கின்றன.

கல்வெட்டுக்கள் தமிழ் நூற் பயிற்சிக்கு உதவுமாறு: சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற இடங்களுள் கடைமுடி என்பது ஒன்றாகும். இது திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இத்தலம் திருநாவுக்கரசு சுவாமிகள் 'க்ஷேத்திரக் கோவை'த் திருத்தாண்டகம் மூன்றாம் திருப் பாட்டிலும் வைத்துப் பாடப்பெற்றிருக்கின்றது. இத்தலம் யாண்டுள்ள தென்று அறிதற்கு இயலாததாயிருந்தது. தஞ்சாவூர்த் தாலூகா கோயிலடிக்குக் கிழக்கே யுள்ள திருச்சின்னம் பூண்டி என்னும் ஊரே, அக்கடைமுடி என்பது அவ்வூரிலுள்ள சிவன் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள பல கல்வெட்டுக்களினால் அறியக் கிடக்கின்றது.

* அக் கல்வெட்டு :—

இடம்—கோயில் மண்டபத்தின் வடசுவர்.
அரசன்—முதற் பராந்தக சோழன்.
காலம்—அரியணை ஏறிய 29-ஆம் ஆண்டு.

வரி 1. ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பர கேசரி வ[ந்]

2. ம[ர்]க்கு (வன்மர்) யாண்டு உ௰௯ ஆவது தென்கரை இடையா —

---

* இக்கல்வெட்டுக்கள் கல்விவன்மை யில்லாரால் கல்லில் வெட்டப் பெற்றன வாகலின், எழுத்துப்பிழை சொற்பிழைகளுடன் காணப் பெறும்.

3. ற்று நாட்டுத் திருக்கடைமுடி மஹாதேவற்கு சந்திராதித்த —

4. வற் (சூரிய சந்திரர் உள்ளவரை) நிசதம் உழக்கு திருவிளக்கு நெ [ய்] யால் இரவும் பகலும் எ —

5. ரிவ [த] ற்கு வடகரை மழநாட்டு [கி] லார்க் கூற்றத்து கீழ்கூற்று பிர்மதேயம் —

6. அன்பில் பாரதாய னத்தனங்காளி வைத்த பொன் ழடு—ங் கழை ஞ் [செ] ச —

7. ஆறு மஞ்சாடி யுங் குன் றி. பன் மாஹேஸ்வர ரக்ஷை.

8. இத்தன்மம் ரக்ஷித்தாருடை ஸ்ரீபாதம் என் தலை மேலன (South Indian Inscriptions. Volume VII. Numbers 502 to 529.)

இதன் பொருள்—

முதற் பராந்தகன் அரியணை ஏறிய 29-ஆம் ஆண்டில், திருக்கடைமுடி மகாதேவர்க்கு ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்கு, அன்பில் என்னும் ஊரிலிருந்த ஒருவன் பதினைந்து கழஞ்சே ஆறு மஞ்சாடி குன்றி பொன் கொடுத்துளான் என்பதை இக்கல்வெட்டு அறிவிக்கின்றது.

யாப்பருங்கலக் காரிகை ஆசிரியரின் பெயர்: செய்யுளிலக்கணம் கற்போர் எல்லாராலும் பயிலப்பட்டு வரும் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் இவ்விரு நூற்களின் ஆசிரியரின் பெயர் அமுதசாகரர்

என்று காரிகை நூற்பதிப்புக்களில் காணப்பெறுகின்றது. ஆனால் அப்பெயர் அஃதன்று. அமிதசாகரர் என்பதேயாம். அதற்கு யாப்பருங்கலப்பாயிரத்திலுள்ள 'அளப்பருங் கடற்பெயர் அருந்தவத்தோனே' என்ற அடியே போதுமான சான்ருகும். அளப்பரும் என்றது அமிதம் என்றும், கடல் என்பது சாகரம் என்றும் பொருள் உணர்த்தும். ஆகையால் அமிதசாகரர் என்பதே அவர் பெயராய் இருத்தல் வேண்டுமென்று, கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் புலவர் கல்லூரித் தலைவர், பண்டிதர், நாவலர், திரு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் முதற்கண் எழுதி வெளியிட்டார்கள். அவர்கள் கொண்ட கொள்கை உண்மை என்பது மாயூரந் தாலூகாவைச் சார்ந்த திருநீடூரிலுள்ள திருக்கோயிலின் தென் சுவரில் காணப்படும் ஒரு செய்யுளால் உறுதியாயிற்று. அது வருமாறு :—

சுவஸ்திஸ்ரீ

* 1. எண்டிசை உலகை ஒருகுடை நிழற்கீ
ழிருத்திய குலோத்—

2. துங்க சோழற்கி, யாண் டொரு முப்பத்
தெட்டினிற் சோனட், டிசை —

3. வளர்திரு விந்தளூர் நாட், டுண்........டை
நீடிய நீடூர் உமையோ.........

4. டு நிலாவின பெருமாற், கு வந்து............
லைமலை தெ [ய)னச் சிலையாலுத்த

5. ம விமான மிங்க மைத்தான், தண்டமிழ்
அமிதஸாகர முனியை ஜெயங் கொ

---

* இச்செய்யுள் பலபடியாகச் சிதைந்திருத்தலுங் காண்க.

6. ண்ட சோழமண்டலத்துத், தண் சிறு குன்ற நாட்டுத் திருத்து............

7. நூற் காரிகை அவனுற், கண்டவன் மரு மான் காரிகை குளத்தூர்

8. காவல் நிலாவினுன் எவர்க்குங், கருணையுந்தி [யாகமுங்] காட்டிய மிழ—

9. லை நாட்டு வேள் கண்டன் மாதவனே.

(Ephigraphia Indica Vol. 18. Part II. Nidur Inscription by Mr. K. V. Subramania Aiyer.)

இக்கல்வெட்டு நம் சோழ மண்டலத்தை கி. பி. 1070 முதல் கி. பி. 1120 முடிய ஆண்ட முதற்குலோத் துங்க மன்னனது முப்பத்தெட்டாம் ஆண்டில் பொறிக்கப் பெற்றதாகும்.

செயங்கொண்ட சோழ மண்டலத்துச் சிறு குன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூரில், அமிதசாகர ரைக் கொண்டு யாப்பருங்கலக்காரிகையைப் பாடு வித்தவனுடைய வழித்தோன்றலாகிய மிழலை நாட்டு வேள் கண்டன் மாதவன் நீடூர்த் திருக் கோயிலின் உத்தம விமானத்தை எடுப்பித்தான் என்பது இச் செய்யுளின் கருத்தாகும். இச் செய்யுளால், யாப் பருங்கலக்காரிகை கி. பி. பத்தாம் நூற்றுண்டின் இறுதியிலோ அல்லது பதினென்றும் நூற்றுண்டின் தொடக்கத்திலோ இயற்றப்பட்டிருக்க வேண்டு மென்பது உய்த்துணரப்படும்.

குறிப்புரை: இந்தளூர் — என்பது மாயூரத்திற்கு வடபுறத்திலுள்ளது. இது திருமங்கை மன்னரால்

திருப்பாடல் பெற்றதொரு பெருமை வாய்ந்தது. இக்கோயிலிலுள்ள கல்வெட்டு இவ்வூரை 'இந்தளூர் நாட்டு இந்தளூர்' என்று குறிப்பிடுகின்றது. இவ்வூர் இப்போது திருவழுந்தூர் என்று வழங்கப்பெறுகின்றது.

மிழலை நாடு — இது கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாளுக்குப் போகும் பெருவழியில் உள்ள மிழலை என்ற ஊரைத் தலைமையாகக் கொண்ட நாடாகும். இம்மிழலை நாடு இராசேந்திர சிங்கவள நாட்டின் இருபத்திரண்டு பிரிவுகளில் ஒன்றுமாகும்.

கல்வெட்டுக்களால் அறியப்படும் பண்டை வழக்கங்களிற் சில: "இவனே இராஜ ராஜக் கிணற்றில் தொட்டிக்கு நீரிறைப்பார்க்கு அருமொழி தேவன் மரக்காலால் நிசதம் நெல் இரு குருணியாகத் திங்கள் ௬-க்கு நெல் முப்பது கலம் ஸ்ரீ ராஜ ராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு நிசதம் நெல் இரு குறுணி ஆகத் திங்கள் ௬-க்கு நெல் முப்பது கலம். இப் பந்தலுக்குக் குசக்கலம் இடுவார்க்குத் திங்கள் ஒன்றுக்கு நெல் இரு தூணியாக திங்கள் ௬-க்கு நெல்லு நான்கு கலம் ஸ்ரீ ராஜ ராஜன் கிணற்றிற்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆட்டாண்டுதோறும் புதுக்குப்புறமாக வைச்ச நெல் இரு கலனே இரு தூணி. ஆக நெல் அறுபத்தாறு கலம் எட்டு மரக்கால்." — என்னும் கல்வெட்டுப் பகுதியால், பண்டைக் காலங்களில் ஆறு மாதங்கள் வரையிலும் தண்ணீர்ப் பந்தர்கள் நடத்தப்பட்டு வந்தன என்பது புலனாகின்றது.

"ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு உகூ-வரை உடையார் ராஜ ராஜேஸ்வர முடையார்க்குத் திருப் பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ராஜ ராஜ தேவர் கொடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவ ரும், இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவரும் ஆக ஐம்பதின்மர்க்கும் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேசரி யோடொக்கும் ஆட்வல்லான் என்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும்"— என்னும் கல்வெட்டுப் பகுதியால், பண்டைக் காலத் தில் திருப்பதியம் ஓதும்போது உடுக்கையும் கொட்டி மத்தளமும் வாசிக்கப்பட்டு வந்தன என்பது அறியக் கிடக்கின்றது. இவ்வாறே கல்வெட்டுப் பயிற்சியால் நாம் அறியக்கிடக்கும் செய்திகள் மிகப் பல.

முடிப்புரை: எனவே, இக் கல்வெட்டுக்களினால் இவை போன்ற பல செய்திகள் வெளிப்படுமென் பது திண்ணம். ஆகையால் தமிழ் மொழியின் ஆக் கங்கருதும் அன்பர்கள் பலரும், கல்வெட்டுக்களை முனைந்து பயிலுதல், தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பற்பல வகையான ஆராய்ச்சி உரைகள் எழுதி வெளி யிட்டு உதவி செய்யும் சிறந்த வழியாகும்.

# 4. தமிழிற் பிறமொழிக் கலப்பு

ஒரு மொழி என்பது, சிலர் எண்ணியிருப்பது போன்று, கடவுளாற் படைக்கப்பெற்று மக்கட்கு அளிக்கப்படுவதொன்றன்று: மொழி நூல் வல்லார் கூறுவதுபோன்றே ஒரு மக்கட் கூட்டத்தினரால் நாளடைவிற் படைக்கப் பெற்றுத் திரண்டு வருவதொன்றேயாகும். இந்த நிலவுலகிற் பலவேறு வகைப்படும் நாட்டியற்கைகளையே துணைக்கொண்டெழுதலின், ஒவ்வொரு மொழியும், ஒலியிலும் அமைப்பிலும் வேறுபட்டு நிற்கின்றது. உயிர்ப் பொருள்கள் உயிரில்லாத பொருள்கள் யாவும், தத்தம் இயற்கை கெடுமாறு, மாறுபாடுகள் அடையத் தலைப்படின் அழிந்தொழியும். இங்ஙனமே, எந்த மொழியும் தன் இயற்கை கெடலாவதோர் மாறுபாடடையத் தலைப்படின், அஃதழிந்து போவது ஒரு தலையே யாகும். ஆகவே, ஒலியிலும் அமைப்பிலும் முற்றும் வேறுபட்டு நிற்கும் வேற்று மொழிக் கலப்பு ஒரு மொழிக்கு அதன் இயற்கை கெட எய்தின், அம் மொழி விரைவில் அழிந்தொழியும் என்பது நாம் நன்கு நினைவில் பதிய வைத்தற்குரிய ஒன்றாகும்.

இங்ஙனமாகவும், நமது தமிழ் மொழியில் ஆரியம் ஆங்கிலம் முதலாய மொழிகளின் சொற்களை, நமது

மொழியின் இயற்கைக்கு முற்றுமாருன மொழிகளின் சொற்களை, நமது தமிழ் மக்கள் நூல் வழக்கிலும் உலக வழக்கிலும், உரிய தமிழ்ச் சொற்கள் உளவாகவும், வரம்பிலாது கொண்டுவந்து புகுத்துகின்றனர். வைகறையிற் றுயில் எழுவது முதல், இரவிற் றுயில் பெறுங்காறும் நாம் உலக வழக்கிற் பேசும் சொற்களிற் கலக்கும் பிற மொழிச் சொற்களைக் கண்டு அளவிட்டுப் பார்க்கின், அம்ம! தீம்பாலில் நாம் கலந்துண்ணும் நச்சுக்குடிநீர் போன்று, அளவிறந்து நிற்றலைக் கண்டு திடுக்கிடுவோம். இனி நூல் வழக்கில் வந்து புகும் பிறமொழிச் சொற்கள், அம்மம்ம! அளவிட்டுரைத்தல் யாவரான் முடியும்? நெடுங்கணக்குப் பயிலுஞ் சிருர், முதன் முதற் படிக்கும் 'டங்கா டமாரம்' வகுப்பு முதல், முடிந்த படிப்பினவாம் 'பி. ஏ., எம். ஏ.,' வரையுள்ள ஆங்கிலக் கல்லூரிகளின் நூல்களி லெல்லாம் நூற்றிற்கு ஐம்பதறுபதொழிந்த வனைச் சொற்களெல்லாம் பிற மொழிச் சொற்களேயாம். இங்ஙனம் வேற்று மொழிச் சொற்கள் நம் அரிய தமிழ் மொழியில் எத்தகைய வரம்புமின்றிப் புகுந்துவரும் கடுமையினை உய்த்து நோக்கின், இன்னும் சில வாண்டினுள் நம் இனிய தமிழ் மொழி, கலப்பு மொழியென மாறி விடும் ஓர் அல்லல் நிலையினை அடைந்து நிற்றல் தெற்றெனப் புலனுகும். அந்தோ! நம் பல்வகைத் திருவும் தாய் மொழியே என்றிருக்கும் தமிழ் மக்களாம் நாம், இம் மொழித் திருவினையும் இழந்து என் செய்வோம்!

இனி எந்த மொழியும் வளர்ந்து முற்றிய தொன்ருதல் அமையாது என்பதனையும், உலக வளர்ச்சிக்

கேற்ப எந்த மொழியும் வளர்ந்து வரல் வேண்டு மெனவலையும் யாம் அறியேம் அல்லேம். உலகினில் யாங்கணும் விரிந்து கிடக்கும் நாட்டினரெல்லாம் ஒரு வீட்டினர் போல ஒன்றுபடுதற்குரிய நிகழ்ச்சிகள் பலவாகிய இக் காலத்தில், ஒரு மொழியாளர் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக உணரும் பொருளும் செயலும் அளவற்றனவே யாகும். அவ்வப் பொருளையோ செயலையோ உணர வேண்டின், உணர்த்த வேண்டின், ஒவ்வோர் சொல் வேண்டியதே யாகும். எனினும், அங்ஙனம் புதிது புதிதாக உணரும் பொருட்கும் தொழிற்கும் ஏற்ற சொற்களை, ஒரு மொழியாளர் தம் மொழியின் இயற்கைக் கேற்பப் படைத்துக் கோடலே தம் மொழியைக் காப்பாற்றும் வழியாகும். அங்ஙனம் படைத்துக் கொள்ள முயலாராய்ப் பிற சொற்களைக் கண்டாங்கு, கண்டாங்கு எடுத்துப் புகுத்துவோர் தம் மொழிக்குப் பெரியதோர் தீங்கு செய்வோரே யாவர்.

ஆயின், புதியனவாய கருத்துக்களைப் படைக்குந் திறன் ஒரு மொழிக்கில்லையாயின், அக் கருத்துக்களைத் தரும் பிற மொழிச் சொற்களையே அங்ஙனம் எடுத்தாள்வதன்றிப் பிறிது செயற்பாலது யாதெனின், நன்று! நன்று! ஒரு கருத்தினைக் கொண்ட ஒரு சொல்லைப் படைக்கும் திறன், ஒரு மொழியாளர்க் கிருப்பின், அத்திறன் அவர் தம் மொழிக்கும் தானேயமையும் என்க. சொற்களைப் படைப்பதென்பது எல்லோரும் எளிதிற் செயக்கிடப்ப தொன்றுகுமோ? ஈடும் எடுப்புமற்ற பெரும் புலவர்கள் ஒருங்கு குழீஇப் புதுச்சொற்களை யாக்கிக் கோடல் வேண்டும். இப்பெற்றியுணராரே புதுச் சொற்கள்

ஆக்குவான் புகுந்து, அச் செயல் தம் எளிய முயற்சியிற் கைகூடாமையின், அந் நிலையில் தம் செயலின் மையைத் தம்மொழியின்மேலேற்றி யுரைப்பர்.

இனி, பிற மொழிச் சொற்களைக் கொள்ளுதலும் மரபெனத் தொல்காப்பியர் கூறியுள்ளாரே யெனின், ஆம், அவர் கூறியிருப்ப துண்மையே. சான்றோர் செய்யுட்களில், பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழியின் இயற்கைக் கேற்ப ஆக்கிக் கொண்டனவாய மிகச் சில சொற்களைக் கண்டு, அவைகட்கு அமைதி கூறியுள்ளார். இதனை, 'இயற்சொல்லானும் செய்யுட் சொல்லாகிய திரிசொல்லானுமே யன்றித் திசைச்சொல்லும் வடசொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு, "ஏனைப் பாடைச் சொல்லும் செய்யுட்கு உரியவோ என்று ஐயுற்றார்க்கு, இந் நான்கு சொல்லுமே செய்யுட்குரியன, பிற பாடைச் சொல் உரிய வல்ல வென்று வரையறுத்தவாறு" என்ற சேனாவரையர் உரையான் உணரலாகும். எனவே இதன் கண் முன்னமே மிக இன்றியமையாமைகொண்டு வந்த சிற்சில மொழிகள் ஒழிய, இனிப் பிறமொழிகள் வரலாகாது என்று வரையறுக்கப்படுதல் காண்க. இங்ஙனம் வந்தனவற்றை நீக்காது கொள்ள அமைதி கூறலே தொல்காப்பியனார் கருத்தென்பதனை, அந்நிலத்து வழங்குஞ் சொல்லாகிச் செஞ்சொல்லின் வேறுபட்டுச் 'சான்றோர் செய்யுளகத்து வருவன நீக்கப்படா' என்னும் தெய்வச்சிலையார் உரையானும் அறிதலாகும். இங்ஙனம் வந்துள சொற்கள் தாமும் அவ்வம்மொழிச் சொற்களாகா: தமிழ் இயலிற்கேற்பப் படைத்துக் கொண்ட தமிழ்ச் சொற்களே யென்பது உரையாசிரியர் கருத்தாகும்.

இதனை, வட சொல்லாவது வடசொல்லோடொக்கும் தமிழ்ச் சொல் என்றுரால் உரையாசிரியர் எனின் என்றெழு திச் செல்லும் சேனவரையர் மறுப்பான் உணர லாகும். இச் சொற்கள் தமிழ்ச் சொற்களாக; தொல்காப்பியனுர், முன்னுள்ளவற்றிற்கு அமைதி கூறினுராக; அன்றி ஓரளவு பிற மொழிக் கலப்பி ஞல் தமிழ்மொழி பழுதுபடாதென் றெண்ணி, அதனை விதித்தனராக. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த தொல்காப்பியனுர் காலத்துத் தமிழ் நிலை என்னை? அக்காலத்து வந்து விரவற்பாலதாகிய பிற மொழிக் கலப்பின் அளவென்னை? இக் காலத்துத் தமிழ் நிலையென்னை? இக் காலத்துத் தமிழ் மக்கள் கையாண்டு வரும் வேற்றுமொழிகளின் அள வென்னை? இவற்றை நாம் உய்த்துணர வேண்டு மன்றே. மிக விரிந்து பரந்த அத் தொல்காப்பிய நூலினையே ஒரு முறை உற்று நோக்கின், எழுத்து, சொல், யாப்பு அணிகளே யன்றி, மக்களின் உளப் பாங்குகளையும் எடுத்துரைக்க வல்ல பேரியல் நூல் ஒன்று எழுதி முடிப்பதற்குரிய பல்லாயிரக் கணக் கினவாய சொற்கள் நம் தமிழ் மொழியில் அமைந்து கிடத்தலையும், எங்கோ ஒன்றிரண்டு பிறமொழிச் சொற்கள் வந்திருத்தலையுங் காணலாகும். ஆனல், தமிழ் எழுத்துக்களைப் பயிலும் சிறுர் படித்தற்குரிய முதற்பாடம் எழுதி முடித்தற்கும், அந்தோ! எத் துணைப் பிற மொழிகளை 'டம் டம்' 'டப டப' என் றெல்லாம் முழக்கம் போட்டுக் கொண்டுவந்து பரப்புகின்றனர். இக் காலத்துத் தமிழ் நூல்கள், தமிழ்ச் செய்தித் தாள்கள் முதலியன நாடோறும் புகுத்திவரும் பிறமொழிக் கலப்பினல் நெருக்குண்டு

வரும் நமது தமிழ் மொழியின் நிலையினை, நமது தொல்காப்பியனார் இன்று காண்பரேல், இக் கலப்பு நம் மொழிக்குத் தீங்கு தருவதன்று என்று உறுதி கூறுவாரா? தொல்காப்பியனாரே, காலங்கள் பல செல்லச் செல்ல, மக்களியல்பு, மொழியியல்புகள் மாறுமெனவும், அவ்வக் கால நிலைக்கேற்ப மக்கள் தங்கள் நிலையினையும் மொழியினையும் பேணிக் கொள்ளல் வேண்டுமெனவும் கருதிக் கடிசொலில்லைக் காலத்துப் படினே என்பது முதலாய விலக்குத் தந்தருளியுள்ளாரே. எனவே, நமது மொழியின் உறுதிபற்றி நாம் இன்று துணியக் கிடப்ப தொன்று, நம் அருமைத் தொல்காப்பியனார்க்கும் உடன்பாடாவதே யன்றி மறுதலை யாகா தென்க.

இனி, முன்னூல்களிற் பிறமொழிச் சொற்கள் சில பல கலந்திருத்தல், இனி நாம் தமிழ் மொழியினைப் பாதுகாத்துக் கொள்ளற்குத் தடையாகாது. மிகப்பழங் காலத்தினராகிய சங்க காலத்தினர் ஓரோ வழி வேற்றுமொழிச் சொற்கள் ஒன்றிரண்டு கலந்திருக்கின்றனர் என்பது உண்மையே. அக் கலப்புமின்றி அவர்கள் நூல்கள் இயற்றி யிருப்பது அரிதன்று. பின்னுள்ளோரோ ஒரு வரம்புமின்றி நூற்றுக் கணக்கு, ஆயிரக் கணக்கிற் பிறமொழிச் சொற்களை வேண்டி நின்றனர். இதனாலன்றோ, இப் பின்னோர் காலத்திலேயே நூற்றுக் கணக்காய தனித் தமிழ் மொழிகள் இறந்துபடத் தலைப்பட்டன. இதனைத், தொல்காப்பியத்திற் குறித்த பல சொற்களை வழக்கு வீழ்ந்தன என்றெழுதும் உரையாசிரியர்கள் உரைகளால் உணரலாகும். இற்றை ஞான்றோ ஆயிரக் கணக்காய மொழிகள் இறந்துபட்டன,

இறந்து படுகின்றன. இங்ஙனம் நம் அருமணிகளாம் பற்பல சொற்கள் மறைந்துபோதற்குக் கருவி யாயது என்னே? பிற மொழிச் சொற்களாம் பெரு வெள்ளமே யன்றோ! உரிய தமிழ்ச் சொற்களிருக்கவும் அதனை வேண்டாது பிறசொற்களைக் கையாளின், நாளடைவில் அவை யிறத்தற் கென்ன தடையுளது?

இனி, பண்டைத் தமிழாசிரியர்கள், தாம் இயற்றிய அரிய செய்யுட்களைப் பெரிதும் வடமொழி முதலாய பிறமொழிச் சொற்கள் விரவாது இயற்றியிருத்தலும், எங்கோ ஒன்றிரண்டு வருமாயினும், அவற்றைத் தமிழின் இயற்கை யொலி, வடிவுகள் குன்றாதிருக்க அமைத்திருப்பதும் யாங்கணும் காணலாகும். எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டு காட்டுவாம்:

"இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிது வந்(து)
ஏரகத் துறைதலும் உரிய னதாஅன்று."

இதன்கண், அந்தணர்கள் ஏரகத் திறைவனை வழிபடுதலை எடுத்துரைக்கப் போந்த புலவர் பெருந்தகை,

கோத்திரம், பிரமசரியம், ஆகவனீயம் முதலிய தீக்கள், உபநயனம் முதலிய சடங்குகள், தோத்திரம், ஆறெழுத்து மந்திரம், வேதம் முதலிய பலவற்றைக் குறிக்க வேண்டியவராகியும், அவற்றைத் தனித் தமிழ்ச் சொற்களாலே, காண்பார் கருத்திற் பதியுமாறு குறித்துச் சொல்லுதல் காண்க.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை
யந்தணிர்"

இதன்கண், கரகம் என்னுஞ்சொல் ஆரியச் சொல்லாயினும், தமிழொலியும் வடிவும் பெற்று, ஏனைச் சொற்களோடு ஒன்றி நிற்றல் காண்க. இச் சொற்றொடரும் அவ்வந்தணர்கட் குரியதோர் பொருளின் இயற்பெயராயிருத்தல் பற்றி அதனை நன்கு விளக்குவான் அச்சொல்லையே எடுத்தாண்டிருத்தலுங் காண்க.

இனி, இடைக் காலத்தினராய கம்பர், கச்சியப்பர், சேக்கிழார் போன்ற கல்வியிற் பெரியர்களும், சிற்சில வட சொற்களை ஆங்காங்கு அமைத்துப் பாடியிருப்பினும், தமிழியலைப் பெரிதும் பேணியே இயற்றியுள்ளார்கள். இப்புலவர் பெருமக்கள் பிறமொழிச் சொற்கள் வரலாகாது என்னுங் கருத்திலராயினும், அவைகளைக் கொள்ளலே தமிழ்ச் சிறப்பிற் குரித்தென எண்ணினர் அல்லர்.

பின்னும் பகர்வாள் மகனேயிவன் பின் செல்தம்பி
என்னும் படியன்று அடியாரினேவல் செய்தி

மன்னும் நகர்க்கே யிவன் வந்திடில் வாவநன்றேல்
முன்னம் முடியென்றனள் பான்முலை சோர நின்றாள்.

என்னும் கம்பர் செய்யுளின் பொருட்சிறப்பினையும், சொற்சிறப்பினையும் நோக்குவார்க்குக் கம்பர் தாங் கருதிய எப்பொருளினையும் பிறமொழிச் சொற்களின் துணையின்றி யெடுத்துரைக்கும் பேராற்றலுடையர் என்பது புலனாகும். இதன்கண், நகர் என்ற தமிழ்ச் சொல்லைப் பிறமொழிச் சொல்லென்பார் சிலருள ராயினும், செய்யுண் முழுவதும் தமிழ் நலங்கனிந்த தமிழ்ச் சொற்களின் ஒலியே சிறத்தல் காண்க.

இனி, பின்னுள்ளோராய வில்லிபுத்தூரார், குமரகுருபரர், அருணகிரியார் முதலாய புலவர்கள்

"ஆரண னேயர னேபுவ
ணங்களனைத்தையும் மன்றுதவும்"

"பால லோசன பானுவி லோசன
பரம லோசன பக்நச காயமா
கால காலத்ரி சூலக பாலவே
கம்ப சாம்பக டம்பவ னேசனே"

என்றெல்லாம் பாடிச் செல்வது நோக்குக.

இக்கூறிய மேற்கோள்கடாமும், இருமொழிகளிலும் வல்லராய புலவர்கள் பாடினவாக, இறைவனைப் போற்றி செயுமிடங்களாக, வேற்றுமொழிச் சொற்கள் மிகுந்தும் ஒருவகை ஒலி நயமுடையவாக விருத்தலின், ஓராற்றாற் போற்றப் பெறுவனவே யாகும்.

ஆங்கிலமொழி பற்பல மொழிகளின் சொற்களையே கொண்டு நிற்பதுபற்றி அதனைக் கலப்பு

மொழி எனக் கூறுவர். என்றாலும், அதனுட் செல்லும் பிறமொழிச் சொற்களும் வேற்று மொழிகளின் எழுத்துக்களுடன், ஒலியுடன் செல்லுகின்றனவா? இல்லையன்றோ? ஆனால் நம் மொழியில், ஸ், ஷ், ஜ், க்ஷ், ஹ, முதலிய ஆரிய எழுத்துக்களுடன் அவ்வச் சொற்களையே கொண்டு வந்து விடுவதாக வெண்ணி, ம்ருகம், ஸ்வயார்ஜிதம் என்றெல்லாம் எழுதித் தமிழின் அரிய ஒலியினை மாறுபடுத்துகின்றனரே. செந்தமிழ்ச் சீரியராம் நச்சினார்க்கினியர், வடசொல் தமிழில் வருமிடத்து 'உரப்பியும் எடுத்துங் கனைத்துங் கூறும் வடவெழுத்துக்களின் நீங்கி'த் தமிழொலி பெறல் வேண்டும் என்று குறித்த பொன்னுரையை இவர்கள் அறிவார்களாயின், இங்ஙனம் செய்வார்களா?

இனி இத்தகைய பிறமொழிக் கலப்பாம் வெள்ளத்தினைத் தடுக்க, யாம் செய்தற்குரியன யாவை எனச் சிறிது எண்ணுவாம். தமிழ்மொழி யென வொன்று தமக்கு என்றும் வேண்டியதே என எண்ணும் உண்மைத் தமிழர் ஒவ்வொருவரும், தாம் தாம் பேசுங்காலும் எழுதுங்காலும் தமிழ்ச் சொற்களையே எடுத்தாளல் தமது கடமை யென்று உறுதி கொள்ளல் வேண்டும். சிறார் முதற் கிழவர் ஈறாகவுள்ளார் யாவரும் பிறமொழிக் கலப்பினை எவ்வாற்றானும் வேண்டாது விட்டொழித்தலைக் கடனாகக் கொள்ளல் வேண்டும். தமிழறிஞர்கள் தாம் எழுதும் எத்தகைய நூலையும் தமிழ்ச் சொற்களையே கொண்டு எழுதுதல் வேண்டும். தமிழ் மக்கள் வாழ்க்கையில் வந்து புகுந்திருக்கும் எண்ணிறந்த பிற சொற்களில் ஏதேனும் ஒன்றைப் பேசும் போதோ எழுதும் போதோ

காணின், உடனே அதனைக் களைந்து அத்தகைய சொல் இனி என்றும் பேச்சிலோ எழுத்திலோ வாராதொழிய மிகு கருத்துறல் வேண்டும். தமிழ்ச் சங்கங்கள் போன்ற தமிழ் நலங்கருதிய கூட்டத்தினர் தமிழிற் பிறமொழிகள் வந்து குவிவதன் இன்னல்களை நீக்கல் தமது கடனாகக் கொண்டு, விரிவுரை, வெளியீடுகள் வழியாக யாவர்க்கும் எடுத்துரைத்து வருதல் வேண்டும். பள்ளிக்கூடத் தமிழாசிரியர்களாவார் தத்தம் மாணவர்கட்குத் தனித்தமிழிற் பேசவும் எழுதவும் ஊக்கிப் பழக்கி வருதல் வேண்டும். மேலும் அங்ஙனம் பேசவும் எழுதவும் திறமையுற்ற மாணவர்கட்கு அத்திறமை குறித்தே பரிசில்கள் தருதல் வேண்டும். தனித் தமிழ் மொழியில் நூல் எழுதுவார்க்குப் பரிசுகள், பட்டங்கள் முதலியன தருதல் வேண்டும். பிறமொழிச் சொற்களின் கலப்பினை மிகப் புகுத்துவாரது கலப்பு மொழி நூல் எதனையும் எவ்வாற்றிலும் புகுதற்கு இடந்தருதலாகாது. சிறப்பாகக் கல்லூரி, பள்ளிக் கூடங்களில், இத்தகையார் எழுதும் நூல்கட்குச் சிறிதும் இடந்தரலாகாது. இங்ஙனம் பல்லாற்றானும் விழித்துச் செய்யப் பெறுங் கிளர்ச்சிகளே நமது மொழியினைப் பாதுகாப்பனவாகும்.

இனி, ஆரியச் சொல் மிகப் பழங்கால முதலே தமிழிற் புகத் தொடங்கியதனோடு வர வரப் பல்கி வந்து இன்று நம் பேச்சிலும் எழுத்திலும் எண்ணிறந்து நிற்றலின், அந்த நெடிய பழக்கம் துணையாகச் சிற்சில வட சொற்கள், எத்துணைக் கருத்துடன் பேசுவாரையும் எழுதுவாரையும் அயரச் செய்து புகுந்து கொள்ளல் இயல்பேயாகும். மிக்குப் பெருகிவரும்

ஒரு வெள்ளத்தினை அணையிட்டுத் தடுத்த காலையும், கீழூற்றாகச் சிறிது நீர் கசிந்தோடி வரும்; வரினும் அவ்வணை யிறுக விறுக அச்சிறு கசிவும் நின்று விடுதல் போல, இச்சிறு வரவும் நாளடைவிற் குறைந்து முற்றுமிலா தொழியும். ஆகவே இச்சிறு வரவினையும், அங்ஙனம் வந்திருத்தலையும் ஒரு பெரும் பிழையாகக் கூறிக்கொண்டிருப்பாரையும் பொருள் செய்யாது விடுத்தல் வேண்டும்.

இனி, ஆரியச் சொற்கள் சிலவற்றைத் தமிழ்ச் சொல்லெனக் கூறி, அதற்கென வழக்கிட்டுக் கொண்டிருத்தலும் பயனில் செயலேயாகும். ஆரியச் சொல்லா, தமிழ்ச் சொல்லா என வழக்கு நிகழ்ந்துழி, அவ்விரு மொழிகளிலும் வல்லார் கூறுவதே அதற்கு முடிந்த முடிபாகக் கொள்ளல் வேண்டும். ஆயினும், ஆரியச் சிதைவெனப்படும் பாகதத்தில் நம் தமிழ்ச் சொற்கள் சில சென்று கலந்திருக்கின்றன வாதலின் அவற்றைக் கண்டு, அச்சிதைவு மொழியிலிருந்தே அச் சொற்கள் நம் முதன் மொழியாகிய தமிழிற் போந்தன எனக் கூறுவார் உளராயின், அவர் கூற்றுக்கள் ஒப்புதற் கியலாதன. இங்ஙனமே, தூய தமிழ்ச் சொற்கள் பலவற்றை ஆரியச் சொற்களெனக் கூறிவரும் ஒரு சாரார் உளர். அவர் கூற்றுக்களுஞ் சிறிதும் பொருத்த மில்லாதன வாதலின் அவற்றையும் பொருள் செய்தல் கூடாது.

இனி, மக்கள், ஊர், நாடு, முதலாயவற்றின் இயற்பெயரை உரிய ஒலி மாறாது எழுதுமிடத்து, அவற்றை வேண்டி யாங்கு எழுதி இருதலையும் படி மொழிதற் குறிகளிடலோ, அன்றித் தமிழ் ஒலிப்படுத்தி எழுதிப்

பக்கலில் அவற்றை உரிய ஒலியில் எழுதி இருதலை வளைவு சேர்த்தலோ தக்கதாகும்.

இனி, ஆரிய மொழியை யாதல் ஆங்கில மொழியினை யாதல் நம் தமிழர் பயிலாது ஒதுக்கிவிட வேண்டுமென்பது எமது கருத்தன்று. அவ்விரு மொழிகளையும் நன்கு பயின்று அவற்றி லுள்ள அரிய பொருள்களை நம் இனிய தமிழில் ஏற்றுக் கொள்ளுதல் இன்றியமையாததே. எனினும் அவ்வம் மொழிச் சொற்களை, நம் தமிழ் மொழிச் சொற்களின் மறப்பிற்கும் இறப்பிற்குங் கருவியாகக் கொண்டுவந்து புகுத்தலாகா தென்பதே யாம் கூறி வருவதாகும்; வேற்று மொழிச் சொற்களைத் தமிழிற் படைத்துத் தருதற்கு, நம் தமிழ்த் தாயின் தலைமக்களாய தமிழ்ப் புலவர்கள் துணை செய்ய முன்வந்திருக்கின்றனர். தமிழ்ப் புலவர்களும், தமிழ் மாணவர்களும் இங்ஙனம் தம் தாய் மொழியினைப் பாதுகாக்க முன் வருவார்களாக.

# 5. இமயவரம்பன்நெடுஞ்சேரலாதன்

## தாய் தந்தையர்

சேரமன்னர்களுள் மிகப் பழையோனாக, சேரமான் பெருஞ் சோற்றுதியன் நெடுஞ்சேரலாதன் என்பானொருவன் காணப்படுகிறான். அவன் பதிற்றுப்பத்தின் முதற்பத்திற் பாடப் பெற்றவனே என்று சில ஆராய்ச்சியாளர் நினைக்கின்றனர். அவனுக்குப் பின் சேரநாட்டிற்கு அரசுரிமை எய்திய வேந்தன் இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதனாகும். ஆனால், இவன் உதியஞ் சேரலாதனுக்கு எவ்வகை முறையுடையன் என்பது பெருத்த மயக்கத்தைத் தருகின்றது. இவ்விமைய வரம்பன் சேரவரசுரிமை எய்தியதற்குத் தொடர்பு காட்டுவதுபோல, இமையவரம்பனுக்குரிய இரண்டாம்பத்தின் பதிகம் "உதியஞ்சேரற்கு வெளியன் வேண்மாள் நல்லினியீன்ற மகன்" என்று கூறுகின்றது. இத்தொடர்க்குப் பொருள் யாது? உதியஞ் சேரற்கு, நல்லினி என்பாள் ஈன்றமகன் என்பது பொருளன்றோ?

அஃதேல், ஐந்தாம் பத்தின் பதிகம் கூறும் "குடவர்கோமான் நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்ற மகன்" என்பதற்குப் பொருள் யாது? சோழன் மணக்கிள்ளியென்பது இப்பதிகத்

துக்குரிய செங்குட்டுவனது தாயின் பெயரன்று என்பது சிலப்பதிகாரத்து அடியார்க்கு நல்லாருரையால் தெரிகிறது. அவர் இச் செங்குட்டுவனை, சோழன்றன் மகள் நற்சோணை யீன்றமக்கள்" (சிலப்பதி 1—2 உரை) இருவருள் ஒருவன் என்று கூறுகின்றார். மு. இராகவையங்காரவர்கள், "சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை யென்பாள்" என்றும், "சேரன் செங்குட்டுவனது 5-ஆம் பதிகத்தால் அவன் தாய்ப்பாட்டனாகத் தெரியும் மணக்கிள்ளி, உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்த சோழனாவான்" என்றும் கூறுகின்றார். சோழன் மணக்கிள்ளி யென்பதில் "சோழன்" என்ற அடை, "மணக்கிள்ளி" யென்பது ஆண்மகனைக் குறிக்கும் பெயரென்றே காட்டுகிறது; பெண்கட்கு அத்தகைய பெயர் இருந்த தென்றற்குச் சான்று கிடையாது.

ஆகவே, இப்பதிகத்துள் ஏதேனும் தவறுண்டாகி யிருத்தல் வேண்டும்; அல்லது, இப்பதிகத் தொடர்க்குப் பொருள் வேறுவகையாகவேனும் கூறல் வேண்டும். தவறுண்டெனக் கொள்வதாயின், அஃது எப்பொழுது எவ்வாறு ஏன் உண்டாயிற்றென ஆராய்வதும் முடியாத காரியம்; இப்பதிகத்தின் மூலப் பிரதியைத் தேடிக் காண்பதென்பதும் முற்றும் ஆகாத வேலையாகும். தவறின்றெனக் கொள்வதாயின், "சோழன்மணக்கிள்ளியீன்ற மகன்" என்றதற்கு, மு. இராகவையங்கார் கொண்டதுபோலவோ, வேறாகவோ பொருள் கருதுதல் வேண்டும். இன்றேல், இத்தொடர் பொருளற்ற பொய்யுரையாய் விடுகின்றது.

இங்ஙிலையில், **M.** சீனிவாசய்யங்காரவர்கள் வேருகப் பொருள் கொள்வதே தக்கதெனத் துணிந்து, "சோழன் மணக்கிள்ளி யென்பான், நெடுஞ்சேரலாதனது சகோதரி கணவன்; அவன்மகனே செங்குட்டுவன்; இக்குட்டுவன் சேரலாதனுக்கு மருமகனுதலால், சேரவரசுரிமையைப் பெறலாயினன்" என்று கூறுகின்ருர். இக்கூற்ருல் இமயவரம்பன் காலத்தே, அஃதாவது இற்றைக்குச் சிறிதேறக்குறைய 1500 ஆண்டுகட்கு முன்பே "மருமக்கள் தாயம்" என்னும் உரிமைமுறை சேரநாட்டில் நிலவிற்றென்பது பெறப்படுகிறது. மற்று, தமிழர் வரலாறு எழுதிய **P. T.** சீனிவாசய்யங்காரவர்கள் "மருமக்கள் தாயமென்பது மலையாளிகட்குரியது; இது பத்தாம் நூற்றுண்டிற்குப் பின்புதான் மலையாள நாட்டில் ஏற்பட்டது; சேரர்கள் தூய தமிழர்கள்" என்கின்ருர்.

"பண்டைத் தமிழ் வேந்தரது அரசியலுரிமை, பொதுவாக மக்கட்டாயமாய் ஜேஷ்டாநுக்கிரமமாக வந்ததேயாகும். அம்மானுரிமை மருமகனுக்குவரும் மருமக்கட் டாயம் செங்குட்டுவன் போன்ற சேரர் காலத்து வழங்கியதேயன்று. சரித்திர அறிஞர் சிலர், நம் சேரன் காலத்தில் மருமக்கட் டாயமே வழங்கியதாகக் கொண்டு, அக் கொள்கைக் கேற்பப் பழைய பாடங்களைத் திருத்திச் செல்வர். சேரலாதனை இளங்கோவடிகட்கு மாமன் என்ற முறையிற் கூருது தந்தையென்ற முறையில் வைத்து, 'நுந்தை தாணிழலிருந்தோய்' (சிலப். 30 : 174) எனத் தேவந்தி அவ்வடிகளை அழைத்திருப்பதும், சேரவரசுக்குரிய

வர்களை மருகரென்னாது புதல்வர் என்னும் முறையில் பதிற்றுப்பத்துக் கூறுதலும் அவர் கொள்கைக்கு முழுவிரோதமாதலோடு முன்னூல் வழக்கே யின்மை யாலும் அது பொருந்தாதென வுணர்க" என மு. இராகவையங்காரும் கூறுகின்றார். அடியார்க்கு நல்லார், நெடுஞ்சேரலாதனுக்கு, சோழன் மக ளான நற்சோணை ஈன்ற மகன் செங்குட்டுவன் என்கின்றார். 'சோழன் மகளான நற்சோணை' என்பதிலுள்ள மகள் என்பது மனைவியைக் குறிப்ப தாயின், சோழன் மணக்கிள்ளிக்கும், நற்சோணைக் கும் பிறந்தவன் செங்குட்டுவன் என்பது பட்டு, M. சீனிவாசய்யங்கார் கூறும் கூற்றுக்கு ஆதரவாய் விடும். மகன், மகள் என்னும் சொற்கள் முறையே கணவனுக்கும் மனைவிக்கும் உரியவாய் வரும் மரபு சிலப்பதிகாரத்தே காணப்படுகிறது. "நோதக வுண்டோ நும்மகனார்க்கினி" (சிலப் 16:17.) என்பதி லுள்ள நும்மகனார்க்கு என்பதைப்பற்றி அடியார்க்கு நல்லார், "நும்மகனார்க்கு; மகனென்பது ஆண்பாற் பெயர்; நும்முடைய புருடனுக்கென்பதாயிற்று; 'நினக்கிவன் மகனாய்த் தோன்றியதூஉம், மனக் கினியாற்கு நீ மகளாயதூஉம், பண்டும் பண்டும் பல பிறப்புளவால், கண்ட பிறவியே அல்ல காரிகை' என்றார் மணிமேகலையினும் (26)" என உரை விளக்க மெழுதுகின்றார். இவற்றால், சேர மன்னர் காலத்தே மருமக்கள் தாயமுறை வழக்கிலிருந்த தென்பது பெறப்படும். ஆசிரியர் பூரணலிங்கம்பிள்ளை யும், பதிற்றுப் பத்திற் கண்ட இச்சேர மன்னர்கள் மருமக்கள் முறைமைகொண்டே அரசுரிமை யெய்தி யிருக்கின்றனர் என்று கூறுகின்றனர். ஒருகால்

இடைப்பட்ட காலத்தே, சேரநாட்டு மக்களது மொழியும் நாகரிகமும் ஆரியக் கலப்பால் கலங்கி யிருந்ததனால், மருமக்கள் தாயமும் மறைந்து கிடந்து பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் தலையெடுத்து வழக்காறு பெற்றதாம் என்று கொள்ளலாம்.

இந்நெறியே நோக்கின், உதியஞ்சேரலாதற்குப் பின் வந்த இமயவரம்பன் தாய், உதியனது உடன் பிறந்தவள் என்பதும், அவளது கணவன் வெளியன் என்பதும், இமயவரம்பன் மருமகன் என்ற முறையில் சேரவரசுரிமை பெற்றான் என்பதும் உணரற்பாலனவாம். வெளியன் என்பது ஆண்பாற்குரிய பெயரென்பது, வெளியன் தித்தன், வெளியன் வேண்மான் ஆஅய் எயினன் எனவரும் ஆண் மக்கள் பெயர்களால் அறியப்படும். இமயவரம்பனது தாயின் பெயர் வேண்மாள்நல்லினி யென்பது; "இளங்கோ வேண்மாளுடனிருந்தருளி" (சிலப். 25 : 5) என்பதற்கு அரும்பதவுரைகாரர் * "இளங்கோ வேண்மாள்—பெயர்; நன்னன் வேண்மாள், உதியன் வேண்மாள் என்பனபோல" என்று கூறுவது காண்க. சோழ நாட்டிலும், பாண்டிநாட்டிலும் காணப்படாத இவ்வரசுரிமை முறை, தமிழ் மக்களாகிய சேரர்களுக்குமட்டில் எவ்வாறு எய்திற்றென்பது அறிஞர் இன்னும் பலபடியாக ஆராயும் பேராராய்ச்சிக்குரிய தொன்றாக இருக்கிறது. எனவே, இவ்வண்ணமே ஏனைப் பதிகங்களும் ஆராய்ந்து பொருள் கொள்ளவேண்டி யிருக்கின்றன.

---

* இவ்வரும்பதவுரைகாரர், அடியார்க்கு நல்லாரினும் பல ஆண்டுகள் முற்பட்டவர்.

## ஆட்சி

நெடுஞ்சேரலாதன் உதியஞ்சேரலாதனது அரசுரிமையைத் தான் எய்திச் சேரநாட்டை இனிது அரசு புரியத் தொடங்கினன். குடிகட்கு வேண்டும் நலங்களையே நாளும் கருதி வந்தான். இவனது ஆட்சி நலத்தைச் சுருங்கக் கூறின், இவன் செற்றோரை வழி தேய்த்தனன்; நட்டோரை உயர்வு கூறினன்; வலியரென வழிமொழியலன்; மெலியரென மேற்செல்லலன்; பிறரை யொன்று இரப்பறியலன்; இரப்போர்க்கு மறுப்பறியலன்; வருபடையை எதிர் தாங்கினன்; பெயர் படையைப் புறங்கண்டனன்; பாணுவப்பப் பசி தீர்த்தனன்; மயக்குடைய மொழி தீர்த்தனன் என்பது சாலும். நாடு வளம் பெருக வேண்டி நாட்டுக் குடிமக்களை ஓம்பி அவர் பொருட்டுக் காடுகொன்று நாடாக்கினன்; குளம் தொட்டு நிலவளம் பெருக்கினன்; யாறில்வழி யாறு தோற்றுவித்தனன். இன்ன நன் முறையால் இவன் "திருக்கொண்டு பெருக்கமெய்தி வீற்றிருந்தான்" எனலாம்.

## வென்றி

இவ்வாறு வாழ்கையில் வடநாட்டு இமயத்தின் சிறப்பைக் கேள்வியுற்றான். அந் நாட்டவர்தம் வளமும் பிறவும் அறிந்து, அவ் விமயம்வரைத் தன் புகழ் நிலவச் செய்ய வேண்டுமென்ற வேட்கையுடையவனானான். அவ்வடநாட்டில் வாழ்ந்த ஆரியர் தம் நாகரிகமும் கலையும் சிறிது சிறிதாகத் தன் நாட்டிற் பரவுதலைக்கண்டு, அவற்றையும் அறிய விரும்பினன். உடனே பெரும்படை திரட்டிக்கொண்டு

வடநாடு நோக்கிப் புறப்பட்டான்; இமயம் வரையில் தன் ஆணை நிலவ வேண்டுமென்ற நோக்கத்தொடு செல்வதால், அங்குள்ள மன்னர் தன்னை எதிர்ப்பினும் எதிர்ப்பர் என்ற கொள்கையால் இவன் அப் பெரும்படையுடன் செல்ல வேண்டுவதாயிற்று. கடலெனப் பரந்து விளங்கும் நால்வகைப் படைகளும் பேராரவாரத்துடன் வடவிமயம் நோக்கி நடக்கத் தலைப்பட்டன.

நெடுஞ்சேரலாதன் தமிழகம் கடந்து வடநாடு புகுந்ததும், ஆங்கு வாழ்ந்த ஆரிய மன்னர் பலர் இவனை எதிர்த்தனர். அவரது நாடும் பெயரும் தெரிந்தில. ஆயினும், இவனை எதிர்த்த அவரனைவரும் இவன் படைமுன் நிற்கலாற்றாது தோல்வியுற்றனர். நீர் வளஞ் சிறந்த அவர் தம் நாடு பாழ்பட்டது. மலைபோல் உயர்ந்து நின்ற அவர் தம் மதில்கள் தகர்ந்து பொடியாயின. நகரங்கள் வாழ்வோரின்றி மடிந்தன. எதிர்த்து நின்று ஈரமின்றி வன்சொற் சொல்லிய ஆரியரை, அவர் "தாயில் தூவாக் குழவி போல, ஓவாது" புலம்பி யலறத் தாக்கி வென்றி பெற்றான். தான் விரும்பி வந்தவாறே இமயத்தில் தனது விற்கொடியை நிறுத்தி, வில்லின் இலச்சினை யையும் அதன்மேற் பொறித்துத் தன் உயிரினு மினிய தமிழகத்துக்குத் திரும்பி வந்தான்.

தன்பால் தோல்வியுற்ற ஆரியர் சிலர் மீண்டும் பெரும்படை யெடுத்துவந்து, இவன் திரும்பு காலை யில் இவனை எதிர்த்தனர். அவர்களனைவரையும் சென்ற காலத்துப்போல "அலறத் தாக்கி" தன் ஆணைவழி நின்று அரசுபுரியப் பணித்தான். இச்

செயல், இச்சேர மன்னனுக்குப் புதியதன்று; இவனது முன்னோரும் இவ்வண்ணமே செய்து இறவாப் புகழ்கொண்டனர் என்பது பண்டைச் சான்றோரது இனிய பாட்டுக்களால் அறிகின்றோம். "கடலக வரைப்பின்இப் பொழில்முழு தாண்டநின் முன்றிணை முதல்வர் போல நின்றுநீ, கெடாஅ நல்லிசை நிலைஇத், தவாஅலியரோ இவ்வுலக மோடுடனே" (பதிற். 14.) எனக் குமட்டூர்க்கண்ணனார் என்னும் புலவர் பாடி வாழ்த்துமாற்றால் அறிக.

இவ்வாறு ஆரியர் அலறத்தாக்கி இமயம் விற்பொறித்த செய்தி தமிழகம் முழுதும் பரவவே, சொல்லேருழவர் பலர் அதனைத் தம் பாட்டிடை வைத்துப் புகழ் விளைப்பாராயினர்.

45292

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்"

(அகம். 396)

என ஆசிரியர் பரணர் பாடிப் பரவுகின்றார். ஆசிரியர் மாமூலனார் என்னும் சான்றோர்,

"வலம்படு முரசிற் சேரலாதன்,.........இமயத்து,
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து"

(அகம். 127)

என்று பாடியிருக்கின்றார்.

### ஆராய்ச்சிகள்

இப் புலவர்கள் பாட்டால், இவ்விமயவரை, பொன்படுநெடுவரை எனவும், அஃது ஆரியர்க்குரிய

தெனவும் தெரிகின்றோம். இம்மலைக்குச் செல்லும் வேந்தரை அவ்வாரியர் எதிர்ப்பர் என்பது சொல்ல வேண்டா. எனவே, இவ் வரை நோக்கிச் சென்ற இத் தமிழ்வேந்தனை அவ்வடவாரியர் எதிர்த்துப் பொருதே யிருப்பர் என்பதும், அவன் திரும்பிப் போந்து புலவர் பாடும் புகழ்பெற்றதனால், அவன் அவர்களை வென் றதும் இனிதே விளங்கிக் கிடப்ப, தமிழர் வரலாறு எழுதிய P. T. சீனிவாசய்யங்கார் முதலியோர், இவை உண்மையாகா எனக் கூறுகின்றார்கள். "ஆரியர் தோன்றிய பேரிசை யிமயம், தென்னங்குமரியொடு ஆயிடை, மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்து" (செய் 11) என்று 'பதிற்றுப்பத்து' கூறுவது வெறும் புனைந் துரையாகக் கருதப்படுகிறது. "அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து, இமிழ்கடல் வேலித் தமிழ கம் விளங்கத், தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப் பொடு, பேரிசை மரபின் ஆரியர் வணக்கி" எனக் கூறும் இரண்டாம் பத்தின்பதிகம், பிற்காலத்தோர் யாவராலோ புனைந்தெழுதிப் புகுத்தப்பெற்றதாக எண்ணப்படுகிறது.

"இனி, இமயவரம்பனது அரசாட்சி இமயவரை யின் அடிப்பகுதிவரை யிருந்ததெனப் பதிற்றுப் பத்துக் கூறும் செய்தி, முடிவில், அவ்விமயத்தில் விற் பொறித்த செய்தியாகத் திரிந்து போவதாயிற்று. ஐந்தாம் நூற்றாண்டில் ஆரியக் கொள்கைகள் தமிழ் நாட்டில் விரைவாகப் பரவின; அவர்கள் "இமசேது பரியந்தம்" என வழங்கும் வழக்காறு தமிழ்ப் புலவர் கட்கும் தெரிவதாயிற்று. ஆகவே, இது குறித்து இப்புலவர்கள் பல கதைகளைப் புனைந்து கூறத் தொடங்கி "வடவிமயமுதல் தென்குமரிவரை"

எனக் கதை நிகழ்ச்சிகளைப் பரப்பலாயினர். நிலையற்ற கொடியொன்றை நடுவதிலும் தம் அரசியற் குறிகளைப் பொறித்தல் சீரிதென நினைந்து விற்குறியும், புலிக் குறியும், கயற்குறியும் இமயத்தின் நெற்றியில் இவற் றிற்குரிய அரசர்களால் பொறிக்கப் பெற்றதாகக் கதைகள் எழலாயின. தென்னாட்டு மன்னவருள் தமிழகத்திற்கு அப்பாலுள்ள நாடுகளுட் சிலவற்றை வென்று அடிப்படுத்தித் தமிழகத்தோடு இணைத்துக் கொண்ட முதல் வேந்தன் கரிகால் வளவனாகும். பண்டைத் தமிழறிஞர்கட்குத் தமிழ்நாட்டுக்கு அப் பாலுள்ள நாடுகளின் இயல்பு தெரியாது. தமிழ் நாட் டுக்கு வடக்குள்ளனவெல்லாம் இமயகங்கை நாடென் பது அவர் கொண்டிருந்தகருத்து; இது விபரீதமன்று. இங்கிலீஷ்காரருக்குள்ளும் இத்தகைய கருத்துண்டு. தன்னாட்டிலுள்ளவற்றை "ஹோம்" என்னும் அவன், பிரஞ்சுநாட்டு நகரத்தையும் "அப்ராடு" (Abroad) என்பான்; அதற்கு நெடுந்தொலைவில் சீனாவிலுள்ள பீகின் (Pekin) நகரத்தையும் "அப்ராடு" என்பான், அதுபோலவே, தமிழ்நாட்டிற்கப்பாலுள்ள நாடுக ளில் தன் ஆணை செல்ல எவனாகிலுமோரரசன் வாழ்ந் தானென்னின், அவன் வில், புலி, கயல் என்ற மூன்றிலொன்றான தன் குறியை இமயத்தில் பொறித்து விட்டான் என்று கூறுவது வழக்காறு யிற்று. இம்முறையில்தான் கரிகாலன் இமயத்தின் புலியெழுதியதும், நெடுஞ்சேரலாதன் வில்லெழுதிய தும், பாண்டியனொருவன் கயலெழுதியதும் தமிழ் நூல்களிலே பேசப்பட் டிருக்கின்றன"

"கய லெழுதிய இமய நெற்றியின்
அய லெழுதிய புலியும் வில்லும்

நாவலந் தண் பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன்

(சிலப். 17 : 1-5)

எனச் சிலப்பதிகாரம் கூறுதல் காண்க."

மேலும் இப்புலவர்கள் இமயத்தை "ஒரு நெடு வரை" என்றும், "பெருங்கல்" என்றும் கருதினரே யன்றி, அதாவது நிலவரையிற் படிப்படியே கொடு முடியாக உயர்ந்து கொண்டே சென்று, வளி நிலை யாத வானத்தூடு கடந்து, தன் முடி காண்டல் குறித்து மக்கள் செய்யும் முயற்சியனைத்தையும் பார்த்து எள்ளிநகுவதுபோல் வெள்ளிய பனி யுறை பூண்டிலங்கும் மலைத்தொடர் என்று கருதினவ ரல்லர். இதன் இவ்வியல் பறியாமையால்தான், கரி காலன் இமயத்தின் உச்சியேறிப் புலிக்கொடி பொறித்தானென்றும், அதனையும் கடந்து திபேத்து முதலிய நாடுகளை வென்றானென்றும், ஏனைத் தமிழ் மன்னர்களும் அவனைப் பின்பற்றினரென்றும் கூற லாயினர்."

இவ்வாறு, நெடுஞ்சேரலாதனது இமயவரம்பு கண்ட செய்திபற்றிக் கூறிய தமிழர் வரலாறு என் னும் நூல், தொகை நூல்களில், ஆரியரை வென் றதுபற்றிக் கூறும் செய்திகளைத் திரட்டிக்கொண்டு, மலையமான் திருமுடிக்காரியென்பான் முள்ளூர் என் னும் நகர்க்கண் தன்னை யெதிர்த்த ஆரியரை வென்ற செய்தியை யாராய்ந்து, இவ்வாரியர்கள் 'ஆறும் நூற் றாண்டில் காஞ்சிநகரைக் கைப்பற்றித் தமிழ்நாட்டில்

வட்டமிட்டுக்கொண் டிருந்த பல்லவர்களாதல் வேண்டும் என்று கூறுகின்றது; "குழக்காற் சேம்பின்" (அகம் 336) என்று தொடங்கும் அகப்பாட்டில், "சோழர் வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை" உடைந்து தோற்றேடிய ஆரியர் என்போரும் பல்லவர்களே என்றும், பாண்டி மன்னருள் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், கூடகாரத்துச் செரு வென்ற பாண்டியன் மாறன்வழுதி யென்போரால் வென்றி காணப்பெற்ற ஆரியர், இன்னரென்று காண்டற்கில்லாமையால், இச்சிறப்புப் பெயர்கள் பொருளில் புனைந்துரை யென்றும் கூறுகிறது. இங்ஙனம் கூறும் இயைபினல், நெடுஞ்சேரலாதன் வென்ற ஆரியர், வனவாசி, கொங்கணம் என்ற இவற்றுள் வாழ்ந்த ஆரியர்களாதல் வேண்டும் என இவ்வாராய்ச்சியாளர் முடிபு செய்கின்றூர்.

இனிப் பிறிதோரிடத்தில், "சேரநாட்டிற்கு வடக்கே யிருந்த கடம்ப நாட்டிற்கோ கொண்கான நாட்டிற்கோ, இந்நெடுஞ்சேரலாதன் தன் படை கொண்டு சென்று பல திறைப் பொருள் கொணர்ந்திருப்பன்; அவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற விரும்பிய புலவர்கள், அச்செய்தியைப் புனைந்து இமையம் வரையில் தன் ஆணை செல அரசு புரிந்தான் என்றும், அதனுல் இவன் இமயவரம்பன் என்றும், அவர்கள் பாடியுள்ளனர் என்றும் அத் தமிழர் வரலாறு என்ற நூல் கூறுகின்றது. இனி, இக்கூற்றுக்கள் பொருந்துவனவா எனச் சிறிது ஆராய்வாம். தான் செய்யாத செய்கை யொன்றைச் சிறப்பப் புனைந்து ஒருவன் தன் முன்னே கூறுவானுயின், அது கேட்டு, அறிவுடைய எவனும் மகிழ்ச்சி கொள்வதும், அவ்வாறு கூறு

கின்ற அவனுக்குப் பெரும பரிசு தருவதும் செய்யவே மாட்டான். தமிழ் நாட்டை யாண்ட பெருந்தகையாகிய இவ்வேந்தன் இது செய்தான் எனின் அவன் முழுத்த மடவோனுவான். இனி, அவனைப் பாடும் பாட்டுக்களையும், பாடியோர்களையும் நோக்கின், அவன் நல்லறிவுள்ள அரசர் பெருந்தகையென்று துணிதற்குச் சிறு தடையும் உண்டாகிற தில்லையே! இவ் வுண்மைச் செய்திகளைப் பொய்யென எளிதே புறக்கணித்தல் ஆராய்ச்சி முறை யாகுமா!!

## சிறப்புக்கள்

நெடுஞ்சேரலாதன் இமயவரம்பனுகி, எதிர்த்த ஆரியரை வென்று இனிய அரசியல் நடத்தி வருகையில், தன் நாட்டில் பரவி, தன் அன்பு நச்சி வாழ்ந்த ஆரியச் சான்ருேர், அவர் தம் நட்பு மேற்கொண்ட தமிழ்ச் சான்ருேர் என்ற இவர்தம் நல்லுரை வழி நின்று மக்கட்கு நலம் செய்து வந்தான். நாட்டில் காடாயின இடங்களில் அவற்றை யழித்துப் பல கோயில்களை எடுப்பித்தான். குடிமக்களை ஆங்கு வாழச் செய்து அவர்கட்கு வேண்டும் ஆதரவு புரிந்து வந்தான். மேனுட்டு மக்களொடு வாணிகம் செய்து பொருளும் புகழும் பெற்ருன். கடலிற் கலஞ்செலுத்தி, அத்துறையில் தன் முன்னேர்களைப்போலப் பேரிசை விளக்கிப் பெருவிறல் வேந்தனுய்த் துலங்கினன்.

இவன் முன்னேர்களில் ஒருவன் தன்னை எதிர்த்த மன்னர் எழுவரை வென்று அவர்தம் முடிமணிகளாற் பொன்மாலை யொன்று செய்து, அவ்வெற்றியின் அறிகுறியாக அணிந்து கொண்டான். இவ்வாறு பகையரசர் மணிமுடிகொண்டு தமது ஆண்மை

சிறப்பிக்கும் அணிகள் செய்துகொள்ளும் வழக்கம் பண்டைத் தமிழரசர்பால் இருந்தது எங்கும் காணப் படும். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பகையரசர் மணிமுடியாற் பொற்கழல் செய்து தன் அடியில் அணிந்து கொண்டான்; இதனை, "பிறரோம்புறுமற மன்னெயில் ஓம்பாது கடந் தட்டு அவர் முடி புனைந்த பசும் பொன்னி னடி பொலியக் கழல் தைஇய வல்லாளனை" (புறம் 40) என ஆலூர் மூலங்கிழார் பாடுகின்றார். அது பின்னர் அவன்வழி வந்த சேரமன்னர் பலர்க் கும் அணியாயிற் றென்பர். அவன்போலவே, இவ னும் அரசர் எழுவரை வென்று, "எழுமுடி கெழீஇய திருஞெமரகலத்து நெடுஞ்சேரலாதன்" எனச் சான்றோர்களால் பாடு புகழ் பெற்றுச் சிறந்து விளங்கினான். இனி, P. T. சீனிவாசய்யங்கார் இவ் வெழுமுடி கெழீஇய இம் மார்பணிக்கு இவனே முதல்வன் என்றும், இவன் தன்னாட்டிற்கு வடக்கே யிருந்த ஆரிய நாடுகளில் வென்ற பொருள் களைக்கொண்டு இதனைச் செய்து அமைத்துக்கொண் டிருத்தல் வேண்டும் என்றும், பின்னர் இஃது இவ னுக்குப் பின் வந்த இவன் மகன் மார்பில் கிடந்து அணி செய்வதாயிற்றென்றும் கூறுகின்றார். இவன் வழியினரான ஏனைச் சேரமன்னர்கட்குக் கூறப் படாது, சேரன் செங்குட்டுவன் ஒருவனே பின்னே பரணரால், "எழுமுடி மார்பின் எய்திய சேரல்" (பதிற் 45) என்று சிறப்புறக் கூறப்பட்டிருக்கின் றான். பதிற்றுப்பத்தினுட் கூறப்படும் சேரமன்ன ருள் இந் நெடுஞ்சேரலாதனும் செங்குட்டுவனும் ஒழிந்த அரசர் அறுவரும் இவர்போல அத்துணைச்

சிறப்புடையராய்த் தோன்றுமையால், அவர்கட்கு இவ்வெழு முடிகெழீஇய பொன்மாலை கூறப்படவில்லை போலும். மேலும் ஆரியர் குமட்டூர்க் கண்ணனார் இம்மார்பணியை விதந்து பேசிச் சிறப்பிக்கு மிடத்து, "எழுமுடிகெழீஇய திருஞெம ரகலத்து, நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை" (பதிற். 14) என அவன் ஆண்மை நலம் கூறி, முடிவில் "நின் முன்றிணை முதல்வர் போல" நீ நின்றுவாழ் வாயாக என வாழ்த்துகின்றார். இவ்வாழ்த்தும் முன்னே கூறிய கருத்துக்கு ஓராற்றால் ஆதரவு தருகின்றது. அன்றியும் திரு. மு. இராகவையங்கார், தாம் எழுதிய சேரன் செங்குட்டுவன் என்ற நூலில், "செங்குட்டுவன் முன்னோர் 'எழுமுடி' என்ற பெயர்பெற்ற மாலை யொன்றுடையரா யிருந்தனர் எனப்படுகின்றது. செங்குட்டுவனும் அதனை யணிந் திருந்தவன் என்பது 'ஏழ்முடி மார்ப' என்னும் இளங்கோவடிகள் வாக்கால் தெரியலாம். அரச ரெழுவரைச் சேரர் முன்னோர் வென்று அவ்வெற்றிக் கறிகுறியாக அவரது எழுமுடிபோலச் செய்யப் பட்ட மாலை அணிந்து வந்தவராதலால் அஃது அப் பெயர்பெற்றதென்பர்" என்று குறிப்பிடுகின்றார்.

இதுகாறும் கூறியவாறு இமயவரம்பு கண்டு, எழுவர் அரசரை வென்று, "எழுமுடி கெழீஇய" மாலை யணிந்து புகழ்மேம்பட்டு வந்த நம் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு அரசுவீற் றிருந்தான் எனப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்துப் பதிகம் கூறுகின்றது. மேலும், அஃது அவன் ஆரியரை வணக்கி, இமயத்து பொருதழிந்தவரைப் பிணித்து, அவர் தந்த அருவிலை நன்கலமும் வயிர

மும் கொண்டுவந்து, அவற்றைப் பிறர்க்கு வழங்கிப் பேரிசைகொண்டான் என்றும் கூறுகின்றது. இதன்கண், அவன் ஆரியரையும் யவனரையும் பற்றிக்கொணர்ந்த செய்தியை, "நெய்தலைப்பெய்து கையிற்கொளீஇ" க் கொண்டுவந்தான் என்று புகழ் கின்றது. இதன் பொருள், அவர் தம் கைகளைப் பின்னே சேர்த்துக்கட்டிக் கைதிகளாக்கிக்கொணர்ந் தான் என்பதாம். இதனை இறப்ப மிகுத்துரைத்தல் என்ற புனைந்துரையாக ஆராய்ச்சியாளர் கருதுவர். ஐந்தாம் பத்தின் பதிகம் கூறும், "வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர், பல்லிருங்கூந்தல் முரற்சியாற், குஞ்சர வொழுகை பூட்டி" என்ற செய்தியையும் இவ்வண்ணமே கொள்வர்.

இவ்வகையால், தென்குமரி வட விமயம்வரை ஒருமொழி வைத்துலகாண்ட நம் சேரலாதன் காலத் தில், பகைவர் சிலர் கடலகத்தில் தீவு ஒன்றில் இருந்துகொண்டு அடிக்கடி இவனது நாட்டிற்குட் புகுந்து தீங்கு செய்துவந்தனர். அப்பகைவர் கடம்ப மரமொன்றைத் தம் காவல் மரமாகக் கொண்டு போருடற்றினர். இவ்வாறே, களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்பானொடு பகைத்துப் போர் செய்த நன்னன் என்பான் வாகை மரத்தையும், செங்குட்டுவனை யெதிர்த்த மோகூர் மன்னன் வேப்ப மரத்தையும், (பதிற்-44) அன்னி யென்பானைப் பகைத் துப் பொருத திதியன் என்பவன் புன்னை மரத்தையும் (அகம்-145) காவல் மரமாகக் கொண்டிருந்தமை காண்க. இது பண்டைக்கால முறை. எதிர்த்து மேல் வரும் வேந்தன், இக்காவல் மரத்தைத் தடிந்துவிடு வானாயின், அதனை யோம்பிவந்த வேந்தன் தோல்வி

யுற்றுன் என்பது முடிபு. நம் இமயவரம்பன் கடல் வழிப்போந்து நாட்டிற் குறும்பு செய்து திரிந்த இப் பகைவரை வெல்வது குறித்து, வலிமிக்க தானையொடு கடல் கடந்து சென்று, அவர்களை வென்று, அவர்தம் காவல் மரமாகிய கடம்பினையும் தடிந்து, அதனல் வெற்றிமுர சொன்றைச் செய்துகொண்டு வென்றி மிகு வேந்தனாய்த் தன் நாட்டிற்குத் திரும்பிவந்தான். இவ்வென்றியாற் கடலிற் பகைவரா லுண்டாகும் அச்சம் ஒழிந்தது. நாடெங்கும் இதனல் இன்பக் களிப் பெழுந்தது. கற்றோரும் மற்றோரும் நெடுஞ் சேரலாதன் நீடு வாழ்க என மனமார, வாயார வாழ்த்தலாயினர்.

நெடுஞ்சேரலாதன் "இமயத்தில் வணங்கு விற் பொறித்து" எதிர்த்துப்போந்த ஆரியவரசரை அல றத்தாக்கி வென்று பிணித்துப் போந்ததை, நீர்வீறு தோன்றப் பாடிய மாமூலனர் என்ற சான்றோர், இச்செய்தியைக் கேள்வியுற்றும் அடங்கா மகிழ்ச்சி யுடையாராய், "வலம்படு முரசிற் சேரலாதன், முந்நீரோட்டிக் கடம் பெறிந்து இமயத்து, முன்னோர் மருள வணங்குவிற்பொறித்து" (அகம்-127) நன்னகர் மாந்தை வந்து எய்தினன் என்று பாடியும் அமையா ராய், "சால்பெருந்தானைச் சேரலாதன், மால்கடல் லோட்டிக் கடம்பறுத்தியற்றிய, பண்ணமை முர சின்" (அகம்-347) என்று பாடித் தம் ஆர்வம் நிரம்புவா ராயினர். இங்ஙனம் இச்செய்தியைப் பாராட்டி அறிஞர் பலர் நாத்தழும்பேறப் பாடிப் பாடி அவனை நயந்த வண்ண மிருந்தனர். இதனை நோக்கின், அவனது நாட்டு மக்கட்குக் கடல் வழிப்போந்து

தீங்கு செய்துவந்தபகைவர் கொடுமை, தீரா இடுக்கண்ணாய் இருந்துவந்த தென்றறியலாம்.

இப்பகைவர் யாவராய் இருக்கலாம்? என்பது ஆராய்ச்சியாள ரிடையே பேரையமாக இருந்து வந்தது. பலர் பலவாறு கூறலாயினர். இப்பால், மு. இராகவையங்கார் "இறுதியிற்கண்ட சேரலாதன் பகைவர், கடம்பைத் தம் குலமரமாகக்கொண்டு, மைசூர் தேசத்தின் மேல்பாலே ஆண்ட கதம்பவேந்தராகக் கருதப்படுகின்றனர்." என்பராயினர். பின்னர் P. T. சீனிவாசய்யங்கார், இக்கதம்பர் வனவாசி வேந்தர் மரபினரான கதம்பர்களைக் குறிக்கும் என்று கருதுவது பொருத்தமற்றதென்று சொல்ல முடியாது என்றும், இவர்களே கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் சீர் பெற்றிருந்தவரென்றும் கூறுகின்றூர்.

இவ்வேந்தனது ஆட்சிக்குட்பட்டிருந்த சேர நாட்டில் குமட்டூர் என்னும் பெரியதோர் ஊர் இருந்தது. அஃது இப்பொழுது இன்ன ஊர் எனத் துணியக்கூடவில்லை. அவ்வூரில் அந்தணர்கள் குடிமல்கி யிருந்தது. அவரனைவரும் செந்தமிழ்ப் புலமை நலம் நன்கு வாய்க்கப் பெற்றிருந்தனர். அவரது நல்லிசைப் புலமை நாடெங்கும் பரவியிருந்தது. அக்காலத்தே பாண்டி நாட்டு மதுரையிலும் கண்ணனூர் எனப் பெயரிய நல்லிசைப்புலவர் ஒருவர் இவரையொப்ப நலஞ்சிறந்து விளங்கினர். அதனல் புலவர் பெருமக்கள் இவர்களை நன்கு அறிதற் பொருட்டு, ஊர்ப்பெயரொடுகூட்டிக் குமட்டூர்க் கண்ணனூர், மதுரைக் கண்ணனூர் என வழங்குவாராயினர்.

இவருள் நம் குமட்டூர்க் கண்ணனார் தாம் வாழும் நாட்டரசனாகிய இமயவரம்பனது கடம்பு தடிந்து பெற்ற வென்றியைக் கேள்வியுற்றார். அவ்வென்றி சேரநாட்டிற்குப் பெருந்தீங்கு விளைத்துவந்த பகைவர் கூட்டத்தைக் கெடுத்து அதனை இல்லையாக்கி மக்களின் நல் வாழ்வுக்கு ஏமமாகியது கண்டு, பேரின்பம் அடைந்தார். இவனது இவ்வெற்றிச் சிறப்பை நிலை பெறுத்த நினைந்திருந்தார்.

ஒருநாள் இமயவரம்பனைக் காணவேண்டி, நம் கண்ணனார், தமது குமட்டூரைவிட்டுப் புறப்பட்டு, அவனது தலைநகருக்கு வந்தார். அதுபோது, அவன் தான் பெற்ற வென்றி குறித்து, வெற்றிவேந்தர்க்கு உரிய கோலம்பூண்டு வாகைசூடி, அரசுவாவின் பிடர் மேலிவர்ந்து உலா வந்தான். அவனது விரிந்த மார்பின்கண் "எழுமுடிகெழீஇய" பொன்மாலை கிடந்து அழகு செய்தது. அத்தோற்றம், சூரனது காவல் மரமாகிய மாவினைத் தடிந்து, அவனையும் குலத்தோடும் தொலையக் கெடுத்துப், பிணிமுகம் என்னும் யானை மீதிவர்ந்து வெற்றிவிழாவயர்ந்த முருகக்கடவுளை நம் குமட்டூர்க் கண்ணனாரது புலமை யுள்ளம் நினைவுகூரச் செய்தது. முருகன் கடலகம் புகுந்து மாமுதல் தடிந்து சூரனைத் தொலைவுகண்டதும், இமயவரம்பனும் கடலகம் புகுந்து கடம்பு முதல் தடிந்து அக்கடம்பரை வென்று புறங்கண்டதும் ஒப்பவிருத்தல் அவருள்ளத்தே இன்பத்தை யூட்டியது. அவ்வின்ப வுணர்வு ஓர் இனியபாட்டாக உருக் கொள்வதாயிற்று. அதனைச் சான்றோர் 'புண்ணுமிழ் குருதி' (பதிற்-11) எனப்பெயரிட்டழைப்பர். அதன் பொரு

ளும் பிற நலங்களும் ஒருவாறு இனிது தோன்ற, குறித்த பகுதிமட்டில் சுருக்கிக் கூறுவாம்.

**வரைமருள் புணரி வான்பிசிர் உடைய......**
**நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி**
**அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்**
**சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்**
**கடுஞ்சின விறல்வேள்களிறூர்ந் தாங்கு**
**பலர் மொசிந்தோம்பிய திரள்பூங் கடம்பின்**
**கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்**
**வென்றெறி முழங்கு பணைசெய்த வெல்போர்......**
**போரடுதானைச் சேரலாத!........யானைப்**
**பொலனணியெருத்தம்மேல்கொண்டுபொலிந்தநின்**
**பலர் புகழ் செல்வம் இனிது கண்டிகுமே...என்பதாம்.**

இவ்வண்ணம் இமயவரம்பனது கடம்பெறிந்த வென்றி விழாவைத் தம் கண்ணும் மனமும் களிப்பக் கண்டு பேருவகை யெய்திய இப்புலவர் பெருமான், அவன் அணைவிற் பன்னாட்கள் தங்கிப் பலபாக்களைப் பாடியுள்ளார். அங்ஙனம் பாட நேர்ந்த காலத்தே அவனது இவ்வென்றிச் செயல் பாராட்டப் பெறுவதாயிற்று. ஒருகால் "துளங்கு பிசிர் உடைய மாக் கடல் நீக்கிக், கடம்பறுத் தியற்றிய...வியன்பணை" (பதிற்-17) என அவனது முரசினைப் பாராட்டியவழி, கடம்பெறிந்த போரைக் கட்டுரைத்து மகிழ்ந்தார். வேறொரு காலத்தே, நண்பர் பலரைக் கண்டார்; அவர்கள் இவர் பெற்று விளங்கும் பெருவளங் கண்டு வியந்து, நுங்கோ யார் என வினவ, எம்கோ, "இருமுந்நீர்த் துருத்தியுள், முரணியோர்த் தலைச் சென்று, கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின்

நெடுஞ் சேரலாதன்" என்று கடம்பு தடிந்த பெரு வென்றியை வியந்து கூறினர்.

இமயவரம்பன் இவ்வாறு வென்றி விழாச் செய்து யானை யேறி உலாப் போதரக்கண்டு உவகை மிகக் கொண்டு தீவிய செந்தமிழ்ப் பாட்டுப் பாடி உள்ளம் சிறந்த கண்ணனார், அவன் உலா முடித்து அரசவைக்கண் கொலு வீற்றிருக்கும் செவ்வி நோக்கி நின்றார். எழுமுடிகெழீஇய திருமணி யாரம் வரையகன் மார்பிடைப் பெருங் கவின் செய்ய, மலையென வுயர்ந்த தோள் மகளிர் மனம் கவர, வேலேந்து நெடுங்கை கோல் நிலை விளக்க, குறுநில மன்னரும், உறுதிச் சுற்றமும், புலவர் குழாமும் புடையமர்ந்து விளங்க, சிங்கம் சுமந்த பொங் கணை யேறி, இச் சேரர் பெருந்தகை செம்மாந்து வீற்றிருந்தான். அதனைத் தம் கண் களிப்பக்கண்ட கண்ணனார் அவன்பால் அணுகி "அரசே, நின்மறம் வீங்குபல் புகழ் கேட்டற்கு இனிது; நுகர்தற்கினிது நின் பெருங் கவி மகிழ்வே" என்று அவனது திரு வோலக்கத்தைச் சிறப்பித்துக் கூறினார்.

பின்பு ஒருகால் அவன் வினைமேற் சென்றிருக் கையில், வருதற்குக் குறித்த காலம் வந்தும் அவன் வாரானாயினன். அவன் பிரிவாற்றாது அவனுடைய கோப்பெருந்தேவி மிகமிக வருந்துதலுற்றாள். அவள் பொருட்டு நம் கண்ணனார் அவனிடம் சென்று, தேவியின் ஆற்றாமையைக் குறிப்பாகக் கூறி அவனை விரைய வந்து சேருமாறு செய்தார்.

அவனுடைய ஆதரவிலே கண்ணனார் பன்னாள் தங்கி யிருந்து அவன் காக்கும் நாட்டின் நலமும்,

அவனைப் பகைத்தோர் நாடு அவன் பகையால் கெட்டழியும் திறமும், நேரே கண்டு அறிந்து அவனைப் புகழ்ந்து கூறி, தாம் கண்ட காட்சிகளையும் அவனுக்கு உரைத்தார். மேலும், அவர் அவன்பால் இருக்கையில், அவன் தன்னைப் பாடிவரும் பாணர் விறலியர் பொருநர் முதலாயினர்க்கும் பிறர்க்கும் அளிக்கும் கொடைத்திறத்தை வியந்து, "கூந்தல் விறலியர்" என்னும் பாட்டில், "மாரி பொய்க்குவதாயினும், சேர லாதன் பொய்யலன் நசையே" என்று பாடிப் பரவினர்.

சேரலாதனைப் பகைத்துக் கெட்ட அரசருட் சிலர் அவன்பாற் பணிந்து திறை செலுத்தக் கண்டு, அவன் அவர் பகைத்துச் செய்த குற்றங்களைப் பொறுத்து அவர்க்குத் தண்ணளி செய்தான். அதனைக் கண்டு பெருவியப்புற்ற புலவர் பெருமான், "புரைவது நினைப்பின் புரைவதோ இன்றே, பெரிய தப்புந ராயினும் பகைவர், பணிந்துதிறை பகரக் கொள்ளுநை யாதலின்" என்று பாராட்டினர்.

பின்பொருநாள், அவர் சேரலாதனை யண்மி, தாம் தம்மூர்க்குச் செல்ல விடை வேண்டினர். அவன், முதற்கண் அவரைப் பிரிய மனமிலனாகி, ஒருவாறு தேறி "உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயம் கொடுத்து, முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகம் கொடுத்தான்" என்று பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் பதிகம் கூறுகிறது.

இவ் விமையவரம்பனுக்குப் பல்யானைச்செல்கெழுகுட்டுவன் என்றொரு தம்பியுண்டு. அவனைப்

பாலைக் கௌதமனார் என்னும் புலவர் பதிற்றுப்பத்தின் மூன்றும்பத்தைப் பாடிச் சிறப்பித்தார். அவரை நோக்கி, அவன் "நீர் வேண்டியது கொண்மின்' என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்' என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்,' என மூன்றும் பத்தின் பதிகம் கூறுகிறது.

இவ் விமையவரம்பன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றிருந்தான் என்று பதிகம் தெரிவித்தலை முன்னரே உணர்ந்துளோம்.

# 6. நாட்டுப் புறங்களின் கல்வி

நாட்டுப்புறம் என்பது, ஒரு நாட்டில் நகரங்கள் அல்லாத சிற்றூர்களாகும். நாட்டின் இன்றியமையாத ஊண் உடை முதலாய பொருள்களைத் தந்துதவுவன இத்தகைய ஊர்களேயாகும். அரசியலார்க்கு மிக்க வரிகளைத் தந்துதவுவனவும் இவ்வூர்களே. ஒரு நாட்டின் முன்னேற்றமோ பிற்போக்கோ, அந் நாட்டுப்புறத்தினையே சார்ந்துள்ளது எனல் மிகையாகாது.

பண்டைக் காலத்தே நம் தமிழ்நாடு குடிவளம் கோல்வளம் ஓங்கப் பெற்றிருந்தமைக்கு நாட்டினர் பெருமையே வாயிலாக இருந்தது. ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார், மக்கட்குரிய வீர வாழ்க்கை—பெருமித வாழ்க்கை—கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கு பொருளடியாகத் தோன்றுமென்றனர். ‘கல்வி தறுகண் இசைமை கொடையெனச், சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே’ என்பது சூத்திரம். இவற்றுள் தறுகண் என்பது அஞ்சத்தக்கன கண்டவிடத்து அஞ்சாமை. இந்த அஞ்சாமை நிலைநிற்கும் நாட்டகத்தே பகைவரிலராவர். இசைமை யென்பது பழியொடு வருவன செய்யாமை. எத்தகைய இன்பமும்

பொருளும் எய்துமாயினும், பொய் கூறல் முதலாய தீச்செயல்களாற் பழியைத் தேடிக்கொள்ளாது, உண்மை நெறியில் நின்று புகழ் எய்தலே இசைமை யென்பதாகும். ஏனைக் கல்வியுங் கொடையும் வெளிப்படை. இந்நான்கு சிறப்புக்களும் நகரினும் விஞ்சி நாட்டிற் பொலிவுற்றன என்பது கூறு வாராய கல்வியிற் பெரிய கம்பர், நாட்டுப் படலத்து, அந்நான்கினையும் நினைவு கூர்ந்து,

**வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்**
**திண்மை யில்லையோர் செறுநர் இன்மையால்**
**உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்**
**வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்**

என்று தமது கற்பனைச் சிறப்புத் தோன்றக் கூறி வியப்பிப்பது காண்க.

எனவே, நாட்டுப்புறங்களோ, நகரங்களோ, ஒருசேர எல்லா நலங்களும் பெற்று முன்னேற்ற வாழ்க்கை எய்துதற்குரிய இணையற்றதோர் கருவி கல்வியே யாகும். மக்களை மற்றை உயிர் வகைகளி னின்றும் பிரித்து உயர்த்துவது கல்வியறிவே யாகும். விலங்கிற்கும் மக்கட்குமுள்ள குன்றும் குன்றியு மன்ன ஏற்றத் தாழ்வினை, 'விலங்கொடு மக்கள னையர்' என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவனார் வாய்மொழியா லுணரலாகும். இனி, மக்களுள்ளும் கற்றார்க்கும் கல்லார்க்குமுள்ள ஏற்றத் தாழ்வும் அன்னதே யாகுமென்பது, அக் குறளின்கண்ணே அதன் தொடர்பாகக் கூறியுள்ள 'இலங்குநூல் கற்றாரோ டேனையவர்' என்ற திருமொழியா லுணர லாகும். இக் கல்வியே மக்களின் கண்ணாகு மென்

பார், 'கண்ணுடைய ரென்பவர் கற்ருர்' என்றும், இதுவே மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத உண்மைச் செல்வ மென்பார், 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்றும், கல்வியுடையார் சென்ற விடமெல்லாம் சிறப்புறுவர் என்பார், 'யாதானு நாடாமால் ஊராமால்' என்றும், இவ்வுலகத்தே யன்றி இனிவரும் பிறவிகளிலும் உடன்மேவி நற் பயன் விளைக்கு மென்பார், 'ஒருமைக்கட் டான் கற்ற கல்வி யொருவற்—கெழுமையு மேமாப் புடைத்து' என்றும், அச் செந்நாப் புலவர் அருளிச் செய்துளார். இக் கல்வியே வாழ்க்கைத் துணை, மைந்தர், துணைவராக நின்று மக்கள் நன்னலம் ஓம்பும் என்பதும், இது, கற்ரேரை, அவரினும் ஆண்டு, குடிப்பிறப்பு முதலியவற்ருல் மிக்கோரினும் உயர்த்தும் என்பதும், அவரை, அரசரினும் தேவரினும் நான்முகனினும் சிறப்பிக்கு மென்பதும் புலவர் பெருமக்கள் கூறிய பொருளுரைகளால் அறியலாகும்.

நூல் வழக்கில் இங்ஙனமெல்லாம் அறியப் பெறும் கல்வியின் சிறப்புக்கள் அளவிடற் பாலன வல்ல. உலக நிகழ்ச்சியில் எந்நாடு கல்வியறிவான் மேம்பட்டு நிலவுகின்றதோ, அந்நாடு அதன்பயனுக மிக்க செல்வத்தினையும், பிறநாடுகளை வென்ரேங்கும் பெருமையினையும் அடைந்து மிளிர்தலை நாம் கண் கூடாகக் காண்கின்ரே மன்ரே. எனவே ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் கல்வி வளத்தினைப் பற்றி நிற்கின்ற தென்பது முடிந்த முடிபாகும்.

இனி நமது நாட்டின் பண்டை நல்வாழ்வின் வளர்ச்சிக்கும், இதுபோதுள்ள தளர்ச்சிக்கும் கார

ணம், பொதுவாக நாட்டிற்கும், சிறப்பாக் நாட்டின் உயிர்நிலை போன்ற நாட்டுப்புற ஊர்கட்கும் பண்டும் இன்றும் மேவிய கல்வி நிலையேயாம். இங்கு, நாட்டுப் புறங்களின் கல்விபற்றிச் சிறிது ஆராய்வாம்; அங்ஙனம் ஆராயுமிடத்து அக்கல்வி நிலைக்குப் பொறுப்புடைய நாட்டாண்மைக் கழகம் முதலிய வற்றின் கடமைகளும் ஆராயப்பெறும்.

கல்விப் பயிற்சி முறையானது சிலகாலமாக நாளுக்குநாள் மாறுபட்டு வருகின்றது. இதுகாறும் 'இதுவே சிறந்தது, இதுவே முடிவானது' என எதுவும் துணியப்பட்டிலது. இவ்வுண்மைக்குக் கல்விப் பயிற்சி முறையில் அவ்வப்போது காணும் மாறுதல்களே ஏற்ற சான்றுகள். ஒரு நாட்டின் கல்வி முறை எத்தகைய சிறப்புக்களைக் கொண்டுள்ள தாயினும் ஆக: அது அந்நாட்டினர் 'நித்தல் நிகழ்ச்சி' யாகிய குடிவாழ்க்கைக்கு முற்றும் பொருந்திய தொன்றாக விருத்தல் இன்றியமையாததாகும். மக்கள் வாழ்க்கைநிலையாகிய உடம்பிற்குக் கண் போன்று இன்றியமையாத உறுப்பாகி உதவவேண்டியது இக்கலையே யாகும். இவ்வுண்மையினை 'எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்', 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங் — கண்ணென்ப வாழுமுயிர்க்கு' என்ற தமிழ்ப் பெரியார்கள் வாய்மொழிகளான் உணரலாம். இதனையே, 'பொருந்து கல்வி' என்பர் கம்பர். ஆகவே, நமது நாட்டுப்புறங்களில் இதுகாலை நிகழுங் கல்வி முறை, அவர்தங் குடிவாழ்க்கைக்கு எத்துணை பொருந்தி யுளது எனச் சிறிது ஆராய்வோம்.

நாட்டுப்புறங்களிற் பயிலத்தகுங் கல்வி, முற்றும் தொடக்கக் கல்வியேயாம். தொடக்கக் கல்வி, படித்தல், எழுதல், கணக்குப் பார்த்தல் எனும் முக் கலையாக முடியும். இங்ஙனம் படிக்கவும், எழுதவும், கணக்குப் பார்க்கவும் கற்றுக்கோடலாகிய அந்தக் கல்வியானே, அவர்கள் தங்கள் வாழ்க்கை நிலைக்குரிய பல்வகை யறிவுகளையும் பெறவேண்டியவராவர். மேலும், நாட்டுப்புறச் சிறுவர்கள், நெடுங் காலங் கல்லூரிகளிற் கல்வி பயிலும் பெரும்பேறு வாய்ந்த நகர மக்களைப் போல்வாரல்லர். இவர் தம் பிழைப்புநெறி பற்றிய வேளாண்மைத் தொழில் ஐந்தாண்டு புகுவதற்கு முன்னுந் தொடரும்; அல்லும் பகலும் அகலாது மேவும்; வாணாள் முற்றும் நிலையும். தங்கள் ஊர்க்கு ஒரு பள்ளிக்கூடம் அமைதலாம் நல்லூழும், தங்கட்குச் சிறிது படித்தற்குரிய நல்லூழும் ஒருங்கு உளவாயவழி, மிகின் நான்கைந்து ஆண்டுகள் பள்ளிக்கூடம் சென்று படித்தற்குரியார் இவர்கள். எனவே நாட்டுப்புற மாணவர்கள், மேற்கூறிய தொடக்கக் கல்வியானே, மேற்கூறிய சிற்றெல்லையினுள்ளே, தம் குடிவாழ்க்கைக்கு இன்றியமையாது தாம் அறிதற்குரியன பலவற்றையும் அறிய வேண்டுவாராகின்றனர்.

நாட்டுப்புற மாணவருக்கு வேண்டும் முக் கலையினுள், படித்தல், எழுதல் என்னும் இரண்டினையும் முன்னர் எடுத்துக்கொள்வாம். பண்டைப் படிப்பு முறையில், எழுத்துக்கள், பேரறிஞர்களாகிய புலவர்கள் பற்பல சிறந்த வழிகளைப் பற்றி, அகரம் முதலாக அமைத்துள்ள முறைகொண்டு பயிற்றப்

பட்டன; ஆனால், இக் காலத்தோ, சிற்சிலர் அம் முறை வைப்பின் கருத்தும், நயமும் சிறிதும் ஓர்ந் திலராய், தத்தம் மனம்போன போக்கில், டகரம் லகரம் முதலாய எழுத்துக்களை முன்னர் அமைத்து எழுதிய பாடங்களைக்கொண்டு பயிற்றப்பட்டு வரு கின்றன. இங்ஙனம் பழைய முறையை மாற்றியதற் குக் கூறப்படுங் கருத்துக்களுட் 'காலச்சுருக்க முள்ள முறை' என்பதும் ஒன்றாகும். அது உண்மை யாயின், மிகச் சுருங்கிய காலத்திற் கல்வி பெற வேண்டிய நாட்டுப்புறத்தினர்க்கே அது ஒரு நல் விருந்தாகும். புது முறைப் பாடங்களில் உள்ள எழுத்துக்களை மட்டில் உணர்ந்து கொள்ளும் மாண வர்கள், பல வகுப்புக்கள் கடந்தும், சில எழுத்துக் களையே உணர்கின்றிலரே. தமிழிலுள்ள எழுத்துக் களையெல்லாம் ஒருங்கே நிரல்பட அறியா இவர்கட் குப் பிற்காலத்தே 'அகராதி' பார்க்கும் வழிதானுந் தெரிந்திலது. மற்றும், 'எளிதில் எழுதியறியும் எழுத் துக்களாதலின், டகர முதலிய நேர் கோட்டெழுத் துக்கள் முன் வைக்கப் பெற்றுள' என்பதொரு கூற் றாகும். சிறுவர்கள் கையில் எழுது கருவி யளித்து, அவர்கள் தாமாக விரும்பியதை வரையச் செய்து பார்க்கின், அவர்கள் மனது எளிதிற் சுழிசுழியாக வரைவதிற் செல்வதும், நேர் கோடுகளாக வரை வதிற் செல்லாமையும் கண்கூடாகக் கண்டறியலாம். மேல் வகுப்புப் பாடங்களிலோ, நாட்டுப்புற மக்க ளுக்கு இன்றியமையாது வேண்டுவன சிறிதுங் காணப்படாமல், பிறநாட்டு நகரங்களின் சிறப்பும், ஆங்குள்ள பலர் வரலாறுகளும் பிறவும் பாடங் களாக அமைந்துள்ளன. இவையெல்லாம் நமது நாட்

டுப்புறச் சிறுர் கல்விக்குப் பெரும் பயன்படுவன வல்ல. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி முதலிய நீதிநூற்செய்யுட்கள் மிக இன்றி யமையாதனவாகவும், அவற்றை முழுவதும் ஒழித்தோ, சிலவற்றைப் பொறுக்கி முறை பிறழ அமைத்தோ இக்காலத்துப் பாட நூல்கள் தோன்று கின்றன. நாட்டுப்புறத்தினர்க்கு அண்மையில் உளவாய் அவர்களால் நாடோறும் உணரப்படும் பொருள்களைக்கொண்டு, பொருட் பாடமாக விளங் கும் வாக்குண்டாம் முதலிய நீதிநூல்களின் பாட்டு கட்கும், இக்காலத்தே புதிது புதிதாகத் தோன்றும் பலவகை 'அபிநயப்' பாட்டுக்கள் முதலியவற்றிற்கு முள்ள உயர்வு தாழ்வுகள் அறிஞர்களால் உணரப் படுவனவாகும். எது எங்ஙனமாயினும், நமது நாட் டுப்புறச் சிறுவர்கட்கு எத்தகைப் புது நூல்கள் பயிற்றப்படினும், பண்டைப் பயிற்சியில் அமைந்து கிடந்த நீதி நூல்கள் இன்றியமையாது முறையாகப் பயிற்றப்படல் வேண்டும்.)

நாட்டுப்புற மாணவர்கட்கு வேண்டும் கணக்கு, பின்னமன்று; உத்தமப் பொது மடங்கு அன்று; அதமப் பொது அளவு அன்று; தசாம்சம் அன்று; இன்னோரன்ன எதுவுமன்று. அவர்கட்கு வேண்டும் கணக்கெல்லாம், இலக்கம், நெல் இலக்கம், கீழ்வா யிலக்கம், குழிமாற்று, சதுரம் முதலாகிய எண்சுவடி களில் அடங்கிவிடும். 'கலம் மூன்றரையே அரைக் காலும் பைசா ஆறும் ஆயின், ஒரு படி நெல் எவ் வளவெனக் கணக்கிடப் பெரிய தாளும், பல நாழிகை நேரமும் அவர்கட்கு வேண்டுவதில்லை. அவற்றை

உடனே பார்த்துச் சொல்லவேண்டும் மனம் ஒன்றே உடைய எளிய நிலையினராதலின், அவர் கட்கு ஆங்கிலக் கணக்கு முறை பெரும்பாலும் ஒவ் வாததாகும். மேற்கூறிய எளிய கணக்கு முறைகளே போதியனவாகும்.

இவ்வாறாய படித்தல், எழுதல், கணக்குக்களைக் கொண்டு நமது நாட்டுப்புற மாணவர்கள் பள்ளியில் உணர்ந்து கோடற்குரிய பொது அறிவுகள் பல. அவற்றுள் சிற்சிலவற்றை ஈங்குக் கூறுவாம். பொது வாகவே, கல்விபயிலும் மாணவர்கள், ஆசியாக் கண் டத்தின் எல்லை, ஐரோப்பாக் கண்டத்தின் உட் பிரிவு கள், அமெரிக்காக் கண்டத்தின் ஆறுகள், மலைகள் முதலியனவற்றை யெல்லாம் உணர்வதன் முன்னர் உணரற்பாலன, தங்கள் ஊர், நாடு, நகரம், தேயம் முதலியவற்றின் எல்லை, பிரிவுநிலை முதலியனவாகும். ஆகவே, ஒரு நாட்டுப்புற மாணவன் முதலாவதாகத் தன் ஊரின் பெயர்க்காரணம், தன் ஊரைச் சுற்றிலு முள்ள ஊர்கள், தன் ஊரின் முற்றளவு, அதன்கண் உள்ள நன்செய், புன்செய், தோட்டம், குடியிருப்பு, புறம்போக்கு முதலிய பொது நிலைகளின் தனித்தனி அளவு—என்று இன்னோரன்னவற்றை நன்குணர்த லோடு தன் ஊரைப்பற்றிய படத்தில் மேற்கூறிய பல்வகை யமைப்புக்களையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதன் சார்பாக அம்மாணவன் நிலம் அளப்பதற்கு வழங்கும் அளவு கருவிகளின் வகை களையும், ஒரு நிலத்தைத் தானே அளந்து பெருக்கி முற் றளவு காணும் வகையையும், ஒரு நிலத்தை வேண்டி யாங்கு, பிரித்துப் பங்கிடும் ஆற்றலையும், பழக்க வகை

யான் உணர்தல் வேண்டும். இரண்டாவதாக, நிலங்களில் பயிரிடுங் குடிகள், நிலக்கிழவர், மேலுரிமையாளராகிய அரசியலார் எனும் இவர்கட்கு உரிய உரிமைகள் யாவை? விளைவுப் பொருள்பற்றியாதல், தொகைபற்றியாதல், அவரவர் பெறலாகும் பகுதிகள் எத்தகையன? எவ்வளவின? எனும் இவற்றை நன்குணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றோடு அந் நிலங்களைப் பற்றியனவும், பொதுவாக அமைந்துள்ளனவுமான சாலைவரி, தண்ணீர்வரி, ஊர் ஊழியர்வரி, காவல்வரி, கல்விவரி முதலிய பல வரிகளின் போக்கையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மூன்றாவதாக, பயிரிடப்படும் ஒவ்வொரு கூலத்தின் விதைப்பு, நடவுக்காலங்கள், அறுப்புக் காலங்கள் முதலிய காலவகைகளையும், விளைந்த நிலையில் அவ்வந் நிலத்தேயுள்ள விளைபொருளின் மதிப்பையும் பழக்கத்தால் உணர்தல் வேண்டும். தானியங்களைப் பங்கீடு செய்யவோ, தொகை காணவோ அளந்து பழகுதல் வேண்டும். நான்காவதாக, வெளியிடங்களிலிருந்து வரும் அஞ்சல்களைப் படித்தறியவும், தாங்களாகவே அஞ்சல் எழுதியனுப்பவும் பழகிக்கொள்ளல்வேண்டும். அறநெறி மன்றம், கூட்டுறவுச் சங்கம் முதலியவற்றின் ஒழுங்கு முறைகளைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஐந்தாவதாகத் தங்கள் பிற்கால வாழ்க்கையில் உள்ள ஒய்வுகளைப் பயன்படுத்த வல்லனவும், சிறு கைத்தொழில்களுமாகிய நூற்றல் நெய்தல் முதலியவற்றில் இயன்ற பழக்கங்கள் செய்துகொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் இவர்கள் கலை பயிலும் காலத்து உணர்தற்குரிய பொது அறிவுப் பாடங்கள் பலவாகும்.

நாட்டுப்புறங்களில் உள்ள பள்ளிகளில் மாண வர்கள் நாலைந்து ஆண்டுகள் பயில்வதால், அந்நாட் டுப்புறங்கள் கல்வி நிலையின் பயனை அடைந்துவிட் டதாகக் கூறல் இயலாது. இப்போதுள்ள முறையில் எல்லாப் பிள்ளைகளும் கல்வி பயிலவேண்டும் என்னும் கட்டாயம் இல்லாமையாலும், கல்வியின் உயர்வு நாட்டுப்புறங்களில் நன்கு உணரப்படாமையாலும், அங்குள்ள பிள்ளைகளில் நூற்றுக்கு ஒருபதின்மர் அளவுதானும் கல்வி பயில்வதில்லை. எனவே நாட்டுப் புறங்கள் கல்வியின் பயனடைந்து, உலக முன்னேற் றத்தில் கலந்து கொள்ளல் வேண்டும் என எண்ணும் நாட்டாண்மைக் கழகங்கள், அங்குள்ள பிள்ளைகள் இத்துணை ஆண்டுகள் கட்டாயக் கல்வி பயிலுதல் வேண்டுமென்னும் நியதி செய்தல் முதன் மையானது. பிள்ளைகளேயன்றி முதியோர்களும் கல்வியின் பயனடையுமாறு, இராப்பள்ளிக்கூடங் கள் வைத்து முதிய மக்கள் மனத்தைக் கவரும் உல கச் செய்திகள், சமயப் பெரியார் வரலாறுகள், உட னல வழிகள், செல்வ வளர்ச்சி நெறிகள், நாட்டுமுற் போக்கிற்குரிய நன்னெறிகள் முதலாய பலவற்றை விரிவுரை செய்யவல்ல ஒரு ஆசிரியரை அதற் கென்றே அமைத்தலோ, அங்குள்ள பள்ளியாசிரியர் கட்கு அச் செயற்கென்றே தனி ஊதியம் அளித்து அத்தொழிலினையும் இணைத்தலோ இன்றியமையா ததாகும். இன்னும் மேற்கூறிய விரிவுரைகளை இயற்றவல்லார் சிலரைக்கொண்டு, ஒலி பரப்பும் கருவிகளுடன், நாட்டுப்புறத்திற்கு வேண்டிய நூனிலையத்துடன், ஊர் ஊராகச் சென்று தங்கி விரி வுரை முதலியவற்றைச் செய்துவரும் ‘மோட்டார்’

வண்டி யமைப்பு, இக் காலத்திற்கேற்ற சிறந்த முறை யாகும். இத்தகைய புதிய முறையினைத் தஞ்சை நாட்டாண்மைக் கழகம் செய்துவருவது மிகவும் போற்றத் தக்கது. நாட்டாண்மைக் கழகங்களும் அரசியலாரும் நாட்டுப்புறங்களின் கல்வியில் கருத் தூன்றி, அதனை உலக முன்னேற்ற நெறிகளோடு இணைக்குங் காலமே, நாட்டின் உயர்நிலை வாழ்க்கை தொடங்குங் காலமாகும்.

## 7. எண் சுவை

செந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் இலக்கண நூல், தொல்காப்பியம் என்னும் அரிய பெரிய நூலாகும். இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற முப்பெரும் பிரிவுகளை யுடையது. இவற்றுட் பொருளதிகாரம், தமிழ் இலக்கணத்தின் கண்ணே சிறப்பாக அமைந்துள்ள அகப்பொருள், புறப்பொருள் என்னும் பொருட் பாகுபாடுகளை முதற்கண்ணே கொண்டு மிளிர்கின்றது; பண்டைத் தமிழரின் அகவாழ்க்கை புறவாழ்க்கை இயல்புகள் இங்கு விரித்துக் கூறப்பெறுகின்றன. இவ்விரு பொருள்களையும் கொண்டு இயற்றப்பெறும் செய்யுளின் இயல்புகளும் சில மரபுகளும் அவ்வதிகாரத்து இறுதியில் ஒளிர்கின்றன. அப்பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி, செய்யுட்கு அணிசெய்வனவாகிய மெய்ப்பாடு, உவமம் என்ற இரண்டின் இயல்கள், அவற்றின் இடையே, நடுமணிகளாகப் பொலிகின்றன. இங்குக் கூறிய மெய்ப்பாட்டியலில் முதற்கண் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாய்ச் சிறந்து நிற்கும் எட்டு மெய்ப்பாடுகளின் பொருட் சுருக்கமே ஈங்கு எண் சுவை என்று கூறப்பெறுவது. மெய்ப்பாடு எனினும் சுவை யெனினும் ஒக்கும். வடமொழியுள்

நவரசமென்றும், தமிழில் ஒன்பான் சுவை யென்றும் கூறப்பெறும் சுவைகளுள், வடமொழியுள் மத்திமம் என்றும், தமிழில் நடுநிலையென்றும் கூறப்பெறும் சுவை, இவற்றைப் போன்று சிறந்து விளங்காமையின், அதனை யொழித்துச் சிறந்து விளங்கும் ஏனை எண் சுவைகளுமே இலக்கியங்களிற் போற்றப் பெறுவனவாகும். ஆகவே இலக்கணங்களும் அவைகளையே கொண்டு கூறுவன ஆயின.

தொல்காப்பிய மெய்ப்பாட்டியற் பொருள்களை விரித்து விளக்கும் உரைகளுள் இதுபோதுள்ளன இளம்பூரனர் உரை (இளம்பூரணம்) பேராசிரியர் உரை (பேராசிரியம்) என இரண்டாகும். நச்சினர்க்கினியர் உரை (நச்சினர்க்கினியம்) நூல்முழுவதற்கும் உளதாயினும், இவ்வியலுக்குரிய அவ்வுரைப் பகுதி, இதுபோது காணப்பெறுவதின்ருயிற்று. மேற் கூறிய இளம்பூரணர், பேராசிரியர் உரைகள் இரண்டும், நூலின் உயர்விற்கேற்ப, உயர்ந்த நடையும் ஆழ்ந்த கருத்தும் உடையனவாக இருத்தலின், மாணவர்கட்கு எளிதாக விளங்கும் பொருட்டு, அம்மெய்ப்பாடு எட்டன் இயல்புகள் பற்றி, அவ்வுரையிற் காணும் பொருள்களை ஒராற்ருன் வரிசைப்படுத்திக் கூறுவதே இக் கட்டுரையாகும். இவ்வுரைகளுட் பேராசிரியம் என்பது, இளம்பூரணத்தின் பிந்திய காலத்ததாய் அந்த உரையினையும் ஆய்ந்து எழுதிய விரிந்த உரையாக இருத்தலின், அதனைப் பெரிதும் தழுவியும், இளம்பூரணம் வேறுபடும் இடங்களிற் சிறந்தனவற்றை, ஆங்காங்கு எடுத்துக் காட்டியும் இக் கட்டுரை செல்லாநிற்கும்.

## சுவைகள்

இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு—என்பன அறுவகைச் சுவைகள் எனப்படும். இச் சுவைகள், நாவாகிய பொறிவழியாக ஒருவர் உள்ளத்தே தோன்றும் உணர்ச்சிகள். இச் சுவையுணர்ச்சிகளைத் தரும் பொருள்கள், முறையே கரும்பு, வேம்பு, புளி, உப்பு, கடுக்காய், மிளகு போன்றவைகளாகும். இவை சுவைப் பொருள்கள் ஆகும். கரும்பினை நாவாகிய பொறியாற் சுவைத்துணருமிடத்து, இனிப்புச் சுவையுணர்ச்சி தோன்றும்; அங்ஙனம் தோன்றுங்கால், அதுகாரணமாக உள்ளத்தே விருப்புத் தோன்றும். இங்ஙனமே வேம்பின் இலை காய்களைச் சுவைத்துணருமிடத்து, கைப்புச் சுவையுணர்ச்சி தோன்றுங்கால், அதன் வழியாக உள்ளத்தே வெறுப்புத் தோன்றும். இங்ஙனம் உள்ளத்தே தோன்றும் விருப்பு, வெறுப்புக்கள் உள்ளக் குறிப்புக்கள் என்று கூறப்பெறும். இத்தகைய உள்ளக் குறிப்புக்களைக் கொண்டு, இச் சுவையுணர்ச்சிகள் வெளிப்படுங்காலை, முகமலர்ச்சி, முகச் சுளிப்பு முதலாய மெய்க்குறிகளைக் கொண்டு பிறர் அறியுமாறு வெளிப்படும். இங்ஙனம் இச் சுவையுணர்ச்சி வெளிப்படுங்கால் தோன்றும் மெய்க்குறிகள் விறல் அல்லது சத்துவம் எனப்படும்.

எனவே, ஒரு சுவையின் இயல்பினை எண்ணி அறியுமிடத்து, காரணகாரிய முறையாக, சுவைக்கு நிலைக்களனாகிய பொருள், சுவை, குறிப்பு, விறல் — என நான்குவகைப் பொருள்களை உணர்ந்து கொள்ளுகின்றோம்.

மெய்ப்பாடு என்பது வெளிப்படுவது என்று பொருள்படும். ஊன்றி நோக்குமிடத்து, சுவையுணர்ச்சியே, விருப்பு வெறுப்பு முதலியவைகளைத் தந்து, மெய்க்குறிகளுடன் வெளிப்படுவதாகலின், சுவைகட்கு மெய்ப்பாடு என்னும் பெயர் பொருந்துவதாதல் உணர்ந்து கொள்ளலாம்.

## எண் சுவை

இங்ஙனம் நாவாகிய பொறியினால் அறியப் பெறும் அறுவகைச் சுவைகள் போன்றனவாய், அவ்வொப்புமையான் வரும் சுவை யென்னும் பெயரினவாய், கட்பொறியானும் செவிப்பொறியானும் அறியப்பெறும் சுவைகள்-மெய்ப்பாடுகள்-எட்டு உள்ளன. அவை, நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை என்பன ஆகும். இந்த எண் வகைச் சுவைகள் - மெய்ப்பாடுகள் - இவை எனக் கூறும் சூத்திரம் :

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்(று)
அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப'

என்பதாகும்.

[இளிவரல் - இழிவு ; மருட்கை - வியப்பு ; பெருமிதம் - வீரம்.]

இச் சுவைகள் கண்ணினும் செவியினும் உணரப் படுவன என்பது, 'கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்' என்று தொடங்கும் மெய்ப்பாட்டியற் புறனடைச் சூத்திரத்தான் அறியப்படும்.

இவற்றுள் ஒவ்வொன்றும் மேற்கூறியாங்கு, பொருள், சுவை, குறிப்பு, விறல் என்ற வகைகளைப் பெறலின், மெய்ப்பாடு முப்பத்திரண்டாகும்.

இதுகாறும் கூறியவை:—நாவான் அறியப்படும் அறுவகைச் சுவை போன்று, கண்ணினும் செவியினும் அறியப்படும் சுவைகள் நகை முதலிய எட்டாகும்; பொருள், சுவை, குறிப்பு, விறல் என்ற வகைகளால், இவை எட்டும், எண்ணான்கு முப்பத்திரண்டாகும் என்பன வாகும்.

இவற்றை இவ்வுரைகள் விளக்கிக் கூறுமாறு:

'பேயானும் புலியானும் கண்டாளொருவன் அஞ்சிய வழி, மயக்கமும் கரத்தலும் நடுக்கமும் வியர்ப்பும் உளவாகின்றே. அவற்றுள் அச்சத்திற் கேதுவாகிய புலியும் பேயும் சுவைப்படு பொருள். அவற்றைக் கண்டகாலந் தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை. அதன்கண் மயக்கமும் கரத்தலும் குறிப்பு. நடுக்கமும் வியர்ப்பும் சத்துவம். இவற்றுள் நடுக்கமும் வியர்ப்பும் பிறர்க்கும் புலனாவது என்று கொள்க. ஏனைய மன நிகழ்ச்சி'...இளம்பூரணம். 'சுவைக்கப் படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துட் பட்டவழி உள்ளத்து நிகழும் குறிப்பும், குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீர் அரும்பலும் மெய்ம்மயிர் சிலிர்த்தலும் முதலாக உடம்பின் கண் வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி, அச்சுவை யெட்டோடுங் கூட்டி ஒன்று நான்கு செய்து உறழ, முப்பத்திரண்டா மென்பது' எனவே, சுவைப் பொருளும், சுவை யுணர்வும், குறிப்பும், விறலுமென நான்காயின. விறல் எனி

னும் சத்துவம் எனினும் ஒக்கும். 'பொறியுணர்வுகள் அவ்வச்சுவை யெனப்படும்' : பேராசிரியம்.

இங்குக் காணும் முப்பத்திரண்டு ஒருவகை.

இனி, மற்றொரு வகையிலும் இச் சுவைகள் முப்பத்திரண்டாகிய வகையினைப் பெறும். அது வருமாறு :—

சுவைகள், சுவை தோன்றும் நிலைக்களன்கள் (பொருள்கள்) ;

| | | | |
|---|---|---|---|
| 1. | நகை | எள்ளல், இளமை, பேதைமை, மடன். | 4 |
| 2. | அழுகை | இளிவு, இழவு, அசைவு, வறுமை. | 4 |
| 3. | இளிவரல் | மூப்பு, பிணி, வருத்தம், மென்மை. | 4 |
| 4. | மருட்கை | புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம். | 4 |
| 5. | அச்சம் | அணங்கு, விலங்கு, கள்வர், இறை. | 4 |
| 6. | பெருமிதம் | கல்வி, தறுகண், இசைமை, கொடை. | 4 |
| 7. | வெகுளி | உறுப்பறை, குடிகோள், அலை, கொலை. | 4 |
| 8. | உவகை | செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு. | 4 |
| | | | 32 |

இங்ஙனம், இச் சுவைகள், தாம்தோன்றும் நிலைக் களன்களால் முப்பத்திரண்டாதலும் உண்டு.

'முப்பத்திரண்டாவன :— நகை முதலான வற்றிற் கேதுவாம் எள்ளல் முதலாக விளையாட் டீருக... ஓதப்படுகின்றன......இளம்பூரணம்.

(இவைபற்றிய சூத்திரங்கள் பின் ஆங்காங்கே கூறப்பெறும்.)

இங்குக் காணும் முப்பத்திரண்டு மற்றொரு வகை.

### தோற்றுவாய்

'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப.'

என்பது முதற் சூத்திரம். மெய்ப்பாடு என்பன 'பண்ணை' என்பதன் வழியாகத் தோன்றும்; அவை, முப்பத்திரண்டு பொருளாம். அவற்றுற் கருதப் பெறும் பொருட் பகுதி, பதினாறாக அடங்கும் என்பது இச்சூத்திரத்துக் குறிக்கப்படும் பொருட் சுருக்கம்.

இது நாடக நூலார் கொள்கை என்பதும், தொல்காப்பியர் இக்கொள்கையினை முதலில் எடுத்துக் காட்டி, மேலே, தம் கொள்கையினைக் கூறுகின்றார் என்பதும் உரைகாரர்கள் கருத்து.

இங்குக் கூறிய பண்ணை என்பது விளையாட்டு; இது ஆகுபெயராகி, விளையாடும் ஆயத்தினைக் குறிக்கும்; இந்த ஆயம் கற்று வல்லாராய் நல்லொழுக்கம் மேற்கொண்ட அறிவுடையார் கூட்டம் அன்று; இந்த ஆயத்தாரிடைத் தோன்றுவனவாய், மேற்கூறியாங்கு சுவை தோன்றும் எள்ளல் முதல் விளையாட்டு ஈருகவுள்ள (இரண்டாம் வகையாய) முப்பத்திரண்டு பொருள்களின் புறத்தே தோன்றுவனவாய் உள்ளன பதினாறு மெய்ப்பாடுகள்; அவை சுவை எட்டு; சுவைகளின் குறிப்பு எட்டு - ஆகப் பதினாறாகும் — என்பது இளம்பூரணர் உரைக்கருத்து.

இனி, பண்ணை என்பது முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினோர், நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளையாட்டு என்பதும், அதனைக் கூறும்

நாடக வழக்கிற்கு உரிய பகுதிகள், முற் கூறியாங்கு பொருள், சுவை, குறிப்பு, விறல் என்ற நான்கு வகைகளால் ஆகும் முப்பத்திரண்டும் ஆகும் என்பதும் (முதல் வகை முப்பத்திரண்டு) அவை தாமும் பொருளும் சுவையும் ஒன்ருக எட்டும், குறிப்பும் சத்துவமும் ஒன்ருக எட்டும் ஆகி, இங்ஙனம் பதினருக அடங்கும் என்பதும் பேராசிரியர் கருத்து.

எனவே இவ்விரு உரைகாரர்களும், இங்குக் கூறிய பண்ணை என்பது இன்னது, முப்பத்திரண்டாவன இன்னவை — என்பதிற் பெரிதும் கருத்து மாறுபடினும், அவை பதினருக முடியும் பொருள் இன்னவை என்பதில் ஒன்றிய கருத்தினராதலே உணர்க.

### மெய்ப்பாடு எட்டு ஆவது

**நாலிரண் டாகும் பாலுமா ருண்டே (சூ - உ)**

அவை எட்டாகவும் அடங்கும் என்பது இதன் கருத்து. இதுமுதல் தொல்காப்பியர் தம் மதம் கூறுகின்ருர் என்பது இளம்பூரணர் கருத்து. எட்டாகும் பகுதியும் உண்டு என்று கூறிய உம்மையால் நடுநிலையுடன் ஒன்பதாகும் பகுதியும் உண்டென்பது பெறப்படலால், இதுவும் பிறர் மதம் கூறல் ஆகும் என்பது பேராசிரியர் கருத்து. இங்குக் கூறப்படும் எட்டு - நகை முதலிய எண் சுவைகளாகும்.

### I. நகைச் சுவை

நகை - சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும் அளவே சிரித்தலும் பெருகச் சிரித்தலும் என மூன்று

வகைப்படும். நகைதோன்றும் இடங்கள் மிகப் பல வாகும். அவை :—

உடனிவை தோன்று மிடம்யா தெனினே
முடவர் செல்லும் செலவின் கண்ணும்
மடவோர் சொல்லும் சொல்லின் கண்ணும்
கவற்சி பெரிதுற் றுரைப்போர் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணும்
சுற்றத் தோரை யிகழ்ச்சிக் கண்ணும்
மற்று மொருவர்கட் பட்டோர் கண்ணும்
குழவி கூறும் மழலைக் கண்ணும்
மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலியின் கண்ணும்
ஒல்லார் மதிக்கும் வனப்பின் கண்ணும்
கல்லார் கூறுங் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை யலியின் கண்ணும்
ஆண்பிரி பெண்மைப் பேடிக் கண்ணும்
களியின் கண்ணும் காவாலி கண்ணும்
தெளிவிலா ரொழுகும் கடவுளார் கண்ணும்
ஆரியர் கூறுந் தமிழின் கண்ணும்
காரிகை யறியாக் காமுகர் கண்ணும்
கூனர் கண்ணும் குறளர் கண்ணும்
ஊமர் கண்ணும் செவிடர் கண்ணும்
ஆன்ற மரபி னின்னுழி யெல்லாம்
தோன்று மென்ப துணிந்திசி னோரே.

என்னும் செயிற்றியனார் கூற்றினால் அறியலாகும்.

இங்ஙனம் பற்பலவாக விரியுமாயினும், அவைகளை வகைப்படுத்துமிடத்து, முற்கூறியாங்கு, எள்

ளல், இளமை, பேதைமை, மடன் என நான்கில் அவைகள் அடங்கி விடும்.

'எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப' (சூ. 4.)

இவற்றுள், எள்ளல் என்பது, தான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்ட வழி தான் நகுதலும் என இரண்டாகும் என்றும், இங்ஙனமே பிறவும் வருமென்றும் கூறுவர் பேராசிரியர். இதுவே இளம்பூரணர் கருத்தும் என்பது, 'எள்ளல் இளமை யெனப் பொதுப்பட்டு நின்றமையால், தன் மாட்டு நிகழும் வழியுங் கொள்க' என்ற அவர் உரையால் அறியலாம்.

க. எள்ளல் பற்றி வரும் நகை

(1) தான் பிறர் குறை கண்டு அவரை இகழ்ந்து கூறி நகைப்பது: ஒரு தோழி, ஒரு தலைவன் தன்னிடம் பலகாலும் அலைந்து தலைவியை உடன்படுத்த வேண்டுவது குறித்து, 'நின் பெருமைக்கு இஃது ஒவ்வாது' என்று இகழ்ந்து கூறி, நகைப்பினும் அவன் மீண்டும் மீண்டும் வருகின்றான் :—

'எள்ளி நகினும் வரூஉம்'

இது, தோழி, தலைவனை எள்ளி நகைத்துக் கூறியது.

(2) தன்னைப் பிறர் (அறியாமையால்) இகழ்ந்து கூற, அது கண்டு தான் நகைப்பது.

ஒரு தலைவி, தன் அன்னையை மதியாது இகழ்ந்து, தான் ஒரு தலைவனது கூட்டுறவை நாடி நிற்க, அன்னை அது கண்டு நகைத்துப் போகின்றாள் :—

'நல்லை மன்னென நகூஉப் பெயர்ந்தோளே'

இது, மகளால் எள்ளப்பட்ட வழி, தாய் நக்கதனைக் கூறியது:

உ. இளமை பற்றி வரும் நகை

(1) தன் இளமைத் தன்மையால் பிறரை நகுவது.

ஒரு தலைவன், தன் தலைவியை, விளையாட்டு நெறியில், நடுங்கச் செய்தற்கு, தான் மிகக் கொடிய காட்டின் வழியே செல்ல விருப்பதாகக் கூறி, அவள் நடுங்குதல் பற்றி நகைத்தனன்:—

'நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே'

(இது தோழி கூற்று.) இது, தலைவன் தன் இளமைத் தன்மையால் பிறரை அஞ்சுவித்து நக்கது.

(2) பிறர் இளமை பற்றி வரும் நகை.

ஒரு தலைவி, தன் குழந்தையை மடியில் வைத்து, அவன் தந்தையின் குறைகளைக் கூறி, அவ்வாறு ஒழுகாதே என்றும், தந்தையின் நிறைகளைக் கூறி, அவ்வாறு ஒழுகுவாயாக என்றும் கூறிவரும் அளவையில், அத்தந்தை, தலைவியின் பின்புறம் வந்து மறைந்து நிற்க, அவனைக் கண்ட குழந்தை நகுகின்றது. பின் உண்மை யுணர்ந்த தலைவி குழந்தையின் இளமைச் செயல் கண்டு தானும் நகைக்கின்ருள்:—

'திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்'

இவ்வாறு தலைவி கூறித் தானும் நகைக்கின்ருள். இது குழந்தையின் இளமை கண்டு தாய் நக்கது.

## ௩. பேதைமை பற்றி வரும் நகை

(1) தன் பேதைமை பொருளாக வரும் நகை.

பேதைமை - கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல் என இளம்பூரணரும், அறிவின்மை எனப் பேராசிரியரும் கூறுவர். ஒரு தலைவி தாய் தன்னை வெகுண்டதன் நலத்தினைத் தன் பேதைமையால் உணராது, அதுபற்றி நகைக்கின்றாள் :—

'நகைநீ கேளாய் தோழி'

இது, தலைவி தன் பேதைமை பொருளாக, தாயின் உரை நலம் உணராது நக்குத் தோழிக்குக் கூறியது.

(2) பிறன் பேதைமை பற்றி வரும் நகை.

ஒரு பாணன், தலைவற்காகத் (தலைவி) யறியாது பரத்தையரிடத்துத் தூது செல்பவன், அத்தலைவியின் வீட்டினுள்ளே வந்து புகுந்து, தலைவியைக் கண்டு கலங்கித் தொழுது நிற்கின்றான். அது கண்ட தலைவி நகைக்கின்றாள் :—

'நகையா கின்றே தோழி ... ... ...

மம்மர் நெஞ்சினன் தொழுதுநின் றதுவே.' இது பாணன் பேதைமை கண்டு தலைவி நகைத்துத் தோழிக்குக் கூறியது.

## ௪. மடமை பற்றி வரும் நகை

(1) தன் மடத்தால் தனக்கு நகை தோன்றுவது.

ஒரு தலைவி, தன் தலைவனை நோக்கி, பண்டு நீ கூறியதை மெய்யாகக்கொண்டு யான் மகிழ்ந்தேனே. உன்கூற்றுப் பொய்யாதலை எனது மடமையால் அறியாது நகைத்தேனே. அங்ஙனம் நகைத்த

பற்கள் அழிவனவாக என வெறுத்துக் கூறுகின்றாள் :

'இறீஇயரோ..........................
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே'

இந்நகை, தோன்றிய காலை, தலைவி, தன் மடத்தால் தலைவன் உரையை மெய்யெனக் கொண்டு நகைத்த நகை.

(2) பிறர் மடம் பொருளாக நகை தோன்றுவது.

ஒரு தலைவன், செல்லற்கரிய கடிய வழியில் தன்னுடன்வர விரும்பும் தலைவியின் எண்ணத்தினைத் தோழி வாயிலாக அறிந்து, அத்தலைவியின் மடமை குறித்து, தன் நெஞ்சினிடத்தே கூறி நகைப்பது :—

'நாம்நகை யுடையம் நெஞ்சே.'

இது தலைவியின் மடமை நோக்கித் தலைவன் நக்கது.

## II. அழுகைச் சுவை

அழுகை என்பது அவலம் - என்றது இரக்கம். தானே அவலித்தலும் பிறர் அவலம் கண்டு அவலித்தலும் என இஃது இருவகைப்படும். பின்னது கருணை எனவும் கூறப்படும். இதனை ஒன்பதாம் சுவை எனவுமுண்டு என்பர் பேராசிரியர்.

இளிவே யிழவே யசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே. [சூ. 5.]

## க. இளிவு பற்றி வரும் அழுகை

இளிவாவது பிறரால் இகழப்பட்டு எளியனாதல். இழிவு என்பது இளம்பூரணர் கொண்ட பாடம்.

(1) தன்கண் தோன்றிய இளிவு பற்றிய அழுகை.

ஒரு தலைவி தன் தலைவனை நோக்கி, நீ பரத்தையை இகழ்ந்து கைவிட்டனை : அதனால் இளிவெய்திய அவள் அழுதனள்........என்கின்றாள் :—

'எழுதெழில் சிதைய அழுதனள்'

இது பரத்தை தன்கட் டோன்றிய இளிவுபற்றி அழுத அழுகை.

(2) பிறர் இளிவு பற்றிய அழுகை.

ஒரு தலைவன், தோழியிடம் பன்னாளும் அலைந்து இளிவுறுகின்றான். அதுபற்றி அவலங்கொண்ட தோழி தலைவியிடம் சென்று, தலைவன் இளிவெய்துவதுபற்றித் தான் அவலம் உறுவதைக் கூறுகின்றாள் :—

'சேயேன்மன் யானும் துயருழப்பேன்'

இது, தலைவன் இளிவுபற்றித் தோழி அவலம் உறுவது.

## உ. இழவு பற்றி வரும் அழுகை

இழவு உயிராவது பொருளாவது இழத்தல்—(இளம்பூரணம்) தந்தையும் தாயும் முதலாகிய சுற்றத்தாரையும், இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல்—(பேராசிரியம்).

(1) தன்கட் டோன்றிய இழவுபற்றிய அழுகை.

ஒரு தலைவி, தன் கணவனை இழந்து, அவனுக்குத் தென்புலக் கடன் இறுப்பாள், தன் கண்ணீரே, நீரா கக்கொண்டு மெழுகுகின்றாள் :—

'மெழுகும் ஆப்பிகண் கலுழ்நீ ரானே'

(புறம். 249)

இது, தலைவி தன்கண்ணே தோன்றிய இழவு பற்றி வந்த அழுகை.

(2) பிறர்கண்ணுற்ற இழவு பற்றிய அழுகை.

தலைவி தன் கணவனை யிழந்தாள். அத்தலைவியின் இழவு பற்றித் தோழியின்பாற் றோன்றும் அழுகையினைத் தலைவி கண்டு அத்தோழியை நோக்கிக் கூறுவது :—

'என்னழிபு இரங்கும் நின்னொ டியானும்

(அகம். 73)

இது தலைவியின் இழவுபற்றித் தோழிக்கு அழுகை தோன்றியது.

## ௩. அசைவு பற்றி வரும் அழுகை

அசைவு—தளர்ச்சி, தன்னிலையிற் றாழ்தல்; பண்டை நிலைமை கெட்டு வேறொருவாறாகித் தளர்தல்.

(1) தன்கட் டோன்றிய அசைவு பற்றிய அழுகை.

ஒரு தலைவன் தலைவியைக் கண்டு காதலுற்றுத் துயிலாமை முதலியவற்றால் தளர்ச்சியுற்று இரங்குதல் :—

‘ ஒருத்தி......அளியள் என்,
நெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சேன் ’
(கலி. 139)

இது தலைவன், தன்கட் டோன்றிய அசைவு பற்றி அழுகை எய்துவது.

பிறன்கட் டோன்றிய அசைவு பற்றிய அழுகை.

ஒரு தலைவன் முன்பு மகளிர் காமுறும் பேரழகினனுவான், பின்பு, துறவுகொண்டு தாளிக்கீரை கொய்துகொண் டிருக்கின்ருன். அந்நிகழ்ச்சி கண்டு ஒருவர் இரங்குவது.

‘ அள்ளிலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவ னயினன் முன்னே ’
(புறம். 252)

இது ஒரு தலைவன் தளர்வு கண்டு ஒரு புலவர் இரங்கியது.

ச. வறுமை பற்றி வரும் அழுகை

(1) தன்கட் டோன்றிய வறுமை பற்றிய அழுகை.

ஒரு குழந்தை, தன் தாய்ப்பால், உணவில்லாது வற்றி விட்டமையின் தனக்கு இல்லையாயது பற்றி அழுகின்றது.

‘ சுவைத்தொ றழூஉம் ’ (புறம். 164)

இது, குழந்தை, பால் பெறு வறுமை தனக்கு எய்தலால் அடைந்த அழுகை.

(2) பிறர்கட் டோன்றிய வறுமை பற்றிய அழுகை.

மேற்கூறிய குழந்தையின் நிலையினைநோக்கி யழூஉம் தாயிடத்தே பாலின்மையாய வறுமை கண்டு தந்தை அவலிப்பது :

'மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண'
(புறம். 164)

இது மனைவியின் வறுமை நோக்கிக் கணவன் அவலித்தது.

## III. இளிவரற் சுவை (இகழ்ச்சி)

'மூப்பே பிணியே வருத்த மென்மையோ
டியாப்புற வந்த விளிவர னன்கே.' [சூ. 6]

### க. மூப்புப் பற்றி வரும் இளிவரல்

(1) தன்கட் டோன்றும் மூப்புப் பற்றி வரும் இளிவரல்.

ஒரு புலவர் தன் முதுமையை நினைந்து தன்னை இகழ்ந்து கொள்ளுகின்றார் :—

'தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.' (புறம். 243)

இது புலவர் தம் முதுமை பற்றித் தம்மை இகழ்ந்தது.

(2) பிறர்கட் டோன்றும் மூப்புப் பற்றி வரும் இளிவரல்.

ஒரு வீரன், தன்னை எதிர்த்து நிற்கும் ஒரு முதியனை நோக்கி, நின்னொடு போர்புரிதல் எனக்கு இழிவு ஆகும் என்கின்றான் :

'மூத்துத்தலை யிறைஞ்சிய நின்னோ டியானே
போர்த்தொழி றொடங்க நாணுவல்'

இது, தன்னை எதிர்க்கும் பிறன் முதுமையை யுட்கொண்டு, தனக்கு இகழ்ச்சி வரும் என்று எண்ணிக் கூறுவது.

உ. பிணி பற்றி வரும் இளிவரல்

(1) தன்கட் டோன்றும் பிணிபற்றிய இளிவரல்.

காமப்பிணி கொண்டாள் ஒரு தலைவி, மழையுடன் வந்த வாடைக் காற்றினை நோக்கி, மிகச் சிறந்த ஆற்றலையுடைய நீ, எளிய என்னை அலைப்பது வீரமோ என்று கூறித் தன் பிணியுடைமை கருதி இகழ்ச்சி யுறுவது :

'இமயமுந் துளக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரிஃ தெவனோ'

(குறுந். 158)

இது, தலைவி, தன்கட் டோன்றிய பிணிபற்றி இளிவந்தது.

(2) * பிறன்கட் டோன்றிய பிணிபற்றிய இளிவரல்.

ஒருவன் தன் நெஞ்சு காமப்பிணி கொண்டு வருந்துவது பற்றித் தன் இளிவரலைக் கருதுவது.

---

* பிறள்கண் என்பதனை, இனங்கருதிப் பிறன்கண், பிறிதின்கண் என்றெல்லாம் கொள்க.

நெஞ்சினைப் பிறர்போல் வைத்துக் கூறுவது மரபு.

நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே

(குறுந். 128)

இது, நெஞ்சின் நோய் கண்டு தான் இளிவரலுற்றது.

## ௩. வருத்தம் பற்றி வரும் இளிவரல்

வருத்தம் - முயற்சி என்பர் பேராசிரியர்.

(1) தன் மாட்டுளதாம் வருத்தம் பற்றிய இளிவரல்.

ஒரு தலைவியின் பருவ நலங்களால் வருந்திய தலைவன், யான் அவளை அறிந்து நயக்க, அவள், என்னை அறிந்து நயந்திலளே எனத் தன்பால் இளிவரலுற்றது:

'யான்ற னறிவல் தானறி யலளே'

இது தலைவன் தான் எய்திய வருத்தம் பற்றித் தன்பால் இளிவரலுற்றது.

(2) பிறன்கட் டோன்றிய வருத்தம் பற்றிய இளிவரல்.

ஒரு தலைவன் உலகம் புரப்பான் போல்பவன், ஒன்று இரப்பான் போல வருத்த முற்றுக் குறையிரத்தல், நமக்கு இளிவரலாம் எனத் தோழி தலைவிக்குக் கூறுவது:

'ஒன்று இரப்பான்போ எளிவந்துஞ் சொல்லும்'

(கலி. 47)

இத் தோழி கூற்று, குறிப்பினுல் நமக்கும் இது இளிவரலாம் என்னும் பொருள் தருதலின், இது தலைவன் வருத்தம் பற்றித் தலைவி தோழியர்க்கு இளிவர லுறுவது.

## ௪. மென்மை பற்றி வரும் இளிவரல்

மென்மை — பொருள் முதலியவற்றுற் குறைவுடைமை.

(1) தன்கண் தோன்றிய மென்மை பற்றிய இளிவரல்.

ஒருவன் தன் மென்மையால், பிறர் வன்மை கண்டு அஞ்சி அவர் மாட்டுத் தாழ்வுரை கூறல், தன் மென்மையாற் றன் இளிவர லுறுதல்.

(2) பிறர் மென்மை கண்டு தான் இளிவர லுறல்.

ஒருவன் பிறர் மென்மை கண்டு அவரிடம் வன்மொழிகள் கூறின் அது பற்றி அவனுக்கு வரும் இளிவரல்.

புகழ் எய்துவான் ஒருவன் செயல் :—

‘ வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன் ’ (புறம். 239)

எனவே, இவற்றிற்கு எதிராய வலியரென வழிமொழிதல், தன்கட் டோன்றிய மென்மை பற்றி ஒருவற்கு வரும் இளிவரல். மெலியரென மீக்கூறல், பிறர்கட் டோன்றிய மென்மை பற்றிய ஒருவன் வன்சொல்லால் அவன் இளிவரல் எய்துவது என அறிக.

## IV. மருட்கைச் சுவை (வியப்பு)

புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே (சூ. 7)

### க. புதுமை பற்றிய மருட்கை

(1) தன்கட் டோன்றிய புதுமை பற்றிய மருட்கை.

ஒரு தலைவனை ஆயத்தார் பலருங் கண்டனர். அவருள் தலைவி அவனைக் காதலித்தாள். அதனால் அவள் உருவமும் செயலும் வேறுபட்டுப் புதுமை அடைந்தனள். தான் ஒன்றுமறியாதாள் போலத் தன் தோழிக்குத் தன்பால் எய்திய புதுமையைக் காட்டி வியக்கின்றாள் :

மலர்தார் மார்ப னின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவருள்
ஆரிருட் கங்கு லணையொடு பொருந்தி,
ஓர்யா னாகுவ தெவன் கொல் : (அகம். 82)

இது தலைவி தன்கண் எய்திய புதுமைபற்றித் தான் வியந்தது.

(2) பிறபொருட்கட் டோன்றிய புதுமை பற்றிய மருட்கை.

மயில்கள் முன்பெல்லாம் ஆடும் நெறியானன்றிப் புதுமையாக ஆடின. அவற்றை மந்திகள் வியந்து நோக்கின :

'மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்' (அகம். 82)

இது, மயிலாகிய பிறபொருட்கண் எய்திய புதுமை பற்றி, மந்திகட்கு மருட்கை எய்திய தாகும்.

### உ. பெருமை பற்றிய மருட்கை

(1) தன்கட் டோன்றிய பெருமை பற்றிய மருட்கை.

ஒரு தலைவி தலைவனைக் கண்டவிடத்து, நாடோறும் தேனிறால் போலச் சிறுகச் சிறுக வளர வேண்டிய நட்பு, நிலத்தின் அகலம், விசும்பின் உயர்வு, கடலின் ஆழம் ஆகிய இவை போலத் தன்பாற் பெருகக் கண்டு, வியந்தனள் :

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே.

(குறுந். 3)

இது தலைவி தன்பாற் பெருகிய நட்பினைக் கண்டு வியந்தது.

(2) பிறன்கட் டோன்றிய பெருமை பற்றிய மருட்கை.

அங்ஙனமே தலைவன்பாற் சிறுகச் சிறுக வளர வேண்டும் நட்பு, மேற்கண்டவாறு உடனே பெருகக் கண்ட தலைவி, அதுபற்றித் தான் வியப்பதாயின், பிறன்கட் டோன்றிய பெருமைபற்றிய மருட்கையாகும். இதற்கும் அச் செய்யுளே உதாரணமாகும்.

### ங. சிறுமை பற்றிய மருட்கை

(1) தன்கண் எய்திய சிறுமை பற்றிய மருட்கை.

ஒருவன் பிணியால் வருந்தி, அதனுற்றன் உடல் மிக இளைத்தமை ஆடியிற் கண்டு வியத்தல் போல்வது.

(2) பிறர்கட் டோன்றிய சிறுமை பற்றிய மருட்கை.

ஒரு தலைவன் தலைவியின் இடைச்சிறுமை கண்டு வியப்பது.

—அம்ம
கடையிற் சிறந்த கருநெடுங்கட் பேதை
இடையிற் சிறியதொன் றில்

என்பது அது.

## ௪. ஆக்கம் பற்றிய மருட்கை

ஆக்கம் - ஒரு மரம் தன்னளவினன்றி நன்னிலம் சார்பாக மிகப் பெருத்தல்; நல்கூர்ந்தான், காரணம் அறிய வியலாது திடுமெனச் செல்வன் ஆதல் போன்றதென்பர் இளம்பூரணர்; ஒன்று ஒன்றுகத் திரிந்தது என்பர் பேராசிரியர்.

(1) தன்கண்ணே தோன்றிய ஆக்கம் பற்றிய மருட்கை.

நரிவெரூஉத் தலையார் என்பார், தம் உடம்பு வேறுபட்டிருந்தவர். அவர், சேரமான்—பெருஞ் சேரல் இரும்பொறையைக் கண்டநாளில், அவ்வேறுபாடு நீங்கி, முன்னை நல்லுருப் பெற்றனர். இஃது ஆக்கம். இங்ஙனம் ஆக்கம் பெற்றகாலை வியந்து அவ்வரசனைப் பாடி வாழ்த்தினர். இது தன்கட் டோன்றிய ஆக்கம் பற்றிய மருட்கை.

(2) பிறபொருளின் ஆக்கம் பற்றிய மருட்கை.

ஆலம் வித்து, மிகச் சிறியதாயது, முளைத் தெழுந்து பெருமரமாகி மிக்க நிழலைப் பயக்கும் ஆக்கங் கண்டார் வியப்பது :

*உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி*
*இறப்ப நிழற்பயந் தாங்கு* (நாலடி. 38)

இஃது ஆலம் வித்தாய பிறபொருளின் ஆக்கம் கண்டார் ஒருவர் வியந்தது.

## V. அச்சச் சுவை

*அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்*
*பிணங்கல் சாலா வச்சம் நான்கே.* (சூ. 8)

இந்த அச்சச் சுவை தானே காரணமாய பொருளில் வருவதில்லை. பிறர் காரணமாகிய பொருளாகவே வரும்.

1. அணங்கு பற்றி வரும் அச்சம் : (அணங்கு - தெய்வம்)

தமிழ் நாட்டுக் குறிஞ்சி மகளிர் வீரத்தினைப் பற்றிக் கூறுமிடத்து, அவருட் சூல் கொண்ட மகளொருத்திதானும், அச்சம் விளைத்துக் கருவினைச் சிதைக்க வல்ல பொருள்கள் அச்சுறுத்திய விடத்தும் அஞ்சாது மீள்வது பற்றிக் கூறும்,

*'யானை தாக்கினும் அரவுமேற் செலினும்*
*நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்*
*சூன்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை'*
(பெரும்பாண் 134-6)

என்னுமடிகளிற் குறிக்கப்படும் இடிபோலும் தெய்வச் செயல் பற்றி ஒருவர்மாட்டு அச்சம் நிகழ்வது போல்வது இது.

உ. விலங்கு பற்றி வரும் அச்சம்

இதற்கும் மேற்கூறிய செய்யுட் பகுதியே மேற்கோள். அரவு முதலியன விலங்கு என்ற இப்பகுதியில் அடங்கும்.

௩. கள்வர் பற்றி வரும் அச்சம்

ஒரு தலைவி தலைவனை நோக்கி, நீ, கண்ணை மூடித் திறப்பதற்குள் மறைந்து விடுங் கள்வன். என்னை விட்டு நீங்குதி என்கின்றாள்.

'இமைப்பின் இதழ்மறை பாங்கே கெடுதி'
'ஒரூஉ நீ யெங்கூந்தல் கொள்ளல்யாம் நின்னை
வெரூஉதுங் காணுங் கடை' (கலி. 37)

இது, கள்வன் போலும் தலைவனைக் கண்டு தலைவி அஞ்சியது.

௪. இறை பற்றி வரும் அச்சம்

இறை எனப்படுவார், தந்தையர், ஆசிரியர், அரசர் முதலோர். சிற்றரசர்கள் தம் பேரரசனை நிமிர்ந்து நோக்காது அஞ்சிக் குனிந்து நிற்பர்.

எருத்துமே னோக்குறின் வாழலே மென்னுங்
கருத்திற்கை கூப்பிப் பழசி - யெருத்திறைஞ்சிக்
கால்வண்ண மல்லாற் கடுமான்றேர்க் கோதையை
மேல்வண்ணங் கண்டறியா வேந்து
(இ. வி. ப. 124)

இது, இறை பொருளாக அச்சம் பிறந்தது.

இனி, மகளிர் ஊடலால், தலைவர்க்கு வரும் அச்சம் முதலியவும் இவற்றுள் அடங்கும்.

'சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவுவனின்
ஆணை கடக்கிற்பா ரியார்' (கலி. 81)

பிறவும் அன்ன.

## VI. பெருமிதச் சுவை

வீரத்தினைப் பெருமிதம் என்பது, அஃது ஏனைப் பெருமைகளோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றலாலாகும் என்பர் பேராசிரியர். இளம்பூரணர், பெருமிதம் என்பது தன்னைப் பெரியனாக மதித்தல் என்று கூறுவர்.

கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே (சூ. 9)

இது, தன்கட் டோன்றிய பொருள் பற்றியே வருவது.

### க. கல்வி பற்றி வரும் பெருமிதம்

ஒரு தலைவன், கற்றுவல்லார் முன்னே அவர்களுள் ஒருவனாகிப் பேசும் திறம் வல்லேன் என்று கூறித் தன் கல்வி பற்றிய பெருமிதம் கூறுகின்றான்:

'வடிநாவின், வல்லார்முற் சொல்வல்லேன்'
(கலி. 141)

இது தலைவன் தன் கல்வி பற்றித் தான் பெருமித மடைந்தது.

### உ. தறுகண் பற்றி வரும் பெருமிதம்

தறுகண் அஞ்சத் தகுவன கண்டவிடத்து அஞ்சாமை.

அத் தலைவன், போரிடத்தே, பகைவர் முன்னே வெற்றியினையுடைய குதிரை மீதிருந்து போரை நடத்துவேன் எனத் தன் தறுகண்மை பற்றிய பெருமிதம் கூறுகின்றான்.

'போருள், அடன்மாமே லாற்றுவேன்' (கலி.141)

இது, ஒருவன் தன் தறுகண்பற்றித் தான் பெருமிதம் உற்றுவது.

### ங. இசைமை பற்றிய பெருமிதம்

இசைமை யென்பது இன்பமும் பொருளும் எத்துணை எய்துவன ஆயினும் பழியொடு வருவன செய்யாது, எத்துணை இடர் உறுவதாயினும் புகழொடு வருவன செய்தல். (புகழ்)

'கழியாக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வருஉ மின்பம் வெஃகார்'

(அகம்.112)

இது, தம் இசைமை பற்றித் தாம் பெருமித முறுவது,

### ச. கொடை பற்றி வரும் பெருமிதம்

சிபி என்னும் சோழமன்னன், புறவிற்காகத் தன் உடலினை ஈந்த அருங்கொடையால் அவன் எய்திய பெருமிதம் போல்வது :

'தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதிகண் டஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன்' (புறம். 43)

இது, சிபி தன் கொடையால் தான் பெருமித முற்றது.

இப்பெருமிதம் காமம் முதலிய பற்றியும் வரும். அவையும் மேற்கூறியவற்றுள்ளே அடங்கும்.

## VII. வெகுளிச் சுவை

உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே. (சூ. 10)

வெறுப்ப என்பதும் பாடம். வெகுளி — சினம். இது பிறர் பொருளாகவே (காரணவாகவே) வரும்.

### க. உறுப்பறை பற்றி வரும் வெகுளி

உறுப்பு அறை — கைகால் முதலிய உறுப்புகளைக் குறைத்தல். ஒரு புலி யானையை, அதன் செவி மறைவில் வந்து தாக்கி அதன் உறுப்புகட்குத் தீங்கு செய, யானை வெகுண்டது :—

'முறஞ்செவி மறைப்பாய்பு
முரண்செய்த புலிசெற்று' (கலி. 52)

இது, புலியால் தனக்கெய்திய உறுப்பறைபற்றி யானை வெகுண்டது.

### உ. குடிகோள் பற்றி வரும் வெகுளி

குடிகோள் — ஒருவனது மனைவி, சுற்றம் முதலாயவர்க்குப் பிறர் தீங்கு புரிதல். குடிப்பிறப்பிற்குத் தீங்கு செய்தலுமாம்.

ஒரு வீர மகள் தன் மகன் தன் வீரக்குடியின் சிறப்பினை யிழந்து, புறங்காட்டி மாண்டனன் என்ற செய்தி கேட்டு, அம் மகன்மீது வெகுள்வது :-

'நின்மகன், படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்ட வென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇ'

(புறம். 278)

இது மகனாற் குடிநலம் இழந்தாள் வெகுண்டது.

## ௩. அலை பற்றி வரும் வெகுளி

அலைத்தல்—கருவி முதலிய வற்றாற் றுன்புறுத்தல். ஒரு யானை ஒரு புலியொடு அலைப்புண்டு வெகுளி எய்திப் பின் அதனை அலைத்தும் சினம் நீங்கிலது :—

'வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னு மாறாது சினனே' (புறம். 100)

இது யானை புலியால் தான் எய்திய அலைப்புப் பற்றி வெகுண்டது.

## ௪. கொலை பற்றி வரும் வெகுளி

கொலை—உயிர்க்கொலையேயன்றி, அறிவு, புகழ் முதலியவற்றைக் கொல்லுதலுமாம்.

ஓர் அரசனைப்பற்றி மாற்றரசர்கள் அவன் புகழ் அழியும் இழி சொற்களைக் கூறினர். அது கேட்ட அரசன் சினங்கெழுந்து செருவென்றான் :—

'சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி' (புறம். 72)

சிறுசொல்—புகழ்கொன் றுரைக்குஞ் சொல். இது அரசன் தன் புகழை அழித்தாரைச் சினந்தது.

ஊடல் முதலிய பற்றி வரும் வெகுளிகளும் இவற்றுள் அடங்கும்.

## VIII. உவகைச் சுவை (மகிழ்ச்சி)

செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்லல் நீத்த வுவகை நான்கே. (சூ. 11.)

இவை, தன்பாற் பற்றியனவே யாகும்.

### க. செல்வம் பற்றிய உவகை

செல்வம் - நுகர்ச்சி. (இனிமையைத் தருவன வற்றை அடைதல்.) ஒருவன் தனக்குரிய இல்லின் கண்ணிருந்து, தன் முயற்சியால் எய்திய பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்கட்குப் பகுத்துத் தன் கூற்றைத் தான் உண்டலால் எய்தும் மகிழ்ச்சி :—

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா வரிவை முயக்கு. (குறள். 110.7)

ஒரு தலைவன், தேடும் பொருளைத் தேடி முடித்த செல்வத்தால் உண்டாகும் மகிழ்ச்சியே நமது இன்ப வாழ்க்கையின் பயன் என்கின்றான்.

செய்பொருண்முற்றிய வளமையானும் பொருளிது.—
(கலி. 12)

இங்குத் தலைவற்குத் தன் பொருட் செல்வத்தால் ஆம் மனமகிழ்ச்சி கூறப் பெறுகின்றது.

### உ. புலன் பற்றி வரும் உவகை

புலன் - கல்வியின் பயனாகிய அறிவுடைமை என்பர் பேராசிரியர். ஐம்புல நுகர்ச்சி என்பர் இளம்பூரணர்.

அறிஞரின் கூட்டத்தால் இனிய மகிழ்ச்சி தோன்றும் :—

இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம். (நாலடி. 137.)

இது, ஒருவர் தம் கல்வி யறிவால் தாம் மகிழ்வது.

### ௩. புணர்வு பற்றி வரும் உவகை

புணர்வு - காமப் புணர்ச்சி.

தலைவியைக் கண்டு மகிழ்ந்தான் ஒருவன் கூறியது :—

'முயங்கினள், வடிப்புறு நரம்பிற் றீவிய மொழிந்தே,
உவவினி வாழியென் னெஞ்சே' (அகம். 142)

இது தலைவியைக் கண்டதாலாய மகிழ்ச்சி.

### ௪. விளையாட்டுப் பற்றி வரும் உவகை

ஒரு தலைவன் பரத்தையரொடு ஆருடி விளையாடி மருவி மகிழ்ந்திருக்கின்றான் :—

புனலாடி, மயிலியலார் மருவுண்டு
மறந்தமைகுவான். (கலி. 30.)

இங்குத் தலைவனுக்கு விளையாட்டால் உவகை எய்தியது.

இவ்வுவகை, பிறன்கட் டோன்றிய இன்பங்கள் பற்றியும் சிறுபான்மை வரும்.

## 8. பண்டைத் தமிழர் மற வாழ்க்கை

மறம் என்பது வீரம். அறக் கற்பு, மறக் கற்பு என வழங்குதல் காண்க. மறம் - பாவம் முதலாய பொருளிலும் வருமாயினும், இங்கு வீரப்பொருளே கொள்ளற் குரியது. வாழ்க்கை, அறவாழ்க்கை, மற வாழ்க்கை என்றிரண்டாம். அறவாழ்க்கை, அன்பு நெறியில் இல்லறம் நிகழ்த்தும் வாழ்க்கை. மற வாழ்க்கை, அருள்மேவிய வீர நெறியில் வென்றி எய்தும் வாழ்க்கை. இவ்வாழ்க்கையினைக் கூறும் நூல்கள் புறப்பொருள் நூல்களாகும். அவற்றுட் சிறந்து நிற்பது புறநானூறே. பெரிதும் அந்நூலுட் கூறப் பெறும் பொருள்களைக் கொண்டு, பண்டைத் தமிழரின் மறவாழ்க்கை வரலாறு இங்கு எழுதப் பெறுகின்றது.

பண்டைத் தமிழரின் இல்லற வாழ்வு எங்ஙனம் அன்பு நெறியில் தொடங்கி அந்நெறியில் விலகாது நிகழுமோ, அங்ஙனமே அவர் தம் மற வாழ்க்கையும் அந்த அன்பின் முதிர்ந்த நிலையாகிய அருள் நெறியிற் றொடங்கி முடிவுகாறும் விலகாது நிற்பதாகும். 'அருளென்னும் அன்பீன் குழவி' என்பது தெய்வப் புலவர் வாய்மொழி.

"அறத்திற்கே யன்பு சார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" என்னும்

இக்குறளிற்குப் பரிமேலழகர், அறம் மறம் ஆகிய பாவம் இவற்றைமுறையே ஆக்குதற்கும்நீக்குதற்கும் அன்பு வேண்டும் என்று பிறிது பொருள் கூறி யுளாரேனும், அற வாழ்க்கை, மற வாழ்க்கை எனக் கொண்டு இவற்றை ஆக்குதற்கு அன்பே துணையாம் என்ற பொருள் கூறுதலுமாம். இங்கு, மறம் - வீரம் என்று பொருள் படுதல் காண்க. அன்பின் வழியின தாகிய அருள், அன்பென்றும் கூறப்படும்.

நச்சினார்க்கினியர், இக்குறளிற்கு, மேற்கூறி யாங்கே பொருள் கொண்டுளார். இதனை, அவர் கள வியல் முதற் சூத்திர உரையில், "ஐந்திணைப் புறத்த வாகிய வெட்சி முதலியவற்றிற்கும் அன்போடு புணர்தலுங் கொள்ளப்படும். 'அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார், மறத்திற்கு மஃதே துணை' என்றலின்" என்று உரைத்தது கொண்டு உணரலாம்.

இங்ஙனம் அருள் நெறியில் மற வாழ்க்கை நிகழ்த்துதலின், தமிழ் நூல்கள், இம் மற வாழ்க்கை யைச் சால்பு எனக்கொண்டு, இவர் தம்மைச் சான்றோர் எனக் கூறலாயின.

## சான்றோர்

தமிழர் பெரிதும் போற்றும் தமிழ் நூல்களில் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச், சான் றோன் எனக்கேட்ட தாய்" என்றும், "சான்றோன் என்கை ஈன்றோட் கழகு" என்றும், "சான்றோர் இனத்திரு" என்றும் சில அறவுரைகள் உள. இவற்றை நோக்கின், தமிழர் தம் மக்கள் சான்றோ ராய்த் திகழ்வதைப் பெரிதும் விரும்பி அதனை.

அவர்க்கு நன்கு வற்புறுத்தி வருகின்றனர் என்பது துணியப்படும்.

சான்றோர் என்னும் சொல்லுக்கு நற்குணங்களால் நிறைந்தவர் என்பது பலகாலும் பயின்றறிந்த பொருளாகும். "மன்பதை காப்ப அறிவுவலி யுறுத்தும், நன்றறி யுள்ளத்துச் சான்றோர்," "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்" எனவரும் வழக்காறுகள் இப்பொருளை வலியுறுத்துவனவாம். சான்றோர் என்னும் இச்சொற்கு வேறொரு பொருளும் உண்டு. அது தமிழரது வீரச் செயல்களை யுணர்த்தும் நூல்களுள் வழங்கிவருவது. தூய வீரமும் போர் வன்மையும் நிறைந்த ஆண்மக்களையும் சான்றோர் என்று அந் நூல்கள் கூறுகின்றன. "எயிலெறி வல்வில் ஏந்தெழில் ஆகத்துச் சான்றோர்;" "அமரின் இட்ட அருமுள் வேலிக் கல்லென் பாசறைப் பல்சான் றீரே" என வீரமுடைய பெருமக்களைச் சான்றோர் என வழங்குவது காண்க. இவ் விருவகைப் பொருளையும் அறிந்தால், சான்றோர் சான்றோன் எனப் பொதுப்படக் கூறுமிடத்து, அச் சொற்கள் நற்குணம் நிறைந்த பெரியோரையும், நல்வீரம் நிறைந்த பெரியோரையும் குறித்து நிற்கும் என்பது பெறப்படும். படவே, மேலே காட்டிய அறவுரைகள் அவற்றைக் கேட்போரை நற்குண நற்செய்கையும், நல்ல அறம் வழுவாத தூய வீரமும் உடையராக வேண்டுமென வற்புறுத்தி நிற்பதை நன்கு தெளியலாம்.

குணம் செய்கைகளால் உயர்ந்தோரையும், வீரச் செய்கைகளால் உயர்ந்தோரையும் சான்றோர்

என ஒப்ப வழங்கும் வழக்காறு ஓர் உண்மையினை நமக்கு நன்கு தெளிவாக்குகின்றது. அஃதாவது, நாட்டில் நீதியும் முறையும் அறமும் செவ்வே நிலவ வேண்டி அறிவு உரைக்கும் பெருமக்களும், நாட்டில் வாழ்வார்க்குப் பகைவராலும் பிறவற்றாலும் தீங்கு நேராவகையில் போருடற்றி நாட்டுக்குப் பாதுகாப்பளிக்கும் பெருமக்களும் நல்வாழ்விற்கு இன்றியமையார் என்றும், எனவே, அவ் விருதிறத்தோரும் சான்றோர்களாய் நாட்டவரால் போற்றிப் பாராட்டப்படும் தகுதியுடையரென்றும் பண்டைத் தமிழர்களால் சிறப்பிக்கப் பெற்றமை தெரிகிறது. இவ்வாறு நாட்டின் அகப்பகை கடிதற்கு வேண்டும் அறமும் அறிவும் வழங்கும் சான்றோரையும், புறப்பகை கடிதற்கு வேண்டும் ஆண்மையும் மொய்ம்புமுடைய சான்றோரையும் நன்கு பேணி வந்ததனுல், பண்டைத் தமிழ் வேந்தரும், "சான்றோர் பெருமகன்," "சான்றோர் புரவலன்," "சான்றோர் மெய்ம்மறை" என்று புலவர்களாற் புகழப்பட்டனர்.

## வீரத் தாயர்

இச் சான்றோர், இளமையில் தம் பெற்றோர்பால் இளஞ் சிறார்களாய்த் தோன்றி வளரும் போதே, சான்றோராதற்கு வேண்டும் சால்பு அனைத்தும் அப் பெற்றோரால் ஊட்டப் பெறுகின்கிறனர். பொன் முடியார் என்பவர் தன் மகனை நோக்கிக் கூறுவார் போன்று, மகனே, "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே, சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றும், "அருஞ்சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்றும் கூறு

கின்றாள். பிறிதோரிடத்தே, வேறொரு தமிழன்னை தன்மகன் தன் கணவனைப் போலவே வனப்பு நிரம்பியிருப்பது கண்டு பெருமகிழ்வுற்று அவற்குச் சில அறிவுரை வழங்குகின்றாள். அவற்றுள், முதற்கண், அம் மகன்பால் வீரமும் வெற்றிக்குரிய ஆண்மையும் பெருகவுண்டாதல் வேண்டி,

"செம்மால்,
வனப்பெலாம் நுந்தையை யொப்பினும் நுந்தை
நிலைப்பாலுள் ஒத்த குறியென்வாய்க் கேட்டொத்தி;
கன்றிய தெவ்வர்க் கடந்து களம்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி பெரும!

என்றும், அதன்மேல் அம் மகன்பால் அறவுணர்வு வளர்வது கருதி,

"பால்கொளல் இன்றிப் பகல்போல் முறைக்
கொல்காக்
கோல் செம்மை யொத்தி பெரும (கலி. 86)

என்றும் இவ்வாறே வீரம் நீதி முதலியவை அம் மகனுக்கு அறிவுறுத்துகின்றாள்.

வீரரைப் பெற்ற மகளிரின் நரம்பு தோறும் வீரக்குருதியே பரந்தொழுகுகிறது. இன்றேல், அவர் குருதிப்பயனாகிய பாலுண்ட அவர் புதல்வர்கண், வீரம் வீறுற்று விளங்குதல் இல்லையாம். அவர் மொழிந்துள்ள சொற்களை நோக்கின், அவர் தம் புதல்வர்க்குப் பால்தந்து புறந்தருவது, ஊன் மிக்க உடம்பைப் பெருக்கற்கன்றென்பதைக் காட்டுகின்றது. தன் மகன் மிக்க ஆண்மையுடையனாய் நிலவ வேண்டுமென்பதே அவரது குறிக்கோள். அதனால்

அவர்கள் தம் புதல்வர் போரிடையே அரும்போர் புரிந்து பட்டழியினும், அதனால் உளம் கலங்காது பெருமிதம் கொள்கின்றனர். ஒரு தாயின் இத் தகைய பெருமிதத்தைக் கண்ட பூங்கணுத்திரையார் என்னும் பெருமாட்டி, "வால்நரைக் கூந்தல் முதி யோள் சிறுவன், களிறுஎறிந்து பட்டனன் என்னும் உவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே" (புறம். 277) என்று வியந்து பாடுகின்றார். ஒரு தாயிடம் சிலர் வந்து, "அன்னாய், நின்மகன் பகைவர்க்குஅஞ்சிப் புறங்கொடுத்து நீங்கினன்" எனத் தவறாகக் கூற, அவட்கு அதனால் எழுந்த மானம் நெஞ்சுசுடப் பெரி தும் வெகுண்டு, போர்க்களத்திற்குச் செல்லலுற்று, "மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டஎன், முலை யறுத் திடுவேன்" என்று வீரம் பேசுகின்றாள். பின்பு அவனைக் கண்டு உண்மையறியத் துணிந்து போர்க்களம் அடைந்து, அங்கே, "சிதைந்துவே றாகிய, படுமகன் கிடக்கை காணூஉ, ஈன்றஞான்றி னும் பெரிதுஉவந்தனளே" (புறம். 278) என்று காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற புலவர் பெருமாட்டியார் புகழ்ந்து பாடுகின்றார். இவ்வாறு சிலர் பொய்யாகக்கூறியது கேட்டதும் தமிழ்த்தாயர் உள்ளத்தே பெருஞ்சினத்தீ எழுந்ததென்றால், உண்மையாகவே ஒருமகன் அத்தீச்செயலைச்செய்து திரும்புவானாயின், அவனை அவள் தானே தன்கையாற் கொன்று அவனால் உண்டாகும் பழியை யொழித் திருப்பள் என்பதைச் சொல்லவும் வேண்டுங்கொல்!

ஒரு தமிழ்த்தாயின் புதல்வனுடைய ஆண்மை யைக் கண்ட சான்றோர், "செம்முது பெண்டின்

காதலஞ் சிறுஅன்...படைக்குநோ யெல்லாம் தானு யினனே" (புறம். 276) என்று பரவுகின்றனர். சான்றோர் பரவும் சால்பு தன்மகற்கு உண்டானதை யறிந்து அவன்தாய் கொள்ளும் மகிழ்ச்சிக்கு அள வின்று. மகன் போரிற்பட்டதை அறியாத ஒருவர் தாயைக் கண்டு, "நின்மகன் யாண்டுளன்?" என்று வினவுகின்றார். அவர்க்கு, அவள் தன்மகன் போருடற்றி உயிர்கொடுத்துப் புகழ்பெறுவது அவற்குக் கடன் என்பதைத் தான் அறிந்திருப்பது இனிது புலப்பட,

"எஃகுளம் கழிய இருநில மருங்கின்
அருங்கடன் இறுத்த பெருஞ்செயாளனை
யாண்டுள னோஎன வினவுதி யாயின்......
வருபடை தாங்கிய கிளர்தார் அகலம்
அருங்கடன் இறுமார் வயவர் எறிய
உடம்புந் தோன்று உயிர்கெட் டன்றே......

இப்போது, அவன்,

"சேண்விளங்கு நல்லிசை நிறீஇ
நாநவில் புலவர் வாயு ளானே" (புறம். 282)

என்று விடை யிறுக்கின்றாள். இவ்வாறே காவற்பெண்டு என்பாளைக் கண்டு அவள் மகன் யாண்டுளன் என வினவியவர்க்கு, அவள், "என் மகன் யாண்டுள னாயினும் அறியேன் ஓரும், புலி சேர்ந்து போகிய கல்லளை போல, ஈன்ற வயிறோ இதுவே, தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" (புறம். 86) என்று கூறுகின்றாள்.

ஒருவன் போராண்மை சிறந்து சான்றோர் புகழும் புகழ்பெற்று விளங்குவது கண்டு பேருவகை

பூத்துத் திகழும் அவனுடைய தாய், அவனது குழவிப் பருவத்தை நினைந்து வியந்து,

"பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்,
செருஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சியோ(டு)
உயவொடு வருந்தும் மன்னே;

என்று மொழிந்து, அவன் இப்போது சீரிய வீர மகனாக விளங்குதலைப் புகழ்ந்து,

"......இனியே
புகர்நிறங் கொண்ட களிறட் டானான்,
முன்னாள் வீழ்ந்த உரவோர் மகனே;
உன்னிலன் என்னும் புண்ஒன்றுஅம்பு;
மானுளை யன்ன குடுமித்
தோன்மிசைக் கிடந்த புல்லணலோனே"

(புறம். 310)

என்று பாடுகின்றார்.

ஒரு வீரமகளின் உடன்பிறந்தான் யானையெறிந்து பட்டான்; அவள் கொழுநனும், போருடற்றி மாண்டான்; அவட்கு வேறு பற்றுக்கோடாக ஒரு மகனே எஞ்சியிருந்தான். இருப்பினும், அவள்,

"செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே."

(புறம். 279)

என்று அவள் செயலைக் கண்ட ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெருமாட்டியார் எடுத்தோதுகின்றார்.

இதுகாறும் கூறியவற்ருல் வீரமக்களின் தாயர் வீரத்திருவின் வடிவேயென விளங்கித் தம் மக்களின் வீரவாழ்வையே பெரிதும் வேண்டியிருந்தமை தெளியப்படும்.

### வீரத் தந்தையர்

இனி, இவ் வீரரைப்பெற்ற தந்தையர் நிலையை நோக்கின், அது வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்து நிற்கும். தம் மக்கள் அறிவும் ஒழுக்கமும் சிறக்கப்பெற்றுப் புலவர் குழாத்துள் முந்தியிருப்பக் காண்பதில் எத்துணை விருப்பம் கொள்வரோ, அத்துணை விருப்பம் அவர்தம் போராண்மையிலும் கொண்டிருக்கின்றனர். தம்முடைய குணமும் செய்கையும் தம் மக்கட்கு எடுத்துக்காட்டாக இலகுவதை நன்கறிந்து, தாம் அறிவு, ஆண்மை, புகழ் என்ற இத்துறைகளில் சிறப்பான வாழ்க்கை நடத்துகின்றனர். "படைவேண்டுவழி வாள்உதவியும், வினைவேண்டுவழி அறிவுதவியும், வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து" (புறம். 179) விடாது புரிந்தனர் என வடநெடுந்தத்தனர் கூறும் வாய்மைமொழியால், அவர்தம் ஆண்மைநலமும் அறிவுநலமும் தெளிகின்ருேம். "மனையோள், பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும், ஊண்ஒலி யரவமொடு கைதூவாளே,......பரிசில் பரிசிலர்க்கு ஈய, உரவுவேற் காளையும் கைதூ வானே" (புறம். 334) என்பதனுல் புகழ்க்குரிய அவரது ஈகை நலமும் இனிதறியப்படும். இந்நலங்களைக்கொண்டு தாமே தம் மக்கட்கு எடுத்துக்காட்டாக விளங்கி, தம் மக்களை உயர்த்துதல், பொன்முடியார் கூறிய "சான்ருேனுக்குதல் தந்தைக்குக் கடனே" எனற்குச் சான்ருக விளங்குவதாகும்.

இத் தந்தையர், "போரெனில் புகலும் - மறவர்" (புறம். 31) "புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழி யெனின், உலகுடன் பெறினும் கொள்ளலர்." (புறம். 182) அவர் பால்,

"தமர்தற் றப்பின் அதுநோன் றல்லும்,
பிறர்கை யறவு தான்நா ணுதலும்,
படைப்பழி தாரா மைந்தின னாகலும்,
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்"
(புறம். 157)

நல்லொழுக்கங்களாகத் திகழ்கின்றன.

இரும்புமுகஞ் சிதைய நூறி ஒன்னார்
அருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே;
நல்லரா உறையும் புற்றம் போலவும்,
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
ஆற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
உளன்என வெரூஉம் ஓரொளி (புறம். 309)

பெறுவதே அரிது எனக்கருதி அதனைப் பெறுங் குறிப்பும் முயற்சியுமே அவர்தம் நினைவிலும் செயலி லும் திகழ்கின்றன. இத்தகைய ஒளிபெற்று இலகிய நெடுமானஞ்சியைப் பற்றி ஔவையார், ஓரிடத்தே, அவன்,

"இல்லிறைச் செரீஇய ஞெலிகோல்போலத்
தோன்றா திருக்கவும் வல்லன்; மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே"
(புறம். 315)

என்று இயம்புகின்றார்.

சுருங்கச் சொல்லின், சான்றாண்மைக்குரிய வாகத் திருவள்ளுவப் பெருந்தகை யோதிய அன்பு,

நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் இத் தந்தைமாரிடத்து நன்கு அமைந்திருக்கின்றன. தமராயினோர் தவறு செய்தவழி அது பொறுத்தலும், தோழன்மார், தானைத் தலைவர், அரசர் பொருட்டு உயிர் விடுதலும் இவ்வீரர் செய்வது அன்புடைமைக்குச் சான்று பகர்கின்றது. "வேந்தற்குச் சாதலஞ்சாய் நீயே" (புறம். 139) எனவும், வலம்படு தானை வேந்தற்கு, உலந்துழி யுலக்கும் நெஞ்சறி துணையே" (புறம். 324) எனவும், "கன்றமர் கறவை மான, முன்சமத் தெதிர்ந்ததன் தோழற்கு வருமே" (புறம். 275) எனவும் வருவன காண்க. "மாறுசெறு நெடுவேல் மார்புளம் போக, நிணம் பொதி கழலொடு நிலஞ்சேர்ந்தனனே, அது கண்டு, பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந்து, இறைஞ்சி யோனே குரிசில்" (புறம். 285) என்றும், "இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப், பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை" (புறம். 324) என்றும் வருவன அவரது நாணுடைமையினை நவில்கின்றன. "கேள் கேடூன்றவும் கிளைஞ ராரவும், கேளல் கேளிர் கெழீஇ யினர் ஒழுகவும், ஆள்வினைக் கெதிரிய ஊக்கம்" (அகம். 93) கொள்வதால் ஒப்புரவும், படையழிந்து புறக்கொடுத்தாரைக் கண்ணோடிக் கொல்லாது விடுத்தலால் கண்ணோட்டமும், சொல்லிய வஞ்சினம் தப்பாது முடித்தலின் வாய்மையும் பெறப்படுகின்றன.

இவ்வாறு வீரம் செறிந்த தாய் தந்தையரின் குலம் விளக்கும் கான்முளைகளாகிய மக்களின் அறந் திரியா மறத்துறை மிக்க மாண்புடையதாகும். பிறந்து மொழிபயின்றது தொடங்கி, அவர்க்குத் தாயரால்

வீரத்தின் இன்றியமையாமையும் சிறப்பும் அவருண்ணும் உணவுடன் ஊட்டப் பெறுகின்றன என்பதை முன்பே அறிந்தோம். அவருடைய நினைவு, சொல், செயல் எல்லாம் ஆண்மையும் புகழும் அடிப்படையாகக் கொண்டு நிலவுமாறு கற்பிக்கும் திறம், அவருடைய தந்தையர் மேற் கொண்டிருந்த ஒழுக்கம் குறிக்கோள் முதலியவற்ருல் இதுபோது அறிந்தோம்.

## அறப்போர்

போருடற்றற் கெழுந்தோறும் அப்போர் அற நெறி பிறழாது நிகழ்தல் வேண்டும். பார்ப்பார், மகளிர், இளஞ்சிருர், பிணியுற்ருர், மக்கட்பேறு இல்லார், பசு முதலியோரைத் துன்புறுத்தலாகாது என்பது அறத் துறையாகும்.

“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை.” (புறம். 9)

எனும் இது தமிழரசரின் வீரத்துறையில் மூற்பட்டிருக்கிறது. இது கொண்டே இவரைச் சான்ருேர் “அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்” (புறம். 62) எனச் சிறப்பிக்கின்றனர். இருபெரு வேந்தர் பொருவது கருதியவழி, ஒருவர், பகைவர் நாட்டில் வாழும் பார்ப்பனர் பெண்டிர் முதலாயினர்க்குத் தம் செய்கை கூறி அரண்சேர்த்தல் அறமாகக் கொண்டதுடன், அதனைத் தாமேயறிந்து வரும் அறிவில்லாத

ஆனிரைகளைக் கவர்ந்து கொணர்தலும், கொணர்ந்த வற்றிற்கு வேண்டுவன தந்து தீங்கு வாராது பாது காத்தலும் செய்வர். இதனை ஆசிரியர் தொல்காப்பிய னார், "வேந்துவிடு முனைநர் வேற்றுப்புலக் களவின் ஆதந் தோம்பல் மேவற் றாகும்" என்று உரைக்கின் றார். இவ்வீரர் போர்க்குச் செல்லுமிடத்து, வழியில், பண்டமும், உணவுப் பொருளும், ஏற்றிச் செல்வோ ரைக் காணின். அவர்க்கும் சிறிதும் தீங்கு செய் வதிலர்.

## மற முடிபே வாழ்க்கையின் குறி

இவ்வீரர் வீடுகளில் வேறொரு அரிய நிகழ்ச்சி நிகழ்வதுண்டு. எவரேனும் ஆடவர் போர் உடற்றி உயிர் துறவாது நோயுற்றுக் கிடந்து இறப்பரேல், அவரை வாளாற் போழ்ந்தோ புண்படுத்தியோ அடக் கம் செய்வர். சிறு குழவிகள் இறப்பினும் இதனையே செய்வர்.

"குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்றென்று வாளிற் றப்பார்" (புறம். 74)

எனச் சேரமான் கணைக்கால் இரும்பொறையும்,

"நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர்"
(அகம். 61)

என மாமூலனாரும், எடுத்தோதுகின்றனர். அதியமான் நெடுமான் அஞ்சி, போரிடைப் பகைவ ரொடு பொருது புண்பட்டு நிற்க, அவனை வியந்து மகிழ்கின்ற ஔவையார், "பெருந்தகையே, நீ புண் பட்டு வெற்றித் திரு விளங்க நிற்கின்றாய்; நின் வாள்

வாய்ப்பட்டு வீழ்ந்த மன்னர் வெற்றிபெரு தொழிந் தாராயினும்,

" திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறம்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கஎன
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் " (புறம். 93)

என்று கூறுகின்றார். இவற்றால் இவ்வழக்காறு புலனாகும். இதனால், வீரர் பலரும், வாழ்வதாயினும் வீழ்வதாயினும் போராண்மை யொன்றையே பெரிதும் நாடி யிருக்கின்றன ரென்பதும் விளங்குகின்றது. இவற்றை நாடோறும் காணும் ஆடவருள்ளத்தே வீரத்தீ கனிந்து வளரும்.

## வீர மணம்

அறிவு, ஆண்மை, புகழ் முதலிய நலம் மிகுந்து விளங்கும் வீர மக்களுடன் மறங்குன்றா மானமும் வனப்புமுடைய மகளிர் பிறந்து அழகு திகழ்கின்றனர். அவரை மணத்தற்கு அறிவு முதலிய நலத்தால் ஒத்தாரேயன்றி ஒவ்வாதவரும் விரும்புவதுண்டு. ஒவ்வாதவர் அரசராயினும், அவர்க்கு அம் மகளிரை மணம் செய்து தருதற்குப் பெற்றோர் ஒரு காலும் விரும்பார். அதனால் அவ்வேந்தர் பூசல் விளைப்பர். மகள் மறுத்து நிற்கும் தந்தையொருவனைக் கண்ட ஆசிரியர் பரணர்,

" நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து
கொடுப்பினும்
புரைய ரல்லோர் வரையலள் இவள்எனத்
தந்தையும் கொடாஅன் " (புறம். 343)

என்று கூறுகின்றார். அவளோடு உடன்பிறந்தோர் மறநிலையைக் கண்ட அடைநெடுங் கல்வியார் என்னும் சான்றோர்,

"மையல் நோக்கின் தையலை நயந்தோர்
அளியர் தாமே; இவள் தன்னை மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரல்அல் லோர்க்குத் தரலோ இல்லெனக்
கழிப்பிணிப் பலகையர் கதுவாய் வாளர்."
(புறம். 345)

என்று இயம்புகின்றார். இக்கூற்றுக்களால், இத் தமிழ் வீரர், தம் குடியின் நலம் ஆண்மை முதலிய நலத்தால் குறைபாடுடையவர் கலப்பால் மழுங்க விடாது நிற்கும் மறமாண்பு வெளிப்படுகின்றது.

மறக்குடியிற் பிறந்த வீரனொருவன், தன்னோடு மற நிலையால் ஒத்த குடியில் பிறந்து நலஞ்சிறந்து நிற்கும் ஒருத்தியை மணக்க விரும்புவன். அவள் பெற்றோர் யாதானுமொரு காரணம்பற்றி மகட்கொடை மறுப்பரேல், தனது போராண்மை காட்டி மணந்து கொள்வதுண்டு. மறக்குடியிற் பிறந்த மாண்புடைய காளை ஒருவன் மகட்கொடை மறுக்கப்பட்டானாக, பெருஞ்சினம் கொண்டு, மறத்தீ கிளர்ந்தெழ,

"விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியற்
சுணங்கணி (ஆகத்து) அவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுத லொன்றோ,
ஆரமர் உழக்கிய மறங்கிளர் முன்பின்
நீள்இலை எஃக மறுத்த உடம்பொடு
வாரா உலகம் புகுதல் ஒன்றெனப்
படைதொட் டனனே குருசில்" (புறம். 341)

என ஆசிரியர் பரணர் கூறுகின்றார்.

**மானம்**

இவ்வாறு தம் குடிக்கும் தமக்கும் பழி வாரா வண்ணம் நல்லறமும் போர் மறமும் கொண்டு நிலவும் தமிழ் வீரர் 'மானம் கெடவருமிடத்து உயிர் வாழ ஒருப்படார். சேரமான் கணைக்கால் இரும்பொறை யென்பான் சோழன்செங்கணனுடன் பொருது அவன்பாற் சிறைப்பட்டிருக்கையில், சிறைக்கோட்டக் காவலரைத் தண்ணீர் கொணரப் பணித்தான். அவர் அவனை இகழ்ந்து, சிறிது தாழ்த்துக் கொணர்ந்தனர். அம்மானம் பொறாது

"கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத் தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே" (புறம். 74)

என்று கூறி உயிர் விட்டுவிடுகின்றான். சேரமான் பெருஞ் சேரலாதன் கரிகாற் பெருவளத்தானோடு வெண்ணி யென்னுமிடத்தே பொருதபோது, கரிகாலன் எறிந்தவேல் அவன் மார்பிற்பட்டு முதுகு வழியே ஊடுருவிச் சென்று, முதுகிடத்தே புண் செய்ததாக, அது புறத்தே எறிந்த புறப்புண் அன்றாகவும், அதற்கே அவன் பெருநாணம்கொண்டு, வடக்கிருந்து உயிர்விடுகின்றான். இதனைக் கழாத்தலையார் என்னும் சான்றோர்,

"தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த.........
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன்" (புறம். 65)

என்று பரிந்து வருந்துகின்றார்; வெண்ணிக்குயத்தியார் என்பாரும் இதனை வியந்துமொழிகின்றார்.

### புகழ்

இனி, இவ்வீரர் "புகழெனின் உயிரும் கொடுக்குவர்" ஆதலின், தாம் பகையரசரை வென்று அவர் நாட்டிற் பெறும் பொருள்களைத் தம்மை நயந்து வருபவர்க்கு ஈந்து பெரும்புகழ் விளைத்துக் கொள்கின்றனர். "விழுநிதி பெறினும், பழிநமக்கு எழுக என்னாய் விழுநிதி, ஈத லுள்ளமொடு இசைவேட்குவையே" (மதுரை 203-5) என்று தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனை மாங்குடி மருதனார் பாராட்டுகின்றார். "கொடை மடம் படுதல் அல்லது, படை மடம் படான்பிறர் படைமயக் குறினே" (புறம். 142) எனப் பரணர் வையாவிக் கோப்பெரும் பேகனைப் புகழ்ந்து கூறுகின்றார்.

### தோற்றப் பொலிவு

இவ் வீரரது மறங்கெழுமிய தோற்றம் மிக்க இறும்பூது பயப்பதாகும். அவருடைய தாள்கள் யானையின் பிடரிக்கண் இருந்து அவற்றைக் கடவும் குறிப்பு வாய்ந்து வீரக்கழல் பூண்டு விளங்குகின்றன. வில்லும் வேலும் தோலும் ஏந்தும் அவர்தம் கைகள் பெருமையும் வன்மையும் வாய்ந்து முழங்தாள் அளவும் நீண்டிருக்கின்றன. உயர்ந்த தோளும் அகன்ற மார்பும் காண்பார் கண்கட்கு இனிய வனப்பு விருந்து செய்வனவாம். அவரது கவிழ்ந்த நோக்கும், கரிய அணலும் (மீசையும்) வன்மைக்கு வடிவமிது என்னுமாறு விளங்கும். தலையில் குடுமியை மணிக்கயிற்றாற் கட்டிக் கண்ணி சூடி இனிய காட்சி வழங்குகின்றனர். மார்பில் தத்தமக்குரிய அடையாள மாலையணிந்து, முகத்திலும் மார்பிலும்

பட்ட விழுப்புண் வடுக்கள் புகழ்க்குறியாக விளங்கப் பெருமித நடைகொண்டு பிறங்குகின்றனர். போர்ப்பறை கறங்குவதை விரும்பிக் கேட்கும் அவருடைய காதுகளில் உயரிய பொற்குழைகள் பொலிகின்றன.

இவ்வீரர் போர்க்களத்தே புகுமிடத்து இவர் கண்முன் நிற்கும் பகைவீரர் இவர்க்குத் தமராயினும் தமராகத் தோன்றுவதிலர். "கூற்றுவினையாடவர், தமர்பிறர் அறியா அமர்மயங்கு அழுவம்" (புறம்.294) என ஒரு சான்றோர் அவ்வீரர் குறிப்பைப் போர்க்களத்தின் மேலேற்றிக் கூறுகின்றார். அவர் அறிவன வெல்லாம் தம் பெயரும் தம் தலைவன் பெயரும் நிலைபெறச் செய்யும் திறமே யாகும். அவர் மடித்த வாயினின்றும், "இறையும் பெயரும் தோற்றி நுமருள், நாள்முறை தபுத்தீர் வம்மின் ஈங்கு" என்பது போன்ற சொற்களே வருகின்றன. ஒருகால், இவ்வீரரைப் பின்னே நிறுத்தி, அரசன் தானே போருக்கு முற்படுவானாயின், இவர் மனம் கொதித்து, "நன்றும், இன்னான் மன்ற வேந்தே; இனியே, நேரார் ஆரெயில் முற்றி, வாய்மடித் துரறி நீ முந்தென் னானே" (புறம். 298) என்று நொந்து கொள்கின்றனர்.

## போர்த்திறம்

சிற்றரசர் இருவர் பொருந்திறத்தை ஆசிரியர் கோவூர்கிழார் மிக்க நயந்தோன்றக் கூறுகின்றார். இவ்விருவேந்தரும் நல்ல வீரராவர். ஒருவன் மற்றவன் ஊர்ந்துவந்த யானையின் முகத்தில் தன் வேலைச் செலுத்தி அழுத்துகின்றான். அவ்யானைமேல் இருப்

போன் தன் வேலை அவன் மார்பிற் செலுத்திப் பாய்ச்சுகின்றான். அவனோ அதனைப் பிடுங்கி அவன் மேற் செலுத்த, அவன் களிறுகளெல்லாம் அஞ்சிப் புறங்கொடுத்து ஓடுகின்றன. அவற்றைக் கண்டு, பிடியானைகள் புலம்புகின்றன. இக்கருத்து, நம் கோவூர் கிழார் பாடிய,

"சிறார் மன்னன் சிறியிலை எஃகம்
வேந்தூர் யானை ஏந்துமுகத் ததுவே;
வேந்துடன் றெறிந்த வேலே என்னை
சாந்தா ரகலம் உளங்கழிந் தன்றே;
உளங்கழி சுடர்ப்படை ஏந்திநம் பெருவிறல்
ஓச்சினன் துறந்த காலை, மற்றிவன்
புன்தலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத்தனவே"
(புறம். 308)

என்ற பாட்டில் அழகுறக் கூறப்படுகிறது. ஒரு வீரன் தன் கையிலிருந்த வேலைத் தன்னை எதிர்த்து வந்த களிற்றின்மேற் செலுத்தி அதனைப் போக்கு முகத்தால் வேலையும் போக்கி வருகையில், வேறு வேலின்மையால், சிறிது மனம் அசைகின்றான். அது போது அவன் மார்பிற் பகைவர் விட்ட வேலொன்று தைத்துக் கிடக்கின்றது. அதனைக் கண்டதும் பெரு மகிழ்ச்சியுற்று அதனைப் பறித்துக்கொண்டு அவ் வேலாலுண்டான புண்ணை மதியாது போருடற்று கின்றான். இச் செய்தியை, "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" எனத் திருவள்ளுவனார் கூறுகின்றனர். உலோச்சனார் என்ற சான்றோர்,

" நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்ரெடு வேல்துரந் தினியே
தன்னும் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் ஊக்கி மெய்க்கொண் டனனே"

(புறம். 274)

என்று உரைக்கின்ருர்.

ஒரு வீரனுடைய அண்ணனைப் பகைவீரன் ஒருவன் கொன்றுவிடுகின்ருன். அதனை மறுநாள் அறிந்த அவன், தன் குதிரைப்பாகனை நோக்கி, "வண்பரிப் புரவி, பண்ணற்கு விரைதி நீயே நெருநை, எம்முன் தப்பியோன் தம்பியொடு ஓராங்கு, நாளைச் செய்குவன் அமர் எனக் கூறி," அக் கூற்றுச் செயலில் மெய்யாகா முன்பு உண்பதுஞ் செய்யேன் என்று வஞ்சினம் கூறுகின்ருன். அச்செய்தி பகையரசற்கு எட்டுகின்றது.

"...........அது கேட்டு,
வலம்படு முரசின் வெல்போர் வேந்தன்
இலங்கிரும் பாசறை நடுங்கின்று
இரண்டா காதவன் கூறிய தெனவே."

(புறம். 304)

என்று அரிசில் கிழார் என்னும் சான்ருேர் கூறுகின்ருர். இதன்கண், தமிழ் வீரருடைய போர்முறை யொன்று புலனுகிறது.

அஃது, அண்ணனெடு பொருது அவனை மாய்த்தோனெடு, மாய்ந்தோன் தம்பி போர் செய்யாது,

மாய்த்தோன் தம்பியொடு பொருவது என்னும் ஒரு முறையாகும். வலியும் வயதும் படையும் ஒத்தாருடன் ஒத்தார் பொருவது முறையாகும். இதுவேயன்றி, முன்சென்று போர்செய்தற் கண்ணும் இவ்வீரர்க்குள் முறையொன்றுண்டு. தானைத் தலைவரோ வேந்தனோ நின்று முன்பொரற்கு உரியார் இவர், பின்பொரற்கு உரியார் இவர் என்று முறை வகுக்கின்றனர். அவ்வவ் வீரரும் அவ்வாறே போர் செய்கின்றனர். போர்த்தொழில் மிக்கு நிற்ப, வீரர்பாற் போர்வெறி கைகடந்து போமிடத்து இம் முறை பிறழ்வது முண்டு. "வேண்டுவ னுயின், என் முறை வருக என்னுன் கம்மென, எழுதரு பெரும் படை விலக்கி, ஆண்டு நிற்கும் ஆண்டகையன்னே" (புறம். 292) என்று நன்னகனர் என்பார் கூறுகின்றார்.

ஒரு வீரன் தனித்து நின்று போர்செய்யுங்கால் அவனது கைவாள் வளைந்து போகிறது. அவன் அருகே வீழ்ந்து கிடக்கும் யானையின் கோடுகட்கிடையே அதனைச் செறித்துத் திருத்திக் கொள்கிறான். அதுபோது அவன்செய்கை கண்டு அஞ்சிய பகைவீரன் ஒருவன் முதுகுகாட்டியோட இவன் அவனை இகழ்ந்து நகைக்கின்றான். இதைக்கண்ட ஓரம்போகியார் என்னும் சான்றோர்

"நூலரி மாலை சூடிக் காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமம் தாங்கி முன்னின் றெறிந்த
ஒருகை யிரும்பிணத் தெயிறுமிறை யாகத்

திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புறம் நகுமே"
(புறம். 284)

என்று தெரிவிக்கின்றார்.

## போர் நிகழ்ச்சி முறைகள்

இவ்வீரர் போர்க்கு எழுமுன், இவர்களை அரசர் திரட்டும் திறம் மிக்க நயமாக உளது. போர் தொடங்கவேண்டியதற்குரிய நிகழ்ச்சி எய்தின், அரசர் போர்ப்பறை முழக்குகின்றனர். அதுகேட்டதும் வீரர் அனைவரும் போர்க்கு வேண்டுவனவற்றைச் செப்பம் செய்து கொள்கின்றனர். சின்னாட்குப்பின் பூக்கோள் தண்ணுமை முழக்கப்படுகிறது. அது கேட்கும் இவ்வீரர் அரசன்பாலோ, தானைத் தலைவர்பாலோ சென்று தமக்குரிய அடையாளப் பூக்களைப் பெறுகின்றனர். வெட்சி, கரந்தை, தும்பை முதலாகச் சொல்லப்படும் பூக்கள், செய்யப்படும் போர்த்தொழிலின் பொதுவகையை உணர்த்துவனவாகும். பகை நாட்டு ஆனிரைகளைக் கவர்வது குறித்த வழி வெட்சியும், பகைவர் கவர்ந்த நிரைகளை மீட்பது கருதியவழிக் கரந்தையும், நேர் நேர்நின்று பொருவது கருதியவழித் தும்பையும், வெற்றி யெய்தியவழி வாகையும் இவ்வாறே பிறவும் பூக்கோள் வகையாக வீரர்க்கு வழங்கப்பெறும். பூக்கோள் நிகழ்தற்கும் பண்டைத் தமிழரசர் நாளும் கோளும் ஆராய்ந்தே செய்கிற்பர். நாளும் கோளும் வாய்ப்ப, வீரர் திரள் போதிய அளவில் சேராமையாலோ, வேறு காரணத்தாலோ, படையெழுதற்குப் பாணித்தவழி. அந்நாளில் கொற்றக் கொடை,

வாள் முதலியவற்றை முன்னே செலுத்துவர். இவை குடைநாட்கோள், வாள்நாட்கோள் எனப்படுகின்றன. போர்ப்பறை கேட்டுப் பூக்கோள் தண்ணுமை யெழுங்காறும் எழாதிருக்கும் வீரர் பிறரால் இகழப் படுவர்; அவர்க்கு அது மாசாகும்.

## அணி

போர்க்குச் செல்லுமிடத்து வீரர்தலைவரும் வேந்தரும் பகையரசரை வென்று அவர்தம் முடிப் பொன்னாற் செய்த கழலும் மார்பணியும் அணிந்து செல்கிற்பர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பானைக் கண்ட ஆலூர் மூலங் கிழார் என்ற சான்றோர், அவன் அணிந்திருந்த வீரக் கழலை வியந்து,

" நீயே, பிறர் ஓம்புறு மறமன் எயில்
ஓம்பாது கடந்தட்டவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலியக் கழல்தைஇய
வல்லாளனை வயவேந்தே." (புறம். 40)

என்று பாராட்டுகின்றார். இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைப் பாடிய ஆசிரியர் குமட்டூர்க்கண்ணனார், எழுவர்அரசர் முடிப்பொன்னாற்செய்த ஆர மொன்று அவன்மார்பில் விளங்குவதைப் பாராட்டி

" எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து,
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை."
(பதிற். 14)

என்று கூறுகின்றார். போர்க்குச்செல்லுமிடத்தே யன்றி, அரசர் திருவோலக்கம் இருக்குமிடத்தும் இவற்றை அணிந்து கொள்வராதலின், சான்றோரால் இவ்வாறு பாடப்படுகின்றன.

### நிமித்தம்

போர்க்குச் செல்லுங்கால் அரசர் புள்நிமித்தம் முதலிய நோக்குதலும் செய்வர். விரிச்சி கேட்டலும் உண்டு. புள்நிமித்தம் நன்றாகாத வழி, தானை வீரரைப் போர்மேற் செல்லவிடாது சிறிது தாழ்ப்பர். போர்க்கெழுந்த உள்ளம், அது தாழ்த்தலால் மடிந்து அலம்புதலால், வீரர் தம் வீரமிகுதியால் கொதித்துத் தம்முள் வருந்துவர். சோழன் நலங்கிள்ளியின் தானைநிலையைக் கூறுவாராய் ஆசிரியர் கோவூர்கிழார், "புட்பகைக்கு ஏவா னாகலின் சாவேம் யாம் என, நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப" (புறம். 68) என்று கூறுவது காண்க. போர்நிலை மிக்கவிடத்து, இப்புள்நிமித்தம் விரிச்சி பார்த்தல் முதலியவற்றைப் பொருள் செய்வது இல்லை. அக்காலை இவ்வீரர், "நாளும் புள்ளும் கேளா ஊக்கமொடு, எங்கோன் ஏயினன் ஆகலின்......விரிச்சி யோர்த்தல் வேண்டா," (தகடூர் யாத்) என மகிழ்ச்சி மிகுகின்றனர்.

### வேல் வாள்

இனி, இவ்வீரர் ஏந்திச்செல்லும் வேலின் சிறப்பு விரியூர் நக்கனார் என்னும் சான்றோரால் விளக்கிக் கூறப்படுகிறது. போரில்லாக்காலத்தே வீரர் தம் வேற்படையைத் தம் வீட்டின் இறப்

பினிற் செருகிவைத்திருப்பர். போரில் அதனைக் கொண்டு பெருங்களிற்றியானைகளைச் செகுத்தற்கே அவர் பெரிதும் விரும்புவர். வேந்தூர் யானைக் கல்லது, ஏந்துவன் போலான்றன் இலங்கிலை வேலே (புறம். 301) என்று சான்றோர் கூறுதல் காண்க. போர்க்குச் செல்லுமுன்னும், சென்று வென்றியொடு திரும்பிய பின்னும் இவ்வேலை நீர்த்துறைகட்குப் பல்வாச்சியம் முழங்கக் கொண்டு சென்று நீராட்டி, மாலை சூட்டித் தெருக்களிடையே சிறப்புச் செய்வர். வாட்படையும் இவ்வாறு செய்யப்படுவதுண்டு. இச் செயல் வாண்மங்கலம் எனப்படும். இவற்றையெல்லாம் தொகுத்து, விரியூர் நக்கனார்,

"மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே ;
இரும்புறம் நீறு மாடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினும் கிடக்கும் ;
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினும் தெருவினும் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினும் செல்லுமாங்(கு)
இருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினும் செலவா னதே."

(புறம். 332)

என்று இயம்புகின்றார். இதன்கண் மங்கல மகளிரொடு மாலை சூட்டி என்ற வழக்கு இக்காலத்தும் சிலர் வாள்வைத்து மணவினை செய்யும் முறைக்கு ஏற்றதாய் நிற்பதைக் காணலாம்.

### மீட்சி

போர்க்குச் சென்ற வீரர் வென்றியொடு திரும்புங்கால் ஊர்களிலும் அவரவர் மனைகளிலும் பெருஞ் சிறப்புக்கள் நிகழ்கின்றன. வீரர் புண்பட்ட மார்பும் முகமும் பொலிவு மிக்கு விளங்க, யானை யெறிந்த தம் வேலை ஆட்டிக் கொண்டு பேராரவாரமும் மகிழ்ச்சியும் நிலவ வருகின்றனர். இவ்வாறு ஒரு வீரன் குதிரையூர்ந்து வரும் காட்சியை எருமை வெளியனார் என்னும் சான்றோர் நம் மனக்கண் முன் காட்டுகின்றனர்.

"நிலம்பிறக் கிடுவது போற்குளம்பு கடையூஉ
உள்ளம் ஒழிக்கும் கொட்பின் மான்மேல்
எள்ளுநர்ச் செகுக்கும் காளை, கூர்த்த
வெந்திறல் எஃகம் நெஞ்சுவடு விளைப்ப
ஆட்டிக் காணிய வருமே" (புறம். 303)

என்பது அவர் பாடிய பாட்டாகும். இவ்வாறே பிறர்க்குத் துணை செய்யச் செல்லும்போதும் செல்வர்.

போர் முற்றி மீண்டுவரும் வீரருடைய மனைமகளிர், அவர் வருகையால் பேருவகை பூத்துத் தம் மனையை நன்கு புனைகின்றனர். அவ்வீரர் பட்ட விழுப்புண்களை ஆற்றும்பொருட்டு அவர் செய்வன மிக்க நயமுடையவாகும். வீட்டின் இறப்பில் இரவந் தழையும் வேப்பிலையும் செருகுகின்றனர்; யாழ் முதலிய இயங்கள் இயம்பப்படுகின்றன. கிழிந்த புண்களைத் தைத்து மையிட்டு வெண் சிறு கடுகு தூவுகின்றனர். புண்ணின் நோய் தெரியாத

படி சிலர் ஆம்பற் குழலூத, சிலர் இசைமணி யெறிய, சிலர் காஞ்சிப்பண் பாடுகின்றனர். இச் செயற்கு அயல்மனை மகளிரும் துணை செய்கின்றனர். மனையிடத்தே நறும்புகை போடுகின்றனர். இச் செயலை அரிசில் கிழார் என்னும் சான்றோர்

" தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியம் கறங்க
கைபயப் பெயர்த்து மையிழுது இழுகி,
ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி,
இசைமணி எறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே "
(புறம். 281)

எனத் தமிழ்மகள் ஒருத்தி செய்யும் செயல்மேல் வைத்துச் செப்புகின்றார். வெள்ளைமாளர் என்னும் சான்றோர், தன் மகனொழிய ஏனை வீரர் பலரும் திரும்பியது கண்டு, ஒரு தாய் கூறும் கூற்றினை,

" வேம்புசினை யொடிப்பவும் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும் கல்லென் றனவே "
(புறம். 296)

என்று இவ்வாறு பாடுதலும் காண்க. " வினை கலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து, மாலை யயர்கம் விருந்து " எனத் திருவள்ளுவனார் கூறுத லால், விருந்துசெய்தலும் உண்டென்பது தெரிகின்

றது. வேந்தற்குத் துணையாகப் போர்க்குச் சென்ற வீரனொருவன் பாசறைக்கண் இருக்கையில் மேற்கொண்ட போர் முடிவுநிலை யெய்துகின்றது. அவன், தான் திரும்பிச் சென்றவழித் தன் மனைவி விருந்தயர்தலை நினைக்கின்றான். அப்போது அவன் தன் நெஞ்சை நோக்கி,

"பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்து நனிபெறுதலும் உரியள் மாதோ,
இருண்டுதோன்று விசும்பின் உயர்நிலை யுலகத்து
அருந்ததி யனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே"

(ஐங். 442)

என்று மொழிந்து இன்புறுகின்றான்.

## துறக்கம்

இனி, தன் கணவன் போர்க்களத்துப் பட்ட வழி, மகளிர் சிலர் பிரிவாற்றாது உயிர் விடுவதும், சிலர் கைம்மை நோன்பு நோற்றிருத்தலும் உண்டு. பூதப்பாண்டியன் இறந்தானாக, அவன்மனைவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்ந்து உயிர்விடத் துணிகின்றாள். அவளும் இறப்பின் நாடு அரசின்றி அலமருமென்று நினைத்துச் சில சான்றோர் அவளைத் தீப்பாய வேண்டா என விலக்குகின்றனர். அவர்களைச் சினந்து கைம்மை நோன்பையும் இகழ்ந்து,

"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல ; எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற

வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே."
(புறம். 246)

என்று கூறுகின்றாள்.

புண்பட்டுத் தன் வீடு நோக்கிப் போந்த வென்றி வீரன் ஒருவன், அப்புண்ணால் உயிர்விடுகின்றான். அதற்குச் சிறிதுமுன் தீக்குறிகள் தோன்றுகின்றன. அவற்றைக் காணும் அவன் மனைவி மனம் மாழ்கி,

"என்னை மார்பிற் புண்ணும் வெய்ய;
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்;
நெடுநகர் வரைப்பில் விளக்குமீ நில்லா;
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்;
அஞ்சுவரு குராஅற் குரலும் தூற்றும்;
நென்னீர் எறிந்து விரிச்சி யோர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா."
(புறம். 280)

என்று தான் காண்பவற்றை நிரலே கூறுகின்றாள். அவ்வீரனுக்கு உயிர் மெல்ல நீங்குகிறது. அவனால் ஆதரிக்கப்பட்ட பாணனையும் விறலியையும் நோக்கி,

"துடிய பாண, பாடுவல் விறலி,
என்னா குவிர்கொல்? அளியிர்; நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ அரிதே."

என்று இனைந்துரைக்கின்றாள். தான் கைம்பெண் ணாக இருக்கவேண்டிய நிலைமை நினைவுக்கு வருகின் றது. அதன் துன்பமும் அவட்குப் புலனாகின்றது. அவள் அதனை வெறுத்து உயிர் விடுதலைத் துணிந்து,

"..................யானும்
மன்னுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்,
தொன்றுதாம் உடுத்த வம்பகைத் தெரியல்
சிறுவெள் ளாம்பல் அல்லி யுண்ணும்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்தல் அதனினும் அரிதே."
(புறம். 280)

என்று வருந்திக் கூறுகின்றாள்.

## நடுகல்

இவ்வண்ணம் அரிய போர் செய்து பட்ட வீரர்க்கு நடுகல் நாட்டி அதன் கண் அவ்வீரனுடைய பெயரும் பீடும் எழுதி, நீராட்டி, பீலிசூட்டி, ஏனை வீரரும் மகளிரும் வழிபாடாற்றுவது மரபு. இதனை,

"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
இனிநட் டனரே கல்லும்." (புறம். 264)

எனவும்,

"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்." (அகம். 67)

எனவும் சான்றோர் கூறுகின்றனர். மகளிர் நடுகல்லைப் பரவுதலை,

"அரிதுன் கூவல் அங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒண்ணுத லரிவை
நடுகற் றொழுது பரவும்." (புறம். 306)

என்று அள்ளூர் நன்முல்லையார் உரைக்கின்றார். வீரர் வாழும் சிற்றூரைக் கண்ட மாங்குடி கிழார் என்னும் சான்றோர், இவ்வூரில்,

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே."
(புறம். 335)

என்று வியந்து கூறுகின்றார். இவற்றால், இத்தமிழ் வீரர் தமக்குமுன்னே போரில் வென்றியுற விழுப் புண்பட்டு வீழ்ந்த வீரரைக் கடவுளாகவே கருதி வழிபடும் பூட்கையர் என்பதை நன்கு தெளிகின்றோம். இது 'தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்' என்னுங் குறள் போன்றதாய், வீரர் சிறப்புக் கூறுவதாகும்.

அரும் போர் செய்து வென்றியொடு வீரர் போர்க்களத்தே வீழ்வராயின், ஏனைவீரரும், தானைத் தலைவரும் அரசரும் ஒருங்குகூடி அவற்குக் கடனாற்றிச் சிறப்புச் செய்வர். கழாத் தலையார் என்ற சான்றோர், இத்தகைய வீரன் இறத்து அரசரும் பிறரும் சிறப்புச் செய்வதைக் கண்டு, அவன் தாய்க்குத் தெரிவிப்பாராய்,

"பன்மீன் இமைக்கும் மாக விசும்பின்
இரங்கு முரசின் இனஞ்சால் யானை
நிலந்தவ உருட்டிய நேமி யோரும்
சமங்கண் கூடித் தாம்வேட் பவ்வே." (புறம். 270)

என்று கையற்று ஓதுகின்றார்.

### விருந்து

போர் முடிவில் வென்ற அரசர் தம் தானை வீரரையும் தானைத் தலைவரையும் உடனிருத்தித் தாமும் உடனிருந்து பெருவிருந்துண்டு களித்து மகிழ்வர். அக்காலத்தே, வென்றி வீரருடைய குடிப் பிறப்பும், வரலாறும் எடுத்தோதி வீர விருந்தளிப்பதும் தமிழ் வழக்கமாகும். இத்தகைய வென்றி விருந்தொன்றிற்கு ஔவையார் சென்றிருக்கின்றார். வெற்றி வீரர் குடிநிலையுரைக்கும் சிறப்பு அவர்க்கு அளிக்கப் பெறுகின்றது. அப்போது அவர், வீரர் ஒவ்வொருவருடைய குடிநிலையும் உரைத்து அவரவர்க்கு வீர விருந்து வழங்குமாறு சொல்லுகின்றார்.

"இவற்கீத்து உண்மதி கள்ளே, சினப்போர்
இனக்களிற்று யானை இயல்தேர்க் குருசில்!
நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை
எடுத்தெறி ஞாட்பின் இமையான், தச்சன்
அடுத்தெறி குறட்டின் நின்றுமாய்ந்தனனே.
மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்
உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்து வருவேலே."

(புறம். 290)

எனவரும் இஃது அவர் கூற்றாகும்.

### ஒழுங்கு

இவ்வீரர் தம் தலைவர்பால் மாறா அன்பும் இட்ட பணியாற்றும் கட்டுறுதியும் உடையராக இருக்கின்றனர். போரிடத்தே சாதல் நேர்வதாயினும், தம்

மைப் புரக்குமவர் கண்டு இரங்கிக் கண்ணீர் சொரியுமாறு சாகும் சாக்காட்டையே பெரிதும் விரும்புவர். திருவள்ளுவனர், "புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு, இரந்துகோட் டக்க துடைத்து" என்று மொழிகின்ருர். தலைவர், தம் படையை யாளுமிடத்து, படையிடத்தே சிறிது வழுநிகழக் கண்டு முனிந்தாராயின், அம்முனிவு படையொழுங்கு குறித்த தென்றும், அவ்வொழுங்கே வெற்றி பெறுதற்கு உற்ற வழியாம் என்றும் தேரும் நல்லறிவு வாய்ந்தவர் இத்தமிழ் வீரர்; தலைவற்கோ, தமக்கோ அரும்போர்வரின், அதற்கு அஞ்சாது உயிர் கொடுக்கும் உள்ளமுடையவராவர். ஆதலால், இவ்வீரர் அரசன் முனிந்த வழியும், வீரச்சீர் குன்றுவது இல்லை என்பார். திருவள்ளுவனர், "உறின்உயி ரஞ்சா மறவர் இறைவன், செறினும்சீர் குன்றல் இலர்" என்று கூறுகின்ருர்.

இவ்வாறு, வீரம் செறிந்த தமிழ்நாட்டு வீரர், வீரமே நிறைந்த தாய்தந்தையர்க்கு வீரமக்களாய்ப் பிறந்து, தாயர் தரும் வீரப்பாலுண்டு, வீரமொழி பயின்று, வீரமும் மெய்யுணர்வும் சிறந்து, வீரவாழ்வு மிளிர்ந்து, மெய்ப்புகழும் பெற்று மேம்பாடுற்று விளங்கிய செய்தி, இதுகாறும் காட்டப்பெற்றது. வீரச் சால்பு பெற்றுயர்ந்திருந்ததனல், இச்சான்ருேர் பல ஆண்டுகட்கு முன்பே மேனுட்டவரோடும் பிற நாட்டவரோடும் கடலில் கலஞ் செலுத்திப் பொருளீட்டிப் புகழ்வாழ்வு நடாத்தினர். பிற்காலத்தும் கப்பற்படை கொண்டு சென்று ஈழம், கடாரம், சாவகம் முதலிய நாடுகளை யடைந்து, தமது தமிழ்ப்

பெருமையை நிலை நாட்டினர். அவ்வீர நலம் இன்றும் இல்லாமல் இல்லை. தமிழ் இளைஞர்கள் தம்பாற் கலந்திருக்கும் அவ்வீர நலத்தை யுணர்ந்து கடைப் பிடித்துத் தரணி புகழும் தமிழ் வீரர்களாகத் திகழ் வார்களாக.

45292

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
2 ? DEC 1984
தஞ்சாவூர்

45292

25 DEC 1986

45292

Printed by Shakti Press L. L., Karaikudi. (S. India)